
கோவா சிறப்பிதழ்

KALKI 4·8·85 ரூ.1·50



கல்கி



இந்த இதழில்...



6

"கோவாவுக்கு வாருங்கள்!"
— அமைச்சரின் அழைப்பு.

பூலோக சொர்க்கம்
கோவாவைச் சுற்றி...
— கட்டுரை.

22





சின்னச் சின்னச் செய்திகள்
கோவா.

40



58

நிம்மதி தேடும்
நிர்வாண ஹிப்பிகள்!



54

"கோவாவைக் கெடுப்பது
டூரிஸ்டுகளே!"
— பத்திரிகை ஆசிரியரின் கோபம்.

மற்றும் பல புதிய அம்சங்கள்

அதிகாரிகள் நடத்திய அக்கிரமங்கள்

அதிகாரபூர்வமில்லாத கட்டிடங்களை இடிக்கும் வேலை எல்லா இடங்களிலும் நடக்கிறது. ஆனால், முதலில் 'இடிக்க வேண்டும்' என்று சொல்லிவிட்டு, இடித்தபின், 'இடித்திருக்க வேண்டிய அவசியமில்லை!' என்று சொன்ன கூத்து திருநின்ற ஊரில் நடந்திருக்கிறது. அங்கு நேரில் சென்று வந்த நமது நிருபர் அந்த அக்கிரமங்களை எழுதுகிறார்.....

சென்னையிலிருந்து திருவள்ளூர் செல்லும் வழியில் 32 கி.மீ. தூரத்தில் இருக்கிறது திருநின்றவூர். சென்னை மாநகரின் சாயல் படாமல், கிராம வாசனை அடிக்கும் ஊர். ஊரின் பிரதான பகுதி எம்.டி.ஹெச். ரோடு என்று சுருக்கமாக அழைக்கப்படும் மெட்ராஸ்—திருவள்ளூர் ஹைரோடு. இங்கேதான் அதிகாரபூர்வமில்லாத கட்டடங்களை இடிப்பதாகச் சொல்லிக் கொண்டு, இடிக்கப்பட வேண்டிய அவசியமில்லாத கட்டடங்களையும் இடித்த அக்கிரமம் நடந்திருக்கிறது.

* காந்தி சிலையிலும் பாதி இடிக்கப்பட வேண்டுமென ஹைவேஸ்காரர்கள் போட்டிருக்கும் அடையாளம்!



நாங்கள் சென்று பார்த்த போது மிக நீண்ட அந்த ரோடு ஏதோ சண்டை நடந்து முடிந்த இடம் போலக் காணப்பட்டது. ரோடின் இரண்டு பக்கங்களிலும் முழுவதுமாகவும், அரைகுறையாகவும் இடிக்கப்பட்ட வீடுகள்; கடைகள்.


நாங்கள் போய் அறிமுகம் செய்து கொண்ட சில நிமிடங்களிலேயே இளைஞர்களும், முதியவர்களுமாக எங்களைச் சூழ்ந்து கொண்டு விட்டனர்.

''எங்க ஊட்டுக்கு வாங்க... இந்த ஹைவேஸ் காரங்க பண்ணியிருக்கிற அநியாயத்தைப் பாருங்க. உங்க பேப்பர்ல எழுதுங்க'' என்று ஒருத்தர் விடாமல் அத்தனை பேரும் தங்கள் வீடுகளுக்கு அழைத்தனர்.

நாங்கள் ''கவலைப்படாதீர்கள். எல்லார் வீட்டுக்கும் வந்து பார்க்கிறோம்'' என்று சமாதானப்படுத்திவிட்டு அந்தப் பகுதியை அவசரவுண்டு அடித்துச் சுற்றிப் பார்த்தோம். ஒவ்வொரு வீட்டாருடனும் பேசினோம். பரிதாபகரமான கதைகளைக் கேட்டோம்.

தனராஜ் என்கிற இளைஞர், பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ. முடித்தவர். அவர் கொஞ்சம் ஆவேசமாய்ப் பேசினார்:

''ஜூன் 18-ம் தேதி சர்வேயர், டிவிஷனல் இன்ஜினியர், மேஸ்திரி ஒருத்தர் எல்லாருமா காலைல பத்தரை, பதினொரு மணிவாக்கில் இங்கே வந்தாங்க. ஏதோ கையில பேப்பர் வெச்சுப் பார்த்துக்கிட்டே, ஹைவேஸ் டிபார்ட்மெண்ட்டுக்கு இடம் சொந்தம்னு சொல்லிட்டு, எல்லார் வீட்டு சுவத்திலேயும் மார்க் பண்ணிட்டுப் போய்க்கிட்டே இருந்தாங்க. நெறைய பேர் வீட்டுல, பாதி வீட்டுல மார்க் பண்ணினாங்க. 'இந்தோட இடிச்சுத்தள்ளிடணும்; இது கவர்ன்மெண்ட் உத்தரவு'ன்னு சொன்னாங்க...'' என்று சொன்ன தனராஜ் எதிரே உள்ள ஒரு வீட்டைக்



* செட்டியார் வீடு: இடித்த பிறகு இடித்திருக்க வேண்டியதில்லை என்கிறார்கள்!

காட்டினார்.

பார்த்தபோது அங்கே விதவைக் கோலத்தில் குட்டிச் சுவர்கள்!

அந்த வீட்டுக்காரங்க, 1887—லே இருந்து இதே ஊர்ல, இதே இடத்துல தலைமுறை தலைமுறையா இருக்காங்க. இந்த ஹைவேஸ் காரங்க, எதையுமே கேக்காம இடிச்சுட்டாங்க. இந்த அக்கிரமத்தை யார்கிட்ட போய்ச் சொல்றது?'' என்று எங்களையே கேட்டார் தனராஜ்.

''இந்த வீடு இருக்கிற இடமெல்லாம் உங்களுக்குத்தான் சொந்தம்னு அந்த அதிகாரிங்ககிட்ட நீங்க சொல்லியிருக்கலாமே! உங்ககிட்ட இருக்கும் 'பட்டா'வைக் காட்டியிருக்கலாமே!'' என்று நாங்கள் சொன்னது தான் தாமதம்! உடனே ஏழெட்டு பேர் எங்களைப் பார்த்து ஒரே குரலில் பேச ஆரம்பித்து விட்டார்கள்...

''நாங்க முதலிலிருந்தே இதைச் சொல்லிக்கிட்டுத்தாங்க இருந்தோம். பட்டாவைக் கூடக் காண்பிச்சோம்! ஆனா, அதெல்லாம் அந்த ஹைவேஸ்காரங்க காதுல ஏறவே இல்லே. 'எங்களுக்கு அதைப் பத்தியெல்லாம் ஒண்ணும் தெரியாது; அதைப் பத்திக் கவலையும் இல்லே. அதிகாரபூர்வமில்லாத கட்டிடங்களை இடிக்க அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கு! நீங்க போயி யாரை வேணுமானாலும் பார்த்துக்கங்க!'ன்னு நிர்த்தாட்சண்யமாய்ச் சொல்லிட்டாங்க. இதே சர்வேயரும், மற்ற அதிகாரிங்களும் ஜூலை 12—ம் தேதி வந்து, அளந்து பார்த்துவிட்டு, இன்



* துரை



* தனராஜ்



* பழநி

னொரு இடத்துல மார்க் பண்ணாங்க. அதன்படி பார்த்தா ஒரு வீட்டுல கூட துளியும் இடிக்க வேண்டிய அவசியமில்லே. இது அநியாயமா? இல்லையா?'' என்று கேட்டார்கள்.

''அரசாங்கம் இடிக்கச் சொன்னதும் நீங்களாகவே ஏன் இடிச்சீங்க? மறுபடி சர்வே நடத்தற வரை பொறுமையா இருந்திருந்தா வீடு இடிபடாம இருந்திருக்குமில்லையா?'' என்று மறுபடியும் கேட்டோம்.

''இடிக்கணும்னு சொன்னதுமே நாங்க எல்லாரும், 'பட்டா இருக்குது; இது எங்களுக்குத்தான் சொந்தம்; ஹைவேஸ் இடம் இல்லே' என்று எவ்வளவோ சொல்லியும், அதை அவங்க கேட்கவே இல்லே! 'நீங்களா

இடிச்சுடுங்க. இல்லாட்டி, கவர்ன்மெண்ட், ஆளை வச்சு இடிச்சுத் தள்ளிட்டு, அதற்குண்டான செலவை உங்ககிட்டேயே வசூல் பண்ணிக்கும்!' என்று பயமுறுத்தினாங்க.

''பூந்தமல்லியிலும், ஆவடியிலும் போலீஸ்காரங்களும், ஹைவேஸ்காரங்களும் ஜனங்களைக் கண்ணுமண்ணு தெரியாம அடிச்சு வீடுகளை இடிச்சதா கேள்விப்பட்டோம். வீணா எதுக்கு வம்பு; என்று நாங்களாகவே இடிச்சுட்டோம். தீவிர, நம்ம வீட்டை யாரையோ விட்டு இடிச்சுட்டு, அதுக்காக, அவங்களுக்குக் கூலி வேற கொடுக்கறது மனசைச் சங்கடப்படுத்திச்சு. அதுவும் இல்லாம, அவங்க இடிச்சா, அவங்க இஷ்டத்துக்கு இடிப்பாங்க. ஒரு பக்கத்துல இடிச்சா, இன்னொரு பக்கத்துச் சுவர்ல விரிசல் கூட ஏற்படும். அவங்களுக்கு, நம்ம வீட்டு மேல என்னங்க அக்கறை? அதான் நாங்களே இடிச்சுட்டோம். நீங்க அவசியம் செட்டியார் வீட்டைப் போய்ப் பார்க்கணுங்க!'' என்றார்கள்.

செட்டியார்வீட்டுக்குப்போனோம். செட்டியார்என்றுஅவர்கள்குறிப்பிட்டது மளிகைக் கடை வைத்திருக்கும் சந்தான செட்டியாரை. அவரது பெரிய வீட்டின் இடிக்கப்பட்ட தோற்றம் மனத்தைச் சங்கடப்படுத்தியது. பயந்த சுபாவம் செட்டியாருக்கு என்று அவரைப் பார்க்கும்போதே தெரிந்தது. அவர் சொன்னார்:

''நாற்பத்தைந்து வயதான நான், 32 வருஷமாக இந்த ஊர்லதான் இருக்கிறேன். இந்த இடத்தை 67—ல் வாங்கி, 75—ல் வீட்டைக் கட்டி முடித்தேன். போன மாசம் 18—ம் தேதி வந்த அதிகாரிகள் ஏதோ அளவு பார்த்து விட்டு, வீட்டில் ஏழெட்டு அடிவரை இடித்து விட வேண்டுமென்றார்கள். நான் டாகுமெண்ட்ஸ் காட்டியும் அவர்கள் கண்டு கொள்ளவே இல்லை.

''நீங்கள் இடித்து விடுங்கள்; இல்லையென்றால் நாங்கள் இடித்துவிட்டு அதற்குண்டான செலவை உங்களிடம் வாங்கிக் கொள்வோம்!'' என்றார்கள்.

''புல்டோசர் போல ஏதாவது கொண்டு வந்து இடித்துவிட்டால், வீட்டில் மற்ற பகுதிகளுக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று பயந்து பத்துப் பன்னிரண்டு ஆட்களைக் கொண்டு, மொத்தம் சுமார் ஐயாயிரம் வரை செலவு செய்து, இடித்தேன்.

''மீண்டும் 22—ம் தேதி மறுசர்வே வந்தபோது, முன்னாடி முழுசா இருந்த வீட்டுப் படிக்கட்டுக்கும் வெளில, காலியா இருக்கும் இரண்டடி நிலம் வரை எனக்குச் சொந்தமான இடம் என்று சொல்லிவிட்டார்கள். பழையபடி கட்ட வேண்டுமென்றால் 40,000 ரூபாய் தேவைப்படும். இதை யார் எனக்குக் கொடுப்பார்கள்?'' என்று வேதனையோடும் விரக்தியோடும் கேட்டார்.

துரைராஜ் என்பவர், ''அதிகாரபூர்வமில்லாத கட்டிடங்களையும், குடிசைகளையும் அரசாங்கம் இடிக்க வேண்டியதுதான். ஆனால் பட்டா இருக்கும் வீடுகளை இடிக்கச் சொன்னதே தப்பு. இப்போது, இடித்தபின், ரீ சர்வேயில் இடித்திருக்கவே அவசியமில்லை என்று சொல்கிறார்கள். எதற்காக இந்த ஏழை ஜனங்களின் வயிற்றில் இப்படி அடிக்கிறார்கள்?'' என்று கேட்டார்.

இன்னொருவர் பழனி. அவரது கதை விசித்திரமானது. அவரது வீட்டுக்குப் பக்கத்திலிருப்பவர்களுக்குள் மனைப் பட்டா விவகாரத்தில் தகராறு. பழனி தலையிட்டு, ஹெட் சர்வேயரை வரவழைத்து, நிலத்தை அளந்து பிரச்னையைத் தீர்த்துவிட்டு, தன் வீட்டு நிலத்தையும் அந்தத் தலைமை சர்வேயரைக் கொண்டே அளந்திருக்கிறார்.

அவர் ரெக்கார்டுகளைப் பார்த்துவிட்டு, 'உங்கள் விஷயத்தில் பிரச்னையே இல்லை; இடம் முழுமையாய் உங்களுடையதுதான்!' என்று சொல்லியிருக்கிறார்.

இது நடந்தது 18.4.85 அன்று. ஆனால் இன்றோ, பழனியின் வீடும் பத்தடி அளவுக்கு இடிக்கப்பட்டு விட்டது! மூன்றே மாதத்தில் விதிகள் மாறிவிட்டதா என்ன?

வந்திருந்தவர்களிடம் ரோட்டுக்குக் கொஞ்சம் தள்ளி நடப்பட்டிருக்கும் ஒரு கல்லைக் காட்டி 'இதிலிருந்துதான் ஹைவேஸ் இடம் ஆரம்பம்' என்று பழனி சுட்டிக் காட்டியபோது, ''உன் இஷ்டத்துக்கு வீட்டைக் கட்டிக் கொண்டு, அதுக்கு முன்னாலே, எங்கேயிருந்தோ ஒரு கல்லைக் கொண்டு வந்து நட்டுவிட்டு, அதுவரை உள்ளதைச் சொந்தம் கொண்டாடுகிறாயா? ஹைவேஸ்காரன் என்ன மூளையில்லாதவனா?'' என்று சொல்லிவிட்டு, அந்தக் கல்லிலிருந்து பத்தடி தள்ளி வீட்டில் குறியிட்டு, அதுவரை இடித்து விட வேண்டும் என்றார்களாம்.

அந்தக் கல் ஹைவேஸ் நட்டது என்று மறுபடியும் பழனி சொன்னபோது, 'பேசாமல் சொன்னது வரை இடிக்கிறாயா? இல்லை இன்னும் பத்தடி அதிகமாக நாங்களே இடிக்கவா?' என்று அதிகாரிகள் மிரட்டினார்களாம்.

இரண்டாவது சர்வேயில் பழனி சுட்டிக் காட்டிய அந்தக் கல் ஹைவேஸ் நட்டதுதான் என்று ஒத்துக்கொண்டுள்ளனர்.

இப்போது பாதிக்கப்பட்டவர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, முதல்வருக்கும், அமைச்சர்களுக்கும், கலெக்டருக்கும் மனு தரப் போகிறார்கள். மறுபடியும் அரசாங்க சர்வேயர் வந்து, இரண்டாவது முறை சர்வே செய்யாத பகுதிகளையும் சர்வே செய்து முடிவு சொல்ல வேண்டுமென்றும், அரசாங்கத்தின் அவசரத்தினால் ஏற்பட்ட நஷ்டத்துக்கு நஷ்ட ஈடும் கோருகிறார்கள். இவர்களின் இந்தக் கோரிக்கை நியாயமானது மட்டுமல்ல; இடிக்க வேண்டாத கட்டடங்களையும் இடிக்க வேண்டும் என்று சொல்லி இடிக்கச் செய்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அரசு என்ன செய்யப் போகிறது என்பதைக் கொண்டுதான் அரசாங்கத்தின் நேர்மையைக் கணக்கெடுக்க வேண்டும்!

— எஸ். சந்திரமௌலி.

படங்கள்: சேகர்.



அமரர் கல்கி
நினைவுச் சிறுகதைப் போட்டி 1985

நடுவர்கள்:
மாண்புமிகு நீதிபதி திரு மு.மு. இஸ்மாயில்,
உயர்திரு கோபுலு,
திருமதி வசுமதி ராமசுவாமி,
ஆசிரியர் கல்கி.

நடுவர் குழு 21.7.85 அன்று கூடி பின்வரும் சிறுகதைகளைப் பரிசுக்குரியன என்று தேர்ந்தெடுத்தது.

ரூ. 1000 முதல் பரிசு:
பெண்மையின் பரிமாணங்கள்
எழுதியவர்: "அய்க்கண்,"
திரு. மு. அய்யாக்கண்ணு, திரு[illegible]நூர்—[illegible]11.

ரூ. 500 இரண்டாவது பரிசு:
இணைத்தவர்கள்
எழுதியவர்: "அனுஷா,"
திருமதி கே. லக்ஷ்மி,
குன்னூர்—2.

ரூ. 250 மூன்றாம் பரிசு:
நெஞ்சில் ஆசை கோடி சுமந்து...
எழுதியவர்: இரா.செல்வசுப்பிரமணியன்,
நாகர்கோயில்—629 001.

ரூ. 250 மூன்றாம் பரிசு:
[illegible]ண்ணிற்குத் தெரியாத கோடு
[illegible]ியவர்: "அன்னம்,"
திரு. கே. விசுவநாதன், மதுரை—625 006.

பரிசுக்குரிய சிறந்த கதைகளைத் தேர்ந்தெடுத்தளித்து உதவிய நடுவர்களுக்கு இதயபூர்வமான நன்றி.

பரிசு பெற்ற நான்கு எழுத்தாளர்களுக்கும் நல்வாழ்த்துக்கள்.

போட்டியில் பங்கேற்றுக் கொண்ட இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட எழுத்தாளர்களுக்கு நன்றி.

பிரசுரத்துக்கு ஏற்கப்பட்டுள்ள இதர சிறுகதைகள் பற்றிய விவரம் அடுத்த இதழில்.

* திரு. இஸ்மாயில்.



* திரு. கோபுலு.



* திருமதி. வசுமதி.



புகைப்படங்கள்: யோகா.



• வைகுந்த் கோவிந்த்.

"கோவாவுக்கு வாருங்கள்"

—அன்புடன் அழைக்கிறார் அமைச்சர்

கோவா அரசின் தலைமைச் செயலகம எளிமையான, புராதனக் கட்டிடத்தில் செயல் படுகிறது. காமிரா, டேப் ரிகார்டர்கள் வாசலிலேயே வழிப்பறி செய்யப்படுகின்றன.

படியேறினால் நாலாபக்கமும் மனிதர்கள் பேப்பர்களோடு ஜும்ஜுமாய் அலைந்துகொண்டிருந்தார்கள். அலைந்தவர்கள் அங்கே பணியாற்றுபவர்கள் இல்லை. அத்தனையும் காரியமாக வேண்டி வந்த வெளி மனிதர்கள் என்று பிற்பாடு புரிந்தது.

தொழில் — வேலை வாய்ப்புத்துறை மற்றும் செய்தித்துறை அமைச்சர் மாண்புமிகு வைகுந்த் கோவிந்த் தேசாயுடன் எங்களுக்குப் பகல் பன்னிரண்டு மணிக்கு அப்பாயிண்ட்மென்ட்.

''குட்மார்னிங் மினிஸ்டர் ஸார்.''

''குட்மார்னிங். நீங்களும் உட்காருங்கள் கராபுர்கர் ஸாப்'' என்றார். திரு. கராபுர்கர் (சத்தியமாய் அதுதான் அவர் பெயர்) தகவல் துறையில் உயர் அதிகாரி. எங்களுக்கும் சில சமயம் அமைச்சருக்கும் உதவினார்.

''நீங்கள் ஒரு காலத்தில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளீர்கள் என்று திரு. கராபுர்கர் சொன்னார். இருந்தும் கோவாவின் கல்வித்துறை மிகவும் பின்தங்கியிருக்க எப்படி அனுமதித்தீர்கள்?''

''யார் சொன்னார்கள் நாங்கள் கல்வியில் பின்தங்கியிருக்கிறோம் என்று?''

''நாங்கள் சந்தித்த பல மாணவர்கள் பம்பாய்ப் பல்கலைக்கழகத்தில் இருக்கும் வசதிகள் இங்கில்லை என்றும், ஆசிரியர்களுக்குத் திறமை போதவில்லை என்றும் வருத்தப்பட்டார்களே?''

''தவறு. நாங்கள் பம்பாய்ப் பல்கலைக்கழகத்துடன் இணைந்தவர்கள்தான். ஆசிரியர்களில் பெரும்பாலும் பம்பாயிலிருந்து கொண்டு வரப்பட்டவர்கள்தான். படிப்பறிவு விகிதம் (Rate of Literacy) எடுத்தால் நாங்கள் வெகு முன்னால் இருக்கிறோம். எங்கேயோ ஏதோ ஒரு ஆசிரியருக்குத் திறமை குறைவாயிருக்கலாம். ஆனால் பொதுப்படையான குற்றச்சாட்டை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். கல்வியின் தரத்தை இன்னும் உயர்த்தவும் முயற்சி செய்வோம்.''

''கோவாவில் வெளிமாநிலத்தவர்கள் அதிகம் ஊடுருவி விட்டார்களாமே. வேலை வாய்ப்பு இல்லை என்று சுவரொட்டிகளில் பார்த்தோம். இந்தப் பிரச்னைக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?''


''கோவாவும் இந்தியாவில் ஒரு பகுதி. இங்கிருப்பவர்கள் வெளிமாநிலங்களில் வேலைதேடிக் கொள்ளலாம். வெளியிலிருப்பவர்கள் இங்கேயும் வரலாம். எப்படித் தடுக்க முடியும்?''

''கோவாவின் முக்கிய தொழில் இரும்புச் சுரங்கம். அதன் தொழிலாளர்களுக்கு அரசின் உதவி என்ன?''

''இரும்புச் சுரங்கங்கள் தனி மனிதர்களின் சொத்து. பிரச்னைகள் வந்தால் மட்டும் அரசு தலையிடும்.''

''தேசிய மயமாக்கும் திட்டம் உண்டா?''

''தேசிய மயமாக்குவதில் பயன் இல்லை. இன்னும் பத்துப் பன்னிரண்டு வருடங்களில்



சுரங்கங்கள் வற்றிப் போகும். அப்புறம், என்ன செய்வது? நாங்கள் மற்ற துறைகளில் தான் அதிகக் கவனம் வைத்திருக்கிறோம்.''

''எந்த மாதிரி?''

''தொழில் கல்வியில் மக்களுக்குப் பயிற்சி தருகிறோம். எங்கள் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ஜின் புள்ளி விவரங்களை வைத்து வேலையில்லாதவர்களைக் கணக்குப் போடாதீர்கள். வேலையிலிருப்பவர்களே இன்னும் பெரிய பதவி கிடைக்காதா, நிறைய பணம் கிடைக்கலாமே என்று தங்கள் பெயர்களை நீக்காமல் இருக்கிறார்கள். இதை எங்களால் தடுக்க முடியவில்லை.''

''கோவாவைச் சுற்றுலாவிற்கு ஏற்ற இடம் என்று நிறைய விளம்பரம் செய்கிறீர்கள். ஆனால் இங்கே சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளே இல்லையே?''

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? எத்தனை அருமையான ஹோட்டல்கள் இருக்கின்றன?!''

''ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் பணக்காரர்கள் மட்டும்தான் தங்கலாம். எங்களைப் போன்ற சாமானியர்கள்?''

''டூரிஸ்ட் ஹாஸ்டல்களைக் கட்டி விட்டிருக்கிறதே அரசு?''

''போதவில்லையே? நாங்கள் பதிவு செய்து நான்கு நாட்கள் ஆகின்றன. இன்னும் அறை கிடைக்கவில்லையே? சீசனல்லாத போதே இப்படி இருந்தால் சீசனில் வருபவர்களுக்கு ஏது இடம்?''

''ஒவ்வொரு ஆண்டும் சுற்றுலாப் பயணிகள் அதிகரித்துக் கொண்டே வருகிறார்கள். நாங்கள் தயாராயிருந்தும் கைகளை மீறிப் போகிறது. இன்னும் நிறைய விடுதிகள் கட்ட உத்தேசித்திருக்கிறோம்.''

''இடம் மட்டுமென்றில்லை, ஹோட்டல்களில் விலைகள் அதிகம். ஊரைச் சுற்றிப் பார்க்க அதிகக் கட்டணம்.''

''நீங்கள் அரசாங்க டூரிஸ்ட் பஸ்ஸில் போயிருக்கலாமே!''

''அரசு பஸ்ஸில் ஏறிவிட்டு வெகுவாய் அவதிப்பட்டோம். குடிக்கத்தண்ணீர் இல்லை. கைடு, டிரைவர் கேபினை விட்டு வெளியே வரவே கூச்சப்படுகிறார். பஸ்ஸில் பூகம்பம் மாதிரி எப்போதும் தடால் தடால் சப்தம், குலுக்கல்.''

அமைச்சர் கவலையுடன் சுராபுர்கரைப் பார்த்தார். ''இவர்கள் சொல்லும் பஸ்ஸைப் பற்றி விசாரியுங்கள்! சுற்றுலாவில்தான் நாங்கள் அதிக அக்கறை காட்டுகிறோம். வரும் ஆண்டுகளில் அதிக வருவாயை எங்களுக்கு ஈட்டித்தரப் போவது சுற்றுலாதான். இருக்கும் குறைபாடுகளை விரைவிலேயே நீக்க முயற்சி செய்வோம். குறைகளை எங்களுக்குத் தெரிவியுங்கள்.''

''போதை மருந்து அதிக அளவில் கடத்தப்பட்டுக் கோவாவிற்குள் கொண்டு வரப்படுகிறது என்றும், பெரிய பணக்காரர்கள் ஈடுபட்டிருப்பதால் அரசு தெரிந்தே கவனிப்பதில்லை என்றும் சொல்கிறார்களே?''

''கடத்தல் இருப்பது உண்மைதான். நாங்கள் விழிப்புடன் கவனித்து வருகிறோம். பார்ஜ்களில் கடத்தப்படுவது கண்டுபிடிக்கப்பட்டால் அந்தப் படகையே கைப்பற்றுகிறோம். சென்ட்ரல் எக்ஸைஸ் காரர்கள் அதையெல்லாம் கவனித்துக் கொள்கிறார்கள். மற்றபடி பணக்காரர்களுக்காக அரசாங்கம் கவனிக்காமல் இருக்கிறது என்பதெல்லாம் பொய். ஒவ்வொரு மாநிலத்திலும் அரசைக் குறை சொல்வதற்கென்றே சிலர் இருப்பார்கள். அவ்வளவுதான்.''


''தமிழர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?''

''கோவாவிற்கு வாருங்கள். ஆனால் கிளம்புவதற்கு முன்னாலேயே கடிதம் எழுதி அறைகளை ரிஸர்வ் செய்து கொள்ளுங்கள். கோவாவில் இயற்கையின் அழகு கொட்டிக் கிடக்கிறது. கோவா மக்கள் அன்புடன் வரவேற்கக் காத்திருக்கிறார்கள். நட்புடன் கைகொடுக்க ஆசைப்படுகிறார்கள். வந்திருந்து ஆனந்தப் படுங்கள். கோவாவைப் பற்றி உயர்வான எண்ணத்துடனேயே திரும்பிப் போவீர்கள்!'' என்பதுதான்.

கோவா சிறப்பிதழுக்காகக் கோவா சென்று வந்து கட்டுரைகளையும் புகைப்படங்களையும் தந்தவர்கள் 'சுபா'.


ராஜீவ்
லோங்கோவால்
பஞ்சாப் பிரச்னை தீர்ந்தது!


சுதந்திரம்.. ஜனநாயகம்.. அடிப்படை உரிமைகள்.. எங்கே.. சொல்லு பார்ப்போம்!
எமர்ஜென்சி.. எமர்ஜென்சி.. எமர்ஜென்சி


கூண்டுலே அடைக்காம எல்லாம் சுதந்திரமா உலாவட்டும்!
வண்டலூர் மிருகக் காட்சி சாலை
வாக்கு மீறல்
மெத்தனம்
லஞ்ச ஊழல்
நிர்வாகக் கோளாறு



கல்கி

1985 ஆகஸ்டு 4
மலர் 44 இதழ் 1
குரோதன ஆடி 20



இது மூவரின் வெற்றி!

செய்தி அறிந்ததும் நாட்டிலுள்ள லட்சோபலட்சம் மக்கள் மானசீகமாகப் பிரதமருக்கு மாலை சூட்டி வாழ்த்தியிருப்பார்கள். ஏனெனில் சுதந்திர பாரதத்தில் அனைத்து மக்களுக்கும் சம அளவில் மிகுந்த கவலை அளித்த மிகப்பெரிய பிரச்னைகளுள் ஒன்றாக விளங்கியது பஞ்சாப் பிரச்னை. அது தீர்க்கப்பட்டு ஓர் ஒப்பந்தமும் கையெழுத்தாகிவிட்டது.

பஞ்சாபிலும் அதற்கு வெளியேயும் உள்ள பல்லாயிரக்கணக்கான சீக்கியர்கள் லோங்கோவாலுக்கு மானசீகமாக மலர் மாலை சூட்டி மகிழ்ந்திருப்பார்கள். ஏனெனில் சீக்கியர்களில் மிகப் பெரும்பான்மையினர் வன்முறையை விரும்பும் தீவிரவாதிகள் அல்ல; காலிஸ்தான் பேசும் பிரிவினைவாதிகளும் அல்ல; அமைதி நாடும் இந்தியர்களே.

அரசியல் நடவடிக்கைகளை உன்னி நோக்குகிற பல நூறு பேர்கள் பஞ்சாப் ஆளுனர் அர்ஜுன் சிங்குக்கு மானசீகமாக மலர்மாலை சூட்டி வாழ்த்தியிருப்பார்கள். காரணம், இந்தச் சமரசம் உருவாகவும் ஒப்பந்தம் கையெழுத்தாகவும் அரும்பாடுபட்டவர் அவர்தான் என்பது அவர்களுக்குத் தெரியும்.

எனவே இது மூன்று பேர்களுடைய வெற்றியாகிறது. என்னதான் அர்ஜுன் சிங் மிகுந்த பிரயாசை எடுத்துக் கொண்டிருந்தாலும், ராஜீவின் பக்க பலமும் ஊக்கமும் 'செய்து முடியுங்கள்' என்ற அன்புக் கட்டளையும் இல்லாதிருந்திருந்தால் இதை அவரால் சாதித்திருக்க முடியாது. என்னதான் ராஜீவ் பிரச்னையைத் தீர்த்து வைப்பதில் மனப்பூர்வமான ஆர்வமும் துடிப்பும் செயலூக்கமும் காட்டியிருந்தாலும் லோங்கோவால் சில அம்சங்களில் விட்டுக் கொடுக்காமலிருந்திருந்தால் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகியிராது. தம் இனத்தவரில் ஒரு பகுதியினரைப் பகைத்துக் கொண்டாலும் சரி, பஞ்சாபின் எதிர்காலமும் பாரதத்தின் ஒருமைப்பாடும் ஜனநாயகமுமே முக்கியம் என்ற கருத்துப்படச் சில அம்சங்களில் விட்டுக் கொடுத்துத்தான் இருக்கிறார். அதேபோல் ராஜீவும் தீர்க்க தரிசனமும் பரந்த மனப்பான்மையும் காட்டியிருக்கிறார். வரட்டு ஜம்பமோ வீண் பிடிவாதமோ காட்டாமல், 'யாருக்கு விட்டுக் கொடுத்துவிட்டோம்? நம் சகோதரருக்குத்தானே? நம் எஜமானர்களான இந்திய மக்களுக்குத்தானே' என்ற எண்ணத்துடன் செயல்பட்டிருக்கிறார்.

இயற்கை நியதி: ஒருவருக்குச் சாதகமாகிற ஒரு விஷயம் இன்னொருவருக்குப் பாதகமாகத்தான் முடியும். இந்த ஒப்பந்தத்தினாலும், ராஜஸ்தான், ஹரியானா மாநில மக்கள் சிறிதளவு பாதிக்கப்பட்டுத்தான் இருக்கிறார்கள். தங்கள் மாநில நலன் சிறிதளவு பாதிக்கப்பட்டாலும் மொத்தத்தில் தேச நலன் பெருமளவு காப்பாற்றப்பட்டிருப்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். பெருந்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

சீக்கியத் தீவிரவாதிகள்? இனி தங்களுக்கு எதிர்காலமில்லை என்பதை அவர்கள் புரிந்து கொண்டு வாலைச் சுருட்டிக் கொள்வது நல்லது. அமைதி விரும்பும் பெரும்பான்மை சீக்கிய மக்களுடன் இரண்டறக் கலந்துவிடுவது சிறந்தது. அவ்வாறின்றித் தங்கள் தனித்தன்மையைப் பாதுகாத்து வன்முறை, பிரிவினை என்று தொடர்வார்களேயானால் தாங்கள் ஆதரவிழந்து தனிமைப்படுத்தப்பட்டிருப்பதைக் காண்பார்கள்.

பஞ்சாபில் தேர்தல் வரட்டும்; ஜனநாயகம் மலரட்டும்; பாரதத்தின் பெருமை உயரட்டும்.

சீக்கியச் சகோதரர்களுக்குத் தமிழ்ப் பெருமக்கள் நல்வாழ்த்துக் கூறுகிறோம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி
ரூ1000
முதல் பரிசுக் கதை

பெண்மையின் பரிமாணங்கள்

விடியற்காலை ஐந்து மணியிருக்கும்.

ஹாலுக்குள் 'காலிங்-பெல்' ஒலித்தது.

'சே...! இந்த விடிகாலைப் போதிலே யாரது?' என்று எரிச்சலுடன் படுக்கையிலிருந்து எழுந்து, பக்கத்தில் படுத்திருந்த நளினியின் உடம்பின்மேல் ஒதுங்கிக் கிடந்த போர்வையைச் சரி செய்து போர்த்தி விட்டுக் கீழே இறங்கி வந்தேன்.

கதவைத் திறந்து பார்த்தபோது—

எதிரே என் மாமனார், பக்கத்தில் ரேவதி கைக்குழந்தையுடன்.

"வாங்க மாமா...! வா ரேவதி...! உள்ளே வாங்க..." என் [illegible] வரவேற்று, வாசலில் இருந்த அவர்களது பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு உள்ளே வந்தேன்.

"மாமா! ஊர்லே எல்லாரும் [illegible]க்கியந்தானே?" என்ற விசாரணைக்கு, [illegible]ரிடமிருந்து ஒரு பெரிய நீண்ட இ[illegible] பதிலாக வந்தது.

அவருக்கு நெடுநாட்களாக ப்ராங்கைட்டிஸ் தொந்தரவு.

அதிகாலையில், ஓர் அழகு கொஞ்சும் ரோஜா, தன் வண்ணங்களை இழந்து வெளுத்து நிற்பதைப் போல, வெள்ளையுடையில் ரேவதி நிற்கும் காட்சி, என் இதயத்தை இறுக்கிப் பிழிந்தது.

"ரேவதி! நல்லாயிருக்கியா...? விஜிக்குட்டி எப்படியிருக்கிறா?" என்று குழந்தையை வாங்கிக் கொள்ளக் கையை நீட்டினேன்.

"மாப்பிளே! நளினி எங்கே?" என்று சுற்றிலும் பார்த்தார் மாமனார்.

"அப்பா...! ரேவதி...!" என்று ஆர்வமுடன் கால்களும் துள்ளித் தாவ ஓடி வந்தாள் நளினி.

"எப்போ வந்தீங்கப்பா...? ஏய் விஜிக்குட்டி...!" என்று குழந்தையை அள்ளிக் கொண்டாள் அவள்.

அவர்களின் எதிர்பாராத வருகை, சந்தோஷமான நிகழ்ச்சிதான் என்றாலும், என் இதயத்தின் ஒரு மூலையில், ஏமாற்ற உணர்வு குறுகுறுக்க ஆரம்பித்தது.

இன்று விடியும் நாளை நான் எவ்வளவு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்? இந்த முக்கியமான நாளின் வருகைக்காக எத்தனை நாள் காத்திருந்தேன்? இந்த இனிய நாளை எப்படியெல்லாம் ஆனந்தமாகக் கழிக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தேன்?

...! அத்தனையும் வீண் கனவுதானோ...?

"என்னப்பா, திடீர்னு புறப்பட்டு வந்திட்டீங்க? ஒரு கடிதாசு கூடப் போடலியே?" என்று கேட்டாள் நளினி.

அப்போது மாமனார், லேசான இருமலோடு மல்லாடிக் கொண்டிருந்ததால், ரேவதியே பதில் சொன்னாள்:

"ஒண்ணுமில்லேக்கா...! இங்கே லிட்டில் ஃப்ளவர் நர்ஸரி ஸ்கூலிலிருந்து எனக்கு அப்பாயிண்ட்மென்ட் ஆர்டர் நேத்துத்தான் வந்திச்சு; நாளைக்கே டியூட்டியிலே ஜாய்ன் பண்ணணுமாம்... அதுதான் உடனே புறப்பட்டு வந்தோம்."

"ஆமா நளினி...! இன்னிக்கே வந்து, ரேவதிக்கு ஒரு வாடகை வீடு ஏற்பாடு பண்ணிடணும்னுதான் உடனே புறப்பட்டு வந்தேன்..." என்றார் மாமனார்.

"ஏம்பா வாடகை வீடு? இந்த வீட்டிலேயே ரேவதி இருந்திடலாமே?" என்று நளினி; குறிப்பாக என்னைப் பார்த்தாள்.

"ஆமாமா... இந்த வீட்டிலேயே, ரேவதி இருக்கட்டும்... தனியேயிருக்கிறதைவிட, இங்கே துணையோடே இருக்கலாமே?" என்று பின்பாட்டுப் பாடினேன் நான்.

"இல்லே, மாப்பிளே...! ரேவதி கூட நான் துணையாயிருக்கப் போறேன்... நாங்க இங்கே தங்கியிருக்கிறது நல்லாயிருக்காது.. தனி வீடு பார்த்து, இருக்கிறதுதான் நல்லது..." என்று, இருமல் இடையீடு இல்லாமல், அழுத்தமாகச் சொன்னார் மாமனார்.

ரேவதியின் கணவர், கிராமத்திலே ஒரு பள்ளி ஆசிரியராக இருந்தவர். ஒரு தடவை,

அய்க்கண்

மாணவர்களைச் சுற்றுலாவுக்காகக் குற்றாலத்துக்குக்கூட்டிக்கொண்டு வந்தபோது, அருவியில் விழுந்துவிட்ட ஒரு மாணவனைக் காப்பாற்றுவதற்காகத் தானும் குதித்து, அவனைக் காப்பாற்றிவிட்டு, தான் கால் இடறி விழுந்து அருவி வெள்ளத்தோடு போய், இறைவனடி சேர்ந்து விட்டார்.

அவருடன் வாழ்ந்த நான்காண்டு வாழ்க்கைக்கு நினைவாக, விஜி மட்டும்தான் ரேவதிக்கு.

பி. ஏ. படித்திருந்த அவள், பல வேலைகளுக்கு விண்ணப்பம் போட்டிருந்தாள். கடைசியில், இந்த ஹைர் ஸ்கூல் டீச்சர் வேலைக்கு உத்தரவு வந்திருக்கிறது.

பாத்ரூமில், குழாய்த் தண்ணீர் வந்து விழும் சப்தம் கேட்டது.

"ரேவதி! தண்ணி வந்திட்டுது...நீ முதல்லே குளி...பிரயாணம் பண்ணக் களைப்பு ரொம்ப இருக்கும். அப்பாவுக்கு வெந்நீர் வச்சுக் கொடுக்கிறேன். அந்த வெந்நீரிலேயே விஜியையும் குளிப்பாட்டிடலாம்... நீ உன் டிரஸ்ஸைக் கொடு — பஸ்ஸிலே விஜி அழுக்காக்கியிருப்பானே — அந்த டிரஸ்களையும் கொடு. நான் துவைச்சுப் போட்டுடறேன். எட்டு மணி வரைதான் இங்கே தண்ணி வரும்; அப்புறம் வராது. அதுக்குள்ளே துணிமணியெல்லாம் துவைச்சுக் குளிச்சுப் பாத்திரங்கள்லே ரொப்பி வச்சுக்கிடணும்.."

சட்டென்று நினைவு வந்தது அவளுக்கு.

"அப்பா" இட்டிலிதானே சாப்பிடுவார்? பூரி சாப்பிட மாட்டாரே...? எதிர்த்த வீட்டிலே போய், கொஞ்சம் இட்டிலி மாவு இருக்கு



மானு கேட்டுக்கிட்டு வர்றேன்'' என்று வேக வேகமாக வெளியே சென்றாள் நளினி.

சிறிதுநேரத்தில் ,மலர்ச்சிபொங்கும்முகத்தோடு திரும்பி வந்தாள். கையில் ஒரு பாத்திரத்தில் மாவு இருந்தது.

''நல்லவேளை... அப்பாவுக்கு அஞ்சாறு இட்டிலிக்கு மாவு கெடச்சுட்டுது... ஜானகியம்மா குடுத்தாங்க... ஆனா, உங்களுக்குப் பூரிதான்!'' என்று என்னிடம் சிரித்தபடி சொல்லிக்கொண்டே உள்ளே சென்றாள் அவள்.

அவளுடைய சிரிப்பைக் கண்டு என்னால் மகிழ்ச்சி அடைய முடியவில்லை.

அந்தச் சிரிப்பு என்னுள் துயரத்தையே சிலுப்பிவிட்டது.

நேற்றுச் சாயந்திரம், அவள் என்னிடம் கொஞ்சலாகச் சிரித்தவாறு சொன்னாள்:

''நாளைக்குக் காலையிலே உங்களுக்கு ஒரு ஸ்வீட் — எ ஸ்வீட் பிகினிங்... ஏன் தெரியுமா?'' என்ற அவளுடைய ஆழமான கண்களில் குறும்பு ஒளிர்ந்தது.

''தெரியும்... உன்னைவிட எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு.... ஒரு வாரத்துக்கு முன்னாலேயே உனக்கு ஒரு சேலை வாங்கி வச்சிருக்



கேன், தெரியுமோ?'' என்று மெதுவாக அவளுடைய சிவந்த மடிந்த காதுகளுக்குள் கிசுகிசுத்தேன்.

''அப்படியா? என்ன சேலை...?'' என்று பெண்களுக்கே உரிய ஆர்வம், அவளது முகத்தில் குறுகுறுக்க ஆவலுடன் என் தோள்களைப் பிடித்துக் கொண்டாள் அவள்.

''நோ... நாளைக்குத்தான் காட்டுவேன் — அதுவரை சஸ்பென்ஸ்...! அதுசரி, நீ என்ன ஸ்வீட் தருவே?'' என்று அவளது செவ்வண்ண இதழ்களை லேசாகத் தொட்டேன்.

''நோ... நாளைக்குத்தான்... தருவேன்... அந்த ஸ்வீட் என்னங்கிறது நாளை வரை சஸ்பென்ஸ்!'' என்று இனிமையாகச் சிரித்தாள் அவள்.

ஸ்வீட்டோடு எனக்குப் பிடித்தமான பூரியும்செய்யநினைத்திருக்கிறாள் அவள். ஆனால், இப்போது அப்பாவுக்காக அலைந்து இப்படி மாவு வாங்குகிற வேலையோடு கூட, இத்தனை பேருக்கும் பூரி மாவு பிசைந்து தேய்த்துச் சுட்டு, மசாலா செய்கின்ற கடுமையான வேலையும் சேர வேண்டுமா...?

அந்தச் சூழ்நிலையில் என் மனைவியைப் பார்க்கும் போது, என் உள்ளத்திற்குள் துயரம் கப்பிக் கொண்டது...

இன்றைக்கு, வீட்டிலே சமையல் வேலை கூட அவளுக்கு வைக்கக் கூடாது; கண்ணனுக்கு மட்டும் மத்தியானச் சாப்பாடு தயாரித்துக் கொடுத்தனுப்பி விட்டால், நமக்கு மத்தியானம், சாயந்திரம், இரவுச் சாப்பாடு எல்லாம் ஹோட்டலிலே சாப்பிட்டுக் கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டிருந்தேனே, அத்தனையும் தவிடுபொடியாகிவிட்டதே...?

சாப்பாட்டு மேஜையின்முன் எல்லோரும் உட்கார்ந்த பின்புதான், ஸ்வீட் சஸ்பென்ஸ் வெளியாகியது.

அந்த ஸ்வீட் — எனக்குப் பிடித்தமான குலோப் ஜாமூன்தான்!

யாரும் கவனிக்காத ஒரு பிரத்யேக சமயத்தில், என்னைப் பார்த்து ரகசியமாய்ச் சிரித்தாள் நளினி.

'எப்படிங்க என் ஸ்வீட்?' என்று அவளுடைய விழிகள் சிரித்தபடி கேட்ட அழகை, என்னால் முழுமையாக ரசித்து மகிழ முடியவில்லை.

என் நெஞ்சுக்குள்தான் ஏராளமான அழுத்தங்கள் இருந்தனவே...?

''அக்கா! என்ன, இன்னிக்குனு ஸ்பெஷல் ஸ்வீட் செஞ்சு வச்சிருக்கே, ஏதேனும் விசேஷமா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் ரேவதி.

அவளுடைய ரோஜா வண்ண இதழ்களுக்கிடையே பிரகாசித்த முத்துப் பற்கள், அவளது புடவையின் வெண்மையோடு போட்டி போடுவது போலிருந்தது.

திடுக்கிட்டுப் போன நளினி, கடைக்கண்ணால் என்னைப் பார்த்தாள்.

அவளது கண்களின் கடைக்கோடி அசைவு கூட எனக்குப் புரியுமே...!

''ஒண்ணுமில்லே ரேவதி...! சும்மாதான். ஒரு சேஞ்சுக்காகச் செஞ்சு வச்சேன், அவ்வளவுதான்... நத்திங் ஸ்பெஷல்...'' என்ற அவளுடைய குரலில் பதற்றம் நடனமாடியது.

ஸ்வீட் விஷயத்தை அப்படியே திசை திருப்பிவிட்டு, வேறு விஷயங்களைப் பேச ஆரம்பித்தேன் நான்.

''மாமா! இமர்னு இந்த ஊரிலே வீடு கிடைக்கிறது ரொம்பக் கஷ்டம்... புரோக்கர்கள்கிட்டே சொல்லி வைக்கணும்...'' என்று நான் ஆரம்பித்ததே தப்பாய்ப் போய் விட்டது.

என் மனைவி இதை விடாமல் பிடித்துக் கொண்டு விட்டாள்.

''ஆமாங்க... பக்கத்துத் தெருவிலே தேவிகா இருக்காளே, அவளோட வீட்டுக்காரர், அந்த வேலைதான் பார்க்கிறார்...''

''தெரியலியே.... நான் அவரைப் பார்த்ததேயில்லை...''

''உங்களுக்குத் தெரியாது. நான் போய் தேவிகாகிட்டே சொல்லிட்டு வந்திடறேன். காலை நேரத்திலே அவரும் வீட்டிலேதான் இருப்பாரு... சாப்பிட்டதும் போய்ச் சொல்லிட்டு வந்திடறேன்...'' என்று அவசரப்பட்டாள் நளினி.

கண்ணனைக் கொண்டு போய், பள்ளிக்கூடத்தில் விட்டுவிட்டு, வெயிலையும் தூரத்தையும் பார்க்காமல், அப்படியே தேவிகா வீட்டுக்குப் போய் விட்டுத்தான் வீடு திரும்பினாள்.

வந்ததும் வராததுமாக, மத்தியானச் சமையலில் இறங்கினாள் நளினி.

காலைப் பலகாரம் சாப்பிட்டு, பனங்கற்கண்டு போட்ட பால் சாப்பிட்டதுமே, மாமனாருக்குக் கொட்டாவித்தொடர்கதை ஆரம்பமாகி விட்டது.

''என்ன மாப்பிளே! நீங்க ஆபீசுக்குப் புறப்படலியா?'' என்று கொட்டாவிகளுக்கிடையே ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டார் அவர்.

''இன்னிக்கு ஆபீஸ் இல்லே மாமா! எங்க எம். டி.க்குப் பிறந்தநாள் இன்னிக்கு. அதனாலே ஆபீஸ் எல்லாம் விடுமுறை...'' என்று பெரிதாக இன்னொரு பொய்யைச் சொன்னேன்.

அன்று காலையிலிருந்து நளினியைத் தனியே சந்திக்கவே முடியவில்லை என்ற ஆதங்கம் எனக்குள் பந்தாக எழும்பியது.

இன்றைய தினத்தின் விசேஷத்தைப் பற்றி அவளிடம் ஒரு வார்த்தை கூடப் பேசிக் கொள்ள முடியாமலே போய்விடுமோ...?

''நளினி! கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா...'' என்று சமையற்கட்டை நோக்கி அபயக்குரல் எழுப்பினேன் நான்.

''இதோ...'' என்ற நளினியின் குரல் பதிலாக வர, நான் ஏகப்பட்ட எதிர்பார்ப்புகளுடன், ஹாலில் தனியே உட்கார்ந்து, முகட்டைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

''அத்தான்! என்ன முகட்டையே பார்த்

அடுத்த இதழில்...

கவர் ஸ்டோரி

"நான் ஒரு கம்யூனிஸ்ட்" டி.ராஜேந்தர்



துக்கிட்டிருக்கீங்க?'' என்றுபுன்முறுவலுடன் கையில் தண்ணீர் டம்ளரோடு எதிரில் நின்று கொண்டிருந்தாள் ரேவதி.

''ஏன் உன்னை அலையவிடுறு? அந்தக் கழுதை எங்கே?'' என்று பொய்க் கோபத்துடன் முணுமுணுத்தேன் நான்.

''அக்காக் கழுதை, மசியலுக்குக் கருணைக் கிழங்கைப் பிசைஞ்ச கையோட இருக்கு; அதுதான் இந்தக் கழுதை வந்திருக்கு...'' என்று கலகல எனச் சிரித்தாள் ரேவதி.

அந்த வாடிய இளமலரின் சோகக் கோலத்தின் பின்னணியிலே அந்த விஸ்தாரமான சிரிப்பைப் பார்க்க இதமாகத்தான் இருந்தது.

தண்ணீரை வாங்கிக் குடித்துவிட்டு, மேலே மாடிக்குச் சென்றேன்.

ஓர் இனிய நாள் இப்படி வீணுகக் கழிந்து கொண்டிருக்கிறதே என்ற கவலையோடு பொருமினேன்.

சாயந்தர நேர டிபன் உளுந்து வடைக்கு நளினி உளுந்து ஊறப்போடும்போது ரேவதி தடுத்துச் சொல்வது என் காதுகளில் விழுந்தது:

''வேண்டாம்... இப்போ கரெண்ட் இல்லே. க்ரைண்டரிலே உளுந்தை ஆட்ட முடியாது.''

''க்ரைண்டர் ஓடாட்டி என்ன? அப்பாவுக்கு உளுந்த வடைன்னு ரொம்பப் பிடிக்கும். நீயும்தான் நல்லாத் தின்பியே? இன்னிக்கு ஒரு நாள் ஆட்டுக் கல்லிலே போட்டு ஆட்டிஞ, உடம்பு குறைஞ்சு போயிடுமா? நீ சும்மாயிரு. நான் நிமிஷத்திலே ஆட்டிடறேன்.'' என்று நளினி பிடிவாதமாக உளுந்தை ஊறப் போட்டு, ஆட்டி, சாயந்திரம் வடை, சட்னி, காப்பி தயார் செய்துவிட்டாள்.

மாமனுர் வடைகளை நன்ருக ருசித்துச் சாப்பிட்டார். என்ருல் அப்படி ருசித்துச் சாப்பிட முடியவில்லை.

வடை ருசியாகத்தான் இருந்தது. ஆனுல் இன்றைக்கென்று என் மனைவி இப்படிக் கடுமையாகச் சமையல் வேலை செய்கிருளே என்ற ஆதங்கத்தில், வடையே ருசிக்கவில்லை.

''நளினி! நான் வெளியே போயிட்டு வர்றேன்...'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினேன் நான்.

இன்றைய நாளைக் குதூகலமாகக் கொண்டாடி, க்ளைமாக்ஸாக, ஒரு சினிமாவுக்கு நைட் ஷோ போவது என்று நான் தீர்மானித்து நேற்றே இரண்டு முதல் வகுப்பு டிக்கெட்டுகள் ரிசர்வ பண்ணி வைத்திருந்தேன்.

இன்றைக்குத்தான் எல்லாம் வீண் கனவாகப் போய்விட்டதே....!

அந்த இரண்டு டிக்கெட்டுக்களையும் வீணுக்காமல் ஒரு புதுமணத் தம்பதிகளுக்கு டிக்கெட்டுக்களைக் கொடுத்துவிட்டு, மாமனுரின் இருமல் கச்சேரியைக் கேட்டுக் கொண்டிருப்பதைவிட, நண்பனுடன் பேசிக் கொண்டிருக்கலாமே என்று யோசித்து, பக்கத்திலிருந்த அழகப்பன் வீட்டுக்குப் போய் அரட்டைக் கச்சேரி செய்துவிட்டு, ஒன்பது மணிக்குத்தான் வீட்டுக்குத் திரும்பினேன்.

வீட்டுக்குள்ளே பேச்சுக் குரலே காணும்.

திகைப்புடன், ''நளினி! நளினி!'' என்று கூப்பிட்டேன்.

''இதோ வந்திட்டேன்'' என்று குரல் கொடுத்துக் கொண்டே மாடியிலிருந்து இறங்கி வந்தாள் நளினி.

''மாமா, ரேவதி எல்லாம் எங்கே?''

''ருக்மணியம்மா வந்து பேசிக்கிட்டிருந்தாங்க. இங்கே பக்கத்துத் தியேட்டரிலே ஏதோ புராணப்படமாம். இன்னிக்குக் கடைசியாம். அப்பாவும் தங்கச்சியும் பார்க்கணும்னு ஆசைப்பட்டாங்க. ருக்மணியம்மாவோட நைட் ஷோவுக்கு அனுப்பியிருக்கேன். கண்ணனும் போயிருக்கான். அது சரி, நீங்க சாப்பிடறீங்களா?'' என்று அன்பு பொங்கக் கேட்டாள் நளினி.

''வேண்டாம்'' என்று கூறி நான் மேலே படுக்கையறைக்குப் போய்ப் பார்த்தபோது, திடுக்கிட்டுப் போனேன்.

கட்டிலில் புதிய துணிகள் மாற்றப்பட்டு, சுற்றிலும் மலர்ச்சரங்கள் கட்டித் தொங்க விட்டு, படுக்கையிலும் எனக்குப் பிடித்தமான மல்லிகைப் பூக்கள் பரவலாகத் தூவப்பட்டிருந்தன.

ஆண்டுக்கு ஒரு தடவை, எங்கள் திருமண நாள் அன்று, அவள் வழக்கமாகச் செய்கின்ற அலங்காரம் அது.

இன்று, இந்த அலங்காரம் செய்ய

அவளால் எப்படி முடிந்தது?

ருக்மணியம்மாளுடன் அப்பாவும் ரேவதியும் சென்ற பிறகு, வெளியே பூக்கடைக்குப் போய் இந்தப் பூக்களை வாங்கி வந்து அலங்காரம் செய்திருக்கிறாள்....!

நெஞ்சம் வியப்பால் விம்ம, படுக்கை யறையைச் சுற்றிப் பார்த்தபடி இருந்தேன்.

புதுப்புடவை சரசரப்புக் கேட்டு, வாசற் படியைத் திரும்பிப் பார்த்தேன்.

குளித்து முழுகி, புது மணப் பெண் போல் அலங்கரித்துக் கொண்டு, முகமெல்லாம் சிரிப்பு பிரவகிக்க, கையில் பால் டம்ளருடன் உள்ளே வந்து கொண்டிருந்தாள் என் மனைவி.

விடிகாலையிலிருந்து அவள் ஆடி ஓடி வேலை செய்து அலைந்ததெல்லாம், என் மனக் கண்ணில் 'ஃப்ளாஷ்—பேக்' காக ஓடிக் கொண்டிருந்தது.

''இந்தாங்க, பால் ....'' என்று சொல்லி, டம்ளரை வைத்துவிட்டு, என் காலில் விழுந்து நமஸ்கரித்தாள் அந்த 'புதுமணப்பெண்.'

அவளை வாரியெடுத்து அணைத்துக் கட்டிலில் உட்கார வைத்து, அவள் முகத்தையே ஆழ்ந்து பார்த்தேன் நான்.

இத்தனை களைப்பையும் கடந்து அவளால், எப்படி ஒரு புதுமணப்பெண் போல் பொங்கிச் சிலிர்க்க முடிகிறது....?

என் முகத்தைத் தன் கைகளுக்குள் ஏந்திப் பிடித்துக் கொண்டு குறும்பாகச் சிரித்தாள் நளினி.

''பாவம்! என் ராஜாவுக்கு இன்னிக்குக் காலையிலேருந்து ஒரே ஏமாற்றம். நமக்கு இன்னிக்குக் கல்யாண நாள் என்கிறது, அப்பாவுக்கும் தெரியலே. ரேவதிக்கும் நினைவில்லே.... ஏன்னு, கிராமத்திலே இப்படியெல்லாம் கொண்டாடற பழக்கம் இல்லியே. ஆனா, இன்னிக்குக் கல்யாண நாளை நாம் கொண்டாடுறோம்னு என் தங்கச்சிகிட்டே — இத்தனை இளம் வயசிலே புருஷனை இழந்து சூனியமாய் நிக்கற அவள்கிட்டே — சொல்ல எனக்கு மனசு வரல்லேங்க. அவ முன்னால நாம் சந்தோஷமாக் கல்யாண நாளைக் கொண்டாட எப்படி முடியும்? ஆனா, என் மாதிரியே நீங்களும் சந்தோஷ நாள் என்கிறதை, மனசுக்குள்ளே அடக்கிக்கிட்டு இருந்தீங்களே — அதுதான் எனக்கு ரொம்பப் பெருமையா, சந்தோஷமாயிருந்திச்சு'' என்று மனம் நெகிழ்ந்து சொன்னாள் அவள்.

''நளினி! கல்யாண நாள் என்கிறது எனக்கு மட்டுமில்லே, நம்ம ரெண்டு பேருக்கும் சேர்த்துத்தானே?'' என்று சிரித்தேன் நான்.

''நல்ல வேளை! அவங்க சினிமாவுக்குப் போயிட்டாங்க. ரெண்டு மணிக்கு மேலே தான் வருவாங்க. இப்போவாவது உங்களுக்கு ஏமாற்றம் ஏற்படாம நான் வர முடிஞ்சதேனு சந்தோஷப்படறேன்'' என்று சிரித்தபடி நாணத்தால் முகம் சிவக்க, என் மடியில் தலை வைத்துப் படுத்தாள் நளினி.

விடிகாலையிலிருந்து மற்றவர்களுடைய சந்தோஷத்திற்காக ஓடி ஓடி வேலை செய்து களைத்த என் மனைவி, கடைசியில் இப்போது எனக்காக — எனக்குச் சந்தோஷம் தருவதற்காக, அந்தக் களைப்பையெல்லாம் மறைத்துக் கொண்டு, குளித்து முழுகி அலங்காரம் செய்து கொண்டு வந்து, என் மடியில படுத்துக் கொண்டிருந்தாள்!

என் மடியில் பூவாகக் கிடந்த அவளை ஆதுரத்தின் பார்த்தபடி, மெதுவாக அவளுடைய கால்களைப் பிடித்து அமுக்கிவிட்டேன்.

திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள் அவள்.

''என்னங்க இது, ஏன் காலைப் பிடிக்கறீங்க?''

''இல்லேம்மா. நீ காலையிலிருந்து எவ்வளவு அலைஞ்சு வேலை செஞ்சிருக்கிறே? உனக்குக்கால் கைகள் வலிக்காது? அதுதான் அமுக்கி விடறேன்...''

''என்னங்க இது.... கல்யாண நாளும் அதுவுமா இப்படி....'' என்று பதறிச் சிணுங்கியவள், சட்டென்று ஏதோ நினைத்துக் கொண்டவளாய் ''ஏங்க, என்மேல் கோபமா?'' என்று மிரட்சியுடன் என்னை ஏறிட்டுப் பார்த்தாள்.

''சே! உன்மேல் கோபமாவது? நோ. உன் மேலே அட்மிரேஷன்தான்.''

''நோ. அதெல்லாம் வேண்டாம். இன்னிக்கு நம்ம மாரியேஜ் டே.'' என்று அழுத்தமாகப் பேச ஆரம்பித்தவள், மேலே பேச வெட்கி, செவ்விதழ்களைக் குவித்துப் புது மலராய்ச் சிரித்தாள்.

''தெரியும் நளினி! கல்யாணம்கிறது என்ன? ஒருத்தர் சுகதுக்கத்தில இன்னொருத்தர் பங்கெடுத்துக்கிடறதுதான் கல்யாணம். இத்தனை நாளும், கட்டிலிலே உன்கிட்டே சுகத்தைப் பகிர்ந்து கொள்பவனாக — நோ — உன் கிட்டே சுகத்தைப் பறித்துக் கொள்பவனாகத்தான் இருந்திருக்கிறேன். ஆனா, ஒரு கணவன், தன் மனைவியின் கஷ்டத்திலும் பங்கெடுத்துக் கொள்பவனாக இருக்க வேண்டும். நளினி! இன்னிக்குத்தான் உன்னை முழுமையாகப் பார்த்திருக்கிறேன். நீ என்னோட மனைவி மட்டுமில்லே — ஒரு நோயாளித் தந்தையின் மகளாக, ஒரு விதவைத் தங்கையின் அக்காளாக, தகப்பனை இழந்த குழந்தையின் பெரியம்மாவாக நீ இருக்கிறவள். இன்னிக்கு ஒரு கல்யாண நாள் கொண்டாட்டம், வீணாயிட்டதேன்னு நான் வருத்தப்படலே. இன்னிக்கு என் மனைவியோட முழுப் பரிமாணத்தையும் தரிசிச்சிருக்கேன் என்று சந்தோஷப்படறேன். நளினி! நீ படுத்துக்கோ, யூ நீட் ரெஸ்ட் — நத்திங் எல்ஸ்...'' என்று குரல் உடைந்து கசியச் சொல்லிக்கொண்டே அவளுடைய மென்மையான கால்களையும் கைகளையும் மெதுவாக அமுக்கிவிட்டுக் கொண்டிருந்தேன் நான்.

என்னுடைய பேச்சின் முழு அர்த்தத்தையும் புரிந்து கொண்டு, பெருமிதத்தில் விம்மிய நளினி, இயல்பாகத் தூக்கம் வந்து அழுத்தும், தன் அழகிய இமைகளை மூட விடாமல், படபட என்று கூர்மையாக விழித்துப் பார்த்தபடி, என் ஈர விழிகள் வழியே இதயத்திற்குள் புகுந்து ஆத்மார்த்த சங்கமத்தில் கரைந்து கொண்டிருந்தாள்.

வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான் ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றாடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.

சாதாரணமாக 15 அல்லது 16 வயதிற்குள் குழந்தைகளின் வளர்ச்சி பெரும்பாலும் முழுமையடைந்து விடுகிறது. அவர்களுடைய வளர்ச்சிக்கு நேரடியாக உதவுவது புரதம் என்ற சத்துதான். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு தேவை காம்ப்ளான்—இப்போது, காம்ப்ளான் சிறந்த புரதம் கொண்டுள்ளது—பால் புரதம் (20%) அது 22 மூலதார சத்துணவுகளும் கொண்டதாகும்.

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்.



23

மூலதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்


புரதம்	ரிபோ
கொழுப்பு	ஃப்ளேவின்
கார்போ	நிகோடி
ஹைட்ரேட்	னமைடு
கால்ஷியம்	கால்ஷியம்
பாஸ்பரஸ்	பென்டோதெனேட்
சோடியம்	கோலின்
குளோரைடு	வைட்டமின் (பி6)
([illegible] வடிவில்)	வைட்டமின் (பி12)
பொட்டாஷியம்	ஃபாலிக் அமிலம்
இரும்புச்சத்து	வைட்டமின் சி
அயோடின்	வைட்டமின் டி
வைட்டமின் 'ஏ'	வைட்டமின் ஈ
வைட்டமின் 'பி1'	வைட்டமின் கே

பால் சேர்த்திடத் தேவையில்லை.



காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு

B84. GLC. 120 Tm


சித்தரஞ்சனி
சாண்டில்யன்

பாரத நாட்டின் தக்ஷிணபாதத்தின் மேல் திசை அரணை ஸஹ்யாத்ரியிலிருந்து சற்றுத் தள்ளி நாசிக்யா நகரத்துக்கும் சிறிது மேற்கில் கோதாவரி நதி தீரத்திலிருந்த சாதவாகனப் பேரரசின் தலைநகரான *பிரதிஷ்டானாவின் பெரிய அரண்மனையின் மேல் உப்பரிகையில் உட்கார்ந்திருந்த ராஜமாதா மகாராணி பாலஸ்ரீ சாதவாகனர்களின் மூதாதையான சிமுகன் காலத்திலிருந்த பேரரசையும் பிறகு குறுகி விட்ட அன்றைய அரசையும் எண்ணிப் பார்த்துப் பெருமூச்செறிந்தாள். அங்கிருந்தபடியே தூரத்தே பெரிதாக எழுந்து நின்ற மேற்கு மலைத்தொடரையும், அப்பொழுதும் நிதானமாக ஓடிக் கொண்டிருந்த கோதாவரி நதியையும் மாறி மாறிப் பார்த்து இந்தப் புண்ய மலையும், புண்ய நதியும் இருந்தும் அரசைக் காக்க ஹிந்துக்களால் முடியவில்லையே என்று நினைத்தாள். சாதவாகனப் பேரரசின் க்ஷீணதசையை யோசித்துப் பெரியவர்கள் சம்பாதிக்கும் பெரும் சொத்துக்களை அழிப்பதுதான் அடுத்து வரும் குழந்தைகளின் கடமை போலிருக்கிறது என்ற நினைப்பால் சிறிது மனம்கலங்கவும்செய்தாள். வெளிநாட்டவர் சதா ஹிந்துஸ்தானத்தின் மீது வெற்றி கொண்டு சீரழிப்பதே பாரதத்தின் சரித்திரமாவதை எண்ணிப் பெரும் வேதனைக்குள்ளான ராஜமாதா பாலஸ்ரீ, சாகர்கள் படையெடுத்து சாகஸ்தான் ஒன்றை ஸிந்து நதி முகத்துவாரத்தில் நிறுவிவிட்டதையும், முதல் சாதவாகன மன்னர்கள் நிறுவிய பெரும்சாம்ராஜ்யத்தில் முக்கால் வாசியைக் கபளீகரம் செய்துவிட்டதையும் நினைத்து, அந்தப் பிராந்தியங்களை மீண்டும் மீட்பது எப்போது? யார் மீட்பார்கள்? என்று தன்னைத்தானே கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்த சமயத்தில் அவள் உட்கார்ந்திருந்த உப்பரிகை மேல் தளத்தின் படிகளில் ஏறி வந்த வாலிபனொருவன் பாலஸ்ரீ உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கி நடந்து வந்தான்.

சுமார் ஆறடிக்கும்மேலான உயரத்துடனும் உறுதியான நடையுடனும் தன்னை நோக்கி வந்த தனது மைந்தனை மிகுந்த அன்பும் பெருமையும் நிறைந்த கண்களுடன் பார்த்த மகாராணி பாலஸ்ரீ, சாதவாகனர்களின் பழைய சாம்ராஜ்யம் அவன் காலத்தில் ஒரு வேளை திரும்பவும் அமைக்கப்படலாம் என்று நினைத்தாள். கௌதமிபுத்ர சதகர்ணி என்ற பெயரைத் தாங்கிய அந்த வாலிபனின் அழகிய முகத்தில் சதா ஒரு சிந்தனையும் கண்களில் அவன் எதையோ எதிர்பார்ப்பது போன்ற சாயையும் விரிந்து கிடந்தன. அவன் கைகள் நீண்டும் உறுதியுடனும் இருந்ததையும், நடுவில் ஒரு இடமும் விசால மார்பில் பல காயத்தழும்புகளும் காணப்பட்டதையும் கவனித்த ராஜமாதா அவன் காலத்தில் சாதவாகனர்களுக்கு ஏதாவது விடிமோட்சம் ஏற்படும் என்ற நம்பிக்கையும் கொண்டாள். அவன் அன்று மேலங்கி எதையும் அணியாமல் கழுத்தில் ஓர் ஆரமும் காதுகளில் இரண்டு சிறு பொன்வளையங்களையும் அணிந்து, நெற்றியில் திலகத்தையும் பிறைச்சந்திரனைப் போல் தீட்டியிருந்ததால் அவன் முகத்தில் பிரும்ம தேஜஸ் ஜொலித்துக் கொண்டிருந்தது. பிரும்ம குலத்தவரானாலும் சாதவாகனர் தங்களைத் துரோணர் போலும் பரசுராமனைப் போலும் க்ஷத்திரிய அலுவல்களுக்கு மாற்றிக் கொண்டதால் அந்தக் குலத்தவனான அந்த வாலிபன் முகத்தில் அழகுடன் வீரக்களையும் படர்ந்துகிடந்தது. ஏற்கனவே சில சின்னஞ்சிறு போர்களில் ஈடுபட்ட கௌதமிபுத்ரன் 'பெரும் போர்களை நாம் ஏன் மேற்கொள்ளக்கூடாது' என்ற யோசனையிலுமிருந்தான். அங்கி ஏதும் அணியாது இடுப்பிலிருந்தமூலக்கச்சவேஷ்டியுடன் தாயை நோக்கி வந்த சமயத்திலும் அவன் இடையில் சின்னஞ்சிறு கட்டாறியொன்றைச் சொருகியிருந்தான்.


ஏதோ சிங்கம்போல் நடந்து வந்த மகனின் கோலத்தையும் இடையிலிருந்த கட்டாறியையும்நோக்கியராஜமாதா பாலஸ்ரீ புன்முறுவலுடன் மைந்தனை வரவேற்றாள். "மகனே! இதென்ன அந்தண வேடமா க்ஷத்திரியர் வேடமா?" என்று புன்சிரிப்பினூடே வினா ஒன்றையும் கிளப்பினாள்.

"இரண்டும் சேர்ந்தது" என்று பதில் சொன்னான் கௌதமிபுத்ரன்.

"இரண்டும் சேருமா?" என்று பாலஸ்ரீ வினவினாள் லேசாக நகைத்து.

"பரசுராமன் விஷயத்திலும் துரோணர் விஷயத்திலும் சேருமானால் எனது மூதாதைகளுக்கும் சேருமென்றால் எனக்கு ஏன் சேரக்கூடாது?" என்று கேட்டான், அந்த வாலிபன். மேலும் அவனே சொன்னான், "தாயே! முன்பு வசிஷ்டர் தமது தண்டத்தை ஊன்றி விசுவாமித்திரன் கணைகளை விழுங்கச் செய்ததைப் போல் தவ பலமுள்ள அந்தணர் யாரும் இப்பொழுது கிடையாது. கால மாறுதலில், பெரும் படையெடுப்புகள் நாட்டில் ஏற்படும்போது அவசியத்தை முன்னிட்டு வர்ணங்கள் மாறுகின்றன. சாதவாகனர் அன்று எழுந்திராவிட்டால் வெளிநாட்டார் இந்த நாட்டை என்றோ விழுங்கியிருப்பார்கள். இன்று நமது சாம்ராஜ்யம் க்ஷீணித்ததற்கு நம் பலமும் போரிடும் சக்தியும் குறைந்ததுதான் காரணம்" என்று விரிவாகவே பேசிய கௌதமிபுத்ரன் "தாயே! இத்தனை நேரம் ஏதோ சிந்தனையில் ஈடுபட்டிருந்தாயே, எந்தக் கோட்டையைப்

* Prathishtana the Capital of Sata vahanas — Refer "A Historical Atlas of South Asia" — Edited By Joseph E. SCHWARTZBERG — Page. 20 — Plate III C-I.



இவன் : அவர் தனக்கு மட்டுமில்லாமல் தன்னுடைய அண்ணன் தம்பிகளுக்கும் ஆளுக்கொரு மாருதி கார் வாங்கிக் கொடுத்திருக்கார்.
அவன் : அவர் என்ன தொழில் பண்ணுறார்?
இவன் : எல். கே. ஜி. யில் பிரின்சிபாலா இருக்கார்!
—செந்தூர் ச. சோமசுந்தரம்.

பிடிக்க யோசித்துக் கொண்டிருந்தாய்?'' என்றும் கேட்டான்.

பாலஸ்ரீ சிறிது சிந்தித்துவிட்டு, ''மகனே! சாதவாகனர்கள் இழந்த கோட்டைகளை, நிலப்பகுதிகளை எப்படிப் பிடிக்கலாம் என்று யோசனை செய்து கொண்டிருக்கிறேன். அந்தச் சமயத்தில் நீ வந்தாய்'' என்று மெதுவாகப் பேசினாள். மேற்குத் தொடர்ச்சி மலையைச் சுட்டிக்காட்டிய ராஜமாதா ''அந்த மலையைப் போல் உயர்ந்திருந்த நமது பேரரசு இன்று மடுவாகத் தாழ்ந்துவிட்டது. அதற்கு நீ என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேள்வியும் எழுப்பினாள்.

கௌதமிபுத்ர சதகர்ணி தாய் சுட்டிக் காட்டிய மலையையும் நோக்கி, கோதாவரியையும் நோக்கிவிட்டு, ''தாயே! வெகு சீக்கிரம் உன் இதயம் குளிரும். நமது நாட்டுப் பகுதிகளைப் பிடித்த சாக இனத்தினரையும், யவனர்களையும், பஹ்லவரையும் வெகு சீக்கிரம் அவர்கள் சொந்த ஊர்களுக்கு அனுப்பி விடுகிறேன்'' என்று சொன்னான். அவன் குரலில் உணர்ச்சி பரிபூர்ணமாக ஒலித்தது.

மைந்தன் பேச்சினால் பூரிப்படைந்த அந்த வீரத்தாய் ''அதற்கு என்ன செய்யப் போகிறாய் மகனே?'' என்று வினவினாள்.

''படை திரட்ட உத்தரவிட்டிருக்கிறேன். வெகு சீக்கிரம் இந்த மேற்கு மலைக்கு அப்புறம் உள்ள *அபராந்தாவில் இருப்பேன்'' என்றுகூறியகௌதமிபுத்ரன் ''தாயே! அதைப் பற்றி உன்னைக் கலந்து பேசத்தான் வந்தேன்'' என்றான்.

அவனை உட்காரும்படி ராஜமாதா கை காட்ட அவள் காலடியில் உட்கார்ந்தான் கௌதமிபுத்ரன். ''மகனே! உன் இச்சையும் என் ஆசையும் நிறைவேறப் படைபலம் மட்டும் போதாது. தெய்வ பலமும் வேண்டும்'' என்றாள் தனது காலடியில் உட்கார்ந்த மகன் தலைமீது தனது கையை வைத்து ஆசீர்வதிக்கும் முறையில்.

அந்த வாலிபன் தாயைக் கேள்வி கேட்கும் பாவனையில் ஏறிட்டு நோக்கினான். தந்தைக்குப் பிறகு தனக்குத் தந்தையுமாகி வில் வித்தை, வாள்வித்தை அனைத்தும் போதித்த அந்த வீரமாதாவைப் பார்க்க, அவள் விதவைக் கோலங்கண்டு அவன் மனம் நெகிழ்ந்தது. ''அம்மா! உன்னைவிட இன்னொரு தெய்வம் இருக்கிறதா? மாத்ருதேவோ பவ என்று வேதம் உன்னைத்தானே முதலில் தெய்வமாகச் சொல்லிற்று?'' என்று கேட்டான் அந்த வாலிபவீரன்.

''தாய், தந்தை, குரு கண்கண்ட தெய்வங்கள். கண்ணுக்குப் புலப்படாத ஆத்மாவுக்கு மட்டும்புலப்படும்தெய்வமும்உண்டுமகனே. அவற்றையும் கண்ணுக்குக் காட்டத்தான் விக்ரகங்கள் இருக்கின்றன. அத்தகைய ஒரு தெய்வத்தின் சக்தி உனக்கு வேண்டும்'' என்ற ராஜமாதாவின் கண்கள் பிரதிஷ்டான நகரத்தைவிட்டு எங்கோ கனவுலகில் சஞ்சரித்தன. கனவில் பேசுவது போலவே பேச முற்பட்ட பாலஸ்ரீ ''மகனே! நமது மூதாதைகளான சிமுகனும், கிருஷ்ணனும், முதல் சதகர்ணியும்புஜபலத்தோடுதெய்வபலத்தையும் நம்பித்தான் சாதவாகனப் பேரரசை நிறுவினார்கள். அவர்கள் வழிபட்ட தெய்வத்தை நீயும் வழிபட்டு உன் போர் முரசைக் கொட்டு. வெற்றி நிச்சயம். உன் தாய் தனது வாழ்நாளிலேயே மீண்டும் அந்தப் பெரிய சாம்ராஜ்யத்தைப் பார்த்துவிட்டுப் பிராணனை விடுவாள்'' என்று உணர்ச்சியுடன் கூறினாள்.

தனது மூதாதைகளின் வெற்றிக்கு ஏதோ தெய்வபலம் காரணம் என்று தாய் சொன்னதைக் கேட்டு வியப்படைந்த கௌதமிபுத்ரன், ''அம்மா, அது எந்த தெய்வம்? எங்கிருக்கிறது?'' என்று வினவினான்.

அதுவரை உட்கார்ந்திருந்த மகாராணி பாலஸ்ரீ எழுந்து நின்று கொண்டு ''மகனே! எழுந்து கம்பீரமாக நிற்கும் இந்த ஸஹ்யாத்ரி (மேலை) மலைத்தொடரைப் பார். இங்கிருந்து சற்றுத் தெற்கே கொங்கணத்தின் வழியாகப் போனால் பூமிக்குக் கீழே கோவில்களை உடைய *தாபிலேசுவர் என்ற துறைமுகமிருக்கிறது. இந்தத் துறைமுகத்தில்தான் ஆதி காலம் தொட்டு அராபியர்களும், யவனர்களும், இதர நாட்டவரும் வந்து வாணிபம் செய்தார்கள். இது முன்பு அமராவதியென அழைக்கப்பட்டது. அங்கு காட்டு ரூபத்தில் தெய்வம் காட்சியளிப்பதாக ஒரு ஐதீகம் உண்டு. இப்பொழுதும் அங்கு பாதாளக் கோவில்கள் பல இருக்கின்றன. ஆனால் தாபிலேசுவரர் கோவில் மலைமீதே இருக்கிறது. அந்த இடத்துக்குப் போ. தாபிலேசு

* வடக்கு கொங்கணம்

* Dabhi leswar or Dabhol Port is on the ANJANVEL RIVER. Former Name Amaravati – Maharashtra State Gazetteer, Ratnagiri Dt. Page. 97.

வரரையும் பாதாளத்திலுள்ள சண்டிகா தேவியையும் தரிசித்து வந்து போருக்குப் புறப்படு'' என்று ஆவேசத்துடன் கூறினாள்.

தாயின் உத்தரவுப்படி அன்றே புறப்படத் தீர்மானித்தான் கௌதமிபுத்ரன். தனது பெரும்புரவிக்குச் சேணமிட்டுக் கட்டாரியும் வாளும் தரித்து, தாயின் திருவடி தொட்டுப் புறப்பட முயன்ற மகனுக்கு ஓர் எச்சரிக்கையும் விடுத்தாள் பாலஸ்ரீ. ''மகனே! நான் சொல்வதை விளையாட்டாக நினைக்காதே. அந்த மலைக்காட்டில் அடிக்கடி பிசாசுகள் உலாவுவதாகக் கேள்வி. எதற்கும் எச்சரிக்கையுடனிரு'' என்று கூறினாள்.

வியப்பு நிறைந்த விழிகளைத் தாயின் மீது திருப்பிய கௌதமிபுத்ரன் ''என்ன அம்மா! பிசாசா?'' என்று குரலிலும் வியப்பு ஒலிக்க வினவினான்.

''ஆம் மகனே! அங்கு ஏதோ ஒரு மோகினிப் பிசாசு உலாவுவதாகவும், அடிக்கடி அது தரைக்கு மேலே வந்து பூமிக்குள் போய் விடுவதாகவும் வதந்தி இருக்கிறது. அது பொய்யாகவும் இருக்கலாம். எதற்கும் எச்சரிக்கையாக இரு'' என்றாள்.

''இதை நீ நம்புகிறாயா?'' என்றான் கௌதமிபுத்ரன்.

''நான் முதலில் நம்பவில்லை. ஆனால் வதந்தி நாளாக நாளாக வலுக்கிறது. அந்தப் பிசாசுக்கு ஒரு பெயரும் சொல்கிறார்கள்'' என்றாள் பாலஸ்ரீ.

''பெயரா!'' கௌதமிபுத்ரனின் வியப்பு உச்சிக்குச் சென்றது.

''ஆம் மகனே. பெயரும் விசித்திரமாயிருக்கிறது''.

''என்ன பெயர் அம்மா?''

''சித்தரஞ்சனி!''

''ஏதோ ராகத்தின் பெயர் போலிருக்கிறதே?''

''ஆம். அது சில இரவுகளில் அர்த்த ஜாமத்தில் பாடுமாம். அதைப் பாடும் பாவை என்றும் சொல்கிறார்கள்.''

பிரமித்து நின்றான் கௌதமிபுத்ரன். ''அம்மா! அந்தப் பிசாசு அழகாகவும், பாடுவதாகவும் இருந்தால் அதை நான் பிடித்து வருகிறேன்'' என்று கூறி நகைத்துக் கொண்டே புரவி மீது தாவினான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அந்த நகைப்பு மறைந்தது. அந்தப் பாடும் பாவையைப் பார்க்கவும் கேட்கவும் செய்தான் கௌதமிபுத்ரன்.

(தொடரும்)

அருள்வாக்கு

வேதத்தைப் பொறுத்தமட்டில் அதை எங்கேயும் கல்வெட்டில் எழுதி வைத்திருக்கவில்லை. ஆனபடியால் லிபியைப் பார்த்துக் கால நிர்ணயம் பண்ண வேண்டிய பிரச்னை இல்லை.

பாஷை ரீதியில் உள்ள இன்னொரு விதமான அடிப்படையில்தான், வேத காலத்தை ஆராய்கிறார்கள். அது என்னவென்றால், வார்த்தைகளின் ரூபம், ஒலிகளின் வடிவம் மாறிக் கொண்டே வந்திருக்கிறது. சங்க காலத்தில் இருந்த அநேக தமிழ் வார்த்தைகள் இப்போது ரொம்பவும் உருமாறியிருக்கின்றன. ஒவ்வொரு பாஷையிலும் இப்படியேதான். சில சப்தங்கள் தேய்ந்து போகின்றன. சப்தம் மட்டுமின்றி அர்த்தமும் மாறுகிறது. இப்போது 'வெகுளி' என்றால் 'அப்பாவி' என்று அர்த்தம் பண்ணிக் கொள்கிறோம். ஆனால் ஆதியில், 'வெகுளி' என்றால் கோபம், கோபிஷ்டன் என்று அர்த்தம் இருந்தது. இப்போதும் கூட 'வெகுண்டு எழுந்தான்' என்கிற போது பழைய அர்த்தத்தில் தான் சொல்கிறோம். பழைய காலத்தில் 'மாண்ட' என்றால் 'செத்துப் போன' என்ற அர்த்தமே கிடையாது. 'புகழுடைய' என்பதே அதன் அர்த்தம் என்று ஒரு தமிழ்ப் புலவர் சொன்னார். இதே மாதிரி ஸம்ஸ்கிருதத்தில் உண்டு. பிற்காலக் காவியங்களைப் புரிந்து கொள்கிற மாதிரி வேதங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை. எல்லா பாஷையிலுமே இப்படி உண்டு. இதில் நம் தேச பாஷைகள் எவ்வளவோ தேவலை. இங்கிலீஷ் பாஷையில் ஒரு ஆயிர வருஷத்துக்கே உட்பட்ட **Anglo Saxon** என்கிற ஓல்ட் இங்கிலீஷில் ஒரு வரி கூட இன்றைய வெள்ளைக்காரர்களுக்குப் புரியாது. ஒரு முந்நூற்றுச் சொச்சம் வருஷத்திலேயே அமெரிக்காவில் இங்கிலீஷ் ரொம்பவும் மாறி 'அமெரிக்கன் இங்கிலீஷ்' என்று தனியாகப் பெயர் வைக்கிற அளவுக்கு ரூப பேதம் அடைந்திருக்கிறது!

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



பூலோக சொர்க்கம் கோவாவைச் சுற்றி...



• பனாஜி நகரின் ஒரு தோற்றம்.

குல்மொஹர்பூக்கள்நிறைந்தகோவாவை எப்படிச் சுற்றி வந்தாலும் அழகுதான். கோவாவைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பும் சமயம் உங்கள் மனதில் ஓர் ஆழமான பசுமையான வடுவை ஏற்படுத்தும் திறன் கோவாவிற்கு நிச்சயம் உண்டு.

கோவாவை டூரிஸ்ட் பஸ்களில் ஏறிச் சுற்றிப் பார்ப்பதைப் போன்றதொரு முட்டாள்தனமான செய்கை வேறெங்குமே இருக்க முடியாது. வழிகாட்டிகள் இயந்திரரீதியில் புலம்புகிறார்கள். (டேப் பண்ணி வைத்தால் இன்னும் மேலாக இருக்குமோ?) ஓர் இடத்திற்குப் பத்து நிமிஷம்தான் டயம் என்கிறார்கள். போகிறவழியைப்பற்றியெல்லாம் பேச மறுத்து கூண்டுக்குள் அடைபடும் சிறைப் பறவைபோல் டிரைவர் காபினுக்குள்ளேயே அமர்ந்து விடுகிறார்கள் கைடுகள்.

ஆனால் நாங்கள் இந்த பஸ் போன இடங்களையெல்லாம் தனியாகவும் போய்ச் சுற்றி வந்தோம். வெகு ரம்மியமான நேரங்கள் அவை. பூலோகத்தில் ஒரு சொர்க்கம் உண்டெனில் அது கோவாதான் என்று சொல்ல வைக்கும் வசந்த நாழிகைகள் அவை.

முதலில் மீராமர் கடற்கரை. தலைநகரிலிருந்து (பனாஜி) ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் இக்கடற்கரை மட்டுந்தான் தலைநகரின் மடியிலேயே அமைந்திருக்கும் ஒரே கடற்கரை.

கடற்கரையில் ஒரு பெரிய திமிங்கிலம் (மண்ணால் உருவாகி பெயின்ட் பூசப்பட்டது) வாய் பிளந்து நிற்கிறது. பக்கத்தில் கோவாவின் முதல் முதலமைச்சர் தயானந்த் பாண்டேகரின் சமாதி. அண்ணா சமாதி போல் அழகுசெய்யத்தெரியவில்லை கோவாவாசிகளுக்கு. கேட்பார் இல்லாமல் சமாதி வெகு அமைதியாய் இருக்கிறது. பக்கத்திலேயே ஒரு சிலை. சாதாரணச் சிலை என்று சொல்லி விட முடியாது. கோவாவில் மத ஒற்றுமை இருக்கிறது என்பதைக் காட்டும் சிலை. ஒரு போர்த்துக்கீசியரும், ஒரு ஹிந்துவும் ஒருசேர வாளை ஏந்திப் பிடித்திருக்கிறார்கள்.

இந்தக் கடற்கரையில் இரவுநேரங்களில் படகுப் போக்குவரத்து நடக்கிறது. இரும்புச் சுரங்கத்திலிருந்து வெட்டப்பட்ட இரும்புக் கனி ஏந்திய படகுகள் செல்லும் ஊர்வலம். நீரெங்கும் விளக்குத் தோரணம் கட்டியது போல் இரவில் பார்க்க வெகு அழகாக இருக்கும் ஒரு காட்சி.

கடற்கரையில் பார் இருக்கிறது. சடபடா, சடபடா என்று வாணலியில் இரும்புக் கரண்டியால் ஒலி எழுப்பித் தட்டித் தயாரிக்கப்படும் பாவ்பாஜி கடை இருக்கிறது. மழையற்ற நாட்களில் டூரிஸ்டுகள் இந்தக் கடற்கரையிலேயே தென்னைகளின் தென்றல் வருடலில் கண்ணை மூடிப் படுக்கலாம். எவ்வளவு நேரம் அமர்ந்திருந்தாலும் எழுந்து வர மனம் இடங்கொடுக்காத கடற்கரை!

கடற்கரையிலிருந்து நூல்பிடித்தாற்போல ஒரு இரண்டுகிலோமீட்டர்தள்ளிப் போனால்


ஒரு முக்கியமான இயற்கை அழகு கொஞ்சும் இடத்தை அடையலாம். அந்த இடத்தில் கடல் வளைகிறது. மாண்டோவி நதியும், ஜுவாரி நதியும் தீராத மோகத் தாகத்துடன் சங்கமிக்கின்றன. அங்கேதான் 'ஏக் தூஜே கேலியே' விற்காக கமலஹாசனும், ரத்தியும் பிணமாக உருண்டார்கள் என்று சொல்கிறார்கள். அந்த இடத்தின் பெயர் டோனா பாலா. பாலா என்பது ஒரு பெண்ணின் பெயர் டோனா எனும் சொல் போர்ச்சுக்கீசிய மொழிப்படி அம்மணி என்று அர்த்தமாகிறது.

அந்த டோனா பாலாவில் ஒரு சிறு குன்று. படி வெட்டி மேலே போக வசதி செய்திருக்கிறார்கள். மேலே போனோம். என்ன ஒரு காட்சி, கண் முன் விரிகிறது என்கிறீர்கள்... அப்பப்பா! நூற்றுக்கணக்கில் தென்னைகள். அந்தத் தென்னையின் பாதங்களை வருடும் கடலலைகள். கப்பல்களும், படகுகளும் உலாவும் அலைகள் நிறைந்த கடல். ப்ளீஸ் இயற்கையைக் காதலிக்கும் யாரும் இந்த இடத்தைப் பார்க்காமல் சாகக் கூடாது. அப்படியே இறந்தாலும் எமதர்மராஜன் திருப்பி அனுப்பி விடுவான் டோனா பாலாவைப் பார்த்து விட்டு வரும்படி. அத்தனை அழகு! இந்த டோனா பாலாவில் ஒரு படகுத் துறை. ஒரு மணிக்கு ஒரு படகு வருகிறது. மக்களை இறக்குகிறது. மக்களை ஏற்றிக் கொள்கிறது. அங்கிருந்து மார்மகோவா துறைமுகத்திற்குப் போகிறது.

அந்தப் படகில் போக வேண்டாமா என்ன? போனோம்.

அந்தப் படகுப் பிரயாணம் மறக்க முடியாத ஓர் அனுபவம். கிட்டத்தட்ட அரை மணி நேர படகுப் பிரயாணம். அந்தப் படகு காற்றில் மிதக்கும் ஒற்றைத்தாள் போல் கடலில் ஆடும்போது பிடித்துக் கொள்ளாதவர்கள் உருளப் பார்க்கிறார்கள். சின்னப் பெண்கள் 'வீல்' என்று அலறுகிறார்கள். அந்தப் படகிற்கு மோட்டார் இருதயம் பொருந்திய ஒரு சுரங்க அறை. அதன் உச்சிக் குமிழியில் சுக்கானைப் பிடிக்கும் மாலுமி: ஆடி ஆடி அலைவரும் பயணம் செய்யும் போது, கல்யாண வயது தாண்டிய கன்னிப் பெண்ணைப் போல், எதையோ சொல்லக் குமுறிக் குமுறி அருகில் வந்து, பின் தயங்கிச் சொல்லாமல் பின் வாங்கும் சமுத்திர குமாரி. படகுத் துறைமுகத்தை நெருங்கும் போது வரிசையாக நிற்கும் இயந்திரப் படகுகள் கண்ணை நிறைக்கின்றன. பெயின்டே பார்க்காதது துருப் பிடித்த படகுகள்; நம்மூர் ரயில்வே ஸ்டேஷன் வாசலில் நிற்கும் சைக்கிள்கள் போல! பயணம் செய்யும் படகு மெல்ல மெல்லக் கரையை எட்டுகிறது. தண்ணீரில் நடனம் ஆடிக் கொண்டே நிற்கிறது. படகிலிருந்து கரைக்குத் தாவும் ஒவ்வொரு பெண்ணின் முகத்திலும் எத்தனை சிரிப்பு! என்ன ஒரு நாணப் புன்னகை!

இதுதான் மார்மகோவா துறைமுகம். 'கோல்டன் கேட் வே ஆஃப் இந்தியா' என்று அந்நிய நாட்டாரால் சிறப்பிக்கப்பட்ட துறைமுகம். துறைமுகத்தை ஒட்டி சாலை. உள்ளூர்




* மாயெம் ஏரி.




* கஷர்டோலிம் அருகே ஆறும் பாலமும்.

* மங்கேஷ்கர் கோயில்.





* போர்த்துக்கீசிய — இந்தியப் பிணைப்பு.



* மர்மகோவா துறைமுகம்.

மாடுகள் முதுகைக் கொண்டு வந்து தேய்க்கும் அளவிற்கு அந்த சாலைக்குள் பிரவேசிக்கும் ரயில்கள்; ரயில் நிலையம்.

துறைமுகம் கொஞ்சம் இறக்கமான இடத்தில் அமைந்திருக்கிறது. அங்கிருந்து மேல் நோக்கி வாஸ்கோ ட காமாவிற்குச் செல்லும் பாதை அனுமார் வால் போல் சுருண்டு சுருண்டு நீள்கிறது. அந்தப் பாதையில் காலார நடந்தால்... இதோ இந்தப் பக்கம் விதவிதமாய் விளையாட்டுக் கப்பல்கள். அட, பக்கத்திலேயே ஆயிரம் ஆயிரம் ராட்சசர்கள் கொண்டு வந்து குவித்த நெல் குன்றுகள் போல இரும்புக் கனிக் குன்றுகள். அத்தனையும் தூரதேசம் போகக் காத்திருக்கும் இரும்புக் கனி. அவற்றை ஸ்பூன் ஸ்பூனாய் அள்ளிச் செல்லும் லாரிகள். தீப்பெட்டி ரயில்கள். ஒட்டகச் சிவிங்கி கிரேன்கள்.

இந்தத் துறைமுகத்திலிருந்துதான் வாஸ்கோ நகரத்திற்கு பஸ்கள் செல்கின்றன. பத்து நிமிஷப் பயணத்தில் வாஸ்கோவை அடைகின்றன. துறைமுகம் மர்மகோவா துறைமுகம் எனப்படுகிறது. இந்தத் துறைமுகத்திலிருந்துதான் இரும்புக்கனி ஏற்றுமதி செய்யப்படுகிறது. நிறைய சரக்குக் கப்பல்கள் வந்து ஓய்வெடுக்கும் துறைமுகம். கப்பலில் வரும் மாலுமிகள் இந்திய மதுவகைகளைச் சுவைத்தார்கள். அப்புறம் இந்திய மாதுவகைகளைச் சுவைக்க ஆர்வங்கொண்டதால் ஏற்பட்டதுதான் கோவாவின் பிரசித்தமான பைனா காலனி. பம்பாயின் க்ராண்ட் ரோடிற்கு நிகராக இதைச் சொல்லலாம். இந்தியாவின் அத்தனை மாநிலங்களிலிருந்தும் பெண்கள் இந்தக் கடற்கரைக் காலனியில் இறக்குமதியாகி, ஒரு சாண் வயிற்றுக்காக 'ஆவோ ஸாப், பாஞ்ச் ருப்யா' என்கிறார்கள்; கொடுமை!

மர்மகோவாவை விட்டுப் பிரிய சிறிதும் மனமின்றிப் பிரிந்து வாஸ்கோவை அடைந்தோம். திட்டமிட்டுக் கட்டப்பட்ட நகரம். வெகு சுத்தமான நகரம். கவுன் போட்ட பெண்மணிகளும், சேலை கட்டிய மாதரும் சர்வ சாதாரணமாக அலையும் இந்த ஊரில் அவ்வளவாகப் பார்க்கமுடியாதது—பார்கள். நிறையப் பார்க்க முடிந்தது மீன் கூடை சுமக்கும் பெண்கள்.

இந்த ஊரிலிருந்து பஞ்சிமிற்குப் போகும் வழியில் கார்டோலிம் என்றொரு ஊர். அங்கே ஒரு ஆறு. அந்த ஆற்றின் மீது கட்டப்பட்ட ஒரு பாலம். சாதாரணப் பாலம் இல்லை. பாாாலம். இந்த பாலம் வரை, சாலை, தென்னைகள் நிறைந்த ஆற்றோடு கைகோத்து ஓடி வருகிறது. கரையில் அங்கங்கே பெரும் படகுகள். அங்கேயும் ஒரு மோட்டார் பைக் குடை சாய்ந்திருந்தது. வண்டிக்குப் பத்தடி தள்ளி சோகக் கதை சுமந்த ஒரு ஹெல்மெட் அநாதையாய்க் கிடந்தது!

*****

மறுநாள் காலை வெள்ளி. மாப்ஸா என்றொரு ஊர் இருக்கிறதாம். அங்கே வெள்ளிக்கு வெள்ளி சந்தை கூடுகிறதாம். பார்க்க படு விசேஷமாம் என்றதினால் அங்கே கிளம்பினோம். 'மாப்ஸா,' 'மாப்ஸா' என்று கத்திக் கத்தி ஆள் சேர்க்கப்பட்ட பஸ்ஸில் நுழைந்து மூச்சுத் திணறி நின்றோம். கிட்டத்தட்ட அரை மணிநேரப் பிரயாணத்திற்கப்பால் மாப்ஸா போய்ச் சேர்ந்தோம். பஸ்ஸிலிருந்து கீழே இறங்கியவுடன் மார்க்கெட்டில்தான் காலை வைக்க முடிகிறது.



* மாப்ஸா மார்க்கெட்.

மார்க்கெட் கொத்தவால் சாவடி போல் அசிங்கமாய் இல்லை. ஒரு பக்கம் காய்கறி. ஒரு பக்கம் பானைகள். ஒரு பக்கம் ரெடிமேட் துணி வகைகள். ஒரு பக்கம் கரும்பு ஜூஸ், லிம்கா, கோல்ட் ஸ்பாட். ஒரு பக்கம் மீன்கள். ஒரு பக்கம் சிப்பிகள்; சிப்பிகள் திறக்கப்படாதவை. மரத்தால் ஆன லிட்டர்படிகளில் நிரப்பிக் கூவிக் கூவி விற்கிறார்கள். அந்த சிப்பியை உடைத்து உள்ளே இருக்கும் ஜீவனை கறி சமைத்து உண்கிறார்களாம்!

கவுன் மாட்டிய பானைவிற்பனையாளர் எங்கள் காமிராவைப் பார்த்து நாணத்துடன் திரும்பிக் கொண்டார். மீன் கூடைக்காரி மட்டும் 'காட்டோ' 'காட்டோ' என்று கொங்கணியில் கொஞ்சிவிட்டு ஜம்மென்று போஸ் கொடுத்தார். மார்க்கெட்டிற்கு வெளிப்புறம் மாம்பலம் ரங்கநாதன் தெரு காசிமைச் சந்தித்தோம். ரெடிமேட், டிராயர்கள், சட்டைகள் என்று வைத்திருந்தார். ஊர்

ஊராகப் போய் விற்பவராம் பிடித்த ஊர் கார்வாராம்.

*****

மாப்ஸாவிலிருந்து பிசோலிம் என்ற ஊருக்குப் பயணம். ஒருமணி நேரப் பயணம். பஸ்ஸில் எக்கச்சக்கக் கூட்டம். டிரைவர் காபினுக்குள் உயரமான இருக்கைகளில் இடம் கிடைத்தது. உட்கார்ந்தோம். எங்களுக்குமிக அருகில் அந்தப் பெண். இடுப்பில் இரு வயதுக் குழந்தை. கூட்டம் அவளையும், அவள் குழந்தையையும் நெரித்துக் கொண்டிருக்க், குழந்தையைக் கீழே நிற்க வைத்தாள். பாதித் தூரம் போன போது திடீரென்று ஒரு குரல். அதிர்ச்சிக் குரல். அழுகைக் குரல். பின்னால் திரும்பிப் பார்த்தால் அந்தக் குழந்தை ... அந்தக் குழந்தை ... கூட்ட நெரிசலில் மூச்சுத் திணறி, கண்கள் திறந்திருக்க, நாக்குத் துருத்தியிருக்க மயக்கமாகிப் போயிருந்தது. அந்தப் பெண்ணின் அழுகுரல் இன்னும் எங்கள் காதுகளில் ரீங்காரமிடுகிறது.

'ஸஞ்சய், மேரே முன்னு... ஸஞ்சய் மேரே முன்னு' என்று நெஞ்சு பிளக்கக் கத்தினாள்; குழந்தையைக் கையில் ஏந்தி முத்தம் ஈந்தாள். டிரைவர் தண்ணீர் தர, பயனின்றி

* பானை விற்கும் சட்டைக்காரி.



அந்தக் குழந்தையும், தாயும் இறங்கி வேறு வேனில் அழுகையுடன் ஆஸ்பிடலை நோக்கி விரைந்தார்கள்.

அந்தச் சோகத் தாக்குதலுடன் பிசோலிம் போய்ச் சேர்ந்தோம். அங்கிருந்து மாயேம் ஏரி மூன்று கி. மீட்டர். நினைத்துக் கொண்டால் எப்போதாவது ஒருமுறை பஸ் போகும் போல. வாடகை மோட்டார் சைக்கிளில் போனோம்.

கோவாவில் மட்டும் விசேஷமான இந்த வாடகை மோட்டார் சைக்கிள்கள் உலவ ஆரம்பித்த கதை புதுமையானது. ஒரு காலத்தில் வெளிநாட்டுக்காரர்கள் டாக்ஸி, ஆட்டோக்களையெல்லாம் ஆக்கிரமிக்க, ஏழை உள்ளூர்வாசிகளில் ஒருவருக்கு இந்த எண்ணம் உதயமாக, வாடகை மோட்டார் சைக்கிள்கள் புறப்பட்டன. கோவாவில் ஹெல்மெட் அவசியம். ஆனால் பின்னால் உட்காருபவர் அணியத் தேவையில்லை. பெண்கள் கூட கூச்சமின்றி, இங்கே ஆட்டோவில் ஏறுவதைப் போல், அங்கே மோட்டார் சைக்கிளில் ஏறுகிறார்கள்.

அந்த வாடகை மோட்டார் சைக்கிளில் ஏறி இயற்கை கொஞ்சும் ஏரியை அடைந்தோம். எவ்வளவு பெரிய ஏரி! நூறு கப்பல்களை இடிக்காமல் நங்கூரம் பாய்ச்சலாம். 'க்வாக் க்வாக்' என்று வாத்துகளின் அணிவகுப்பு ஒருபுறம். 'களீர் களீர்' எனச் சிரிக்கும் இளசுகள் பட்டாளம் ஒருபுறம். 'பளீர்' 'பளீர்' என்று வெள்ளையாய்ப் பூத்த வில்லி மலர்கள் ஒருபுறம். இஷ்டமிருந்தால் படகில் ஏறி பெடல் மிதிக்கலாம். இல்லையா, காப்பி அருந்திய வண்ணம் இயற்கை எழிலையும் பருகலாம். உல்லாசத்தை விரும்புவோருக்கு உன்னதமான ஓர் இடம் மாயேம் ஏரி.

மறுபடி பஞ்சிம். அங்கிருந்து பழைய கோவாவிற்குப் பயணம். அங்கேதான் புகழ் பெற்ற 'பாம் ஜீஸஸ்' சர்ச். இந்த சர்ச்சில் ஒரு மாபெரும் ப்ரேயர் ஹால். நிறைய வேலைப்பாடுகளுடன். இந்த சர்ச்சில்தான் நானூறு வருடங்களாகப் பாதுகாக்கப்படும் புனித ஃப்ரான்ஸிஸ் சேவியர் உடல் பேழைக்குள் உறங்குகிறது. இயேசு சிலையும் அதன் கீழ் உண்டியலும் இருக்க உள்ளே நுழைந்தவுடன் பெரிய பேஸினில் புனித நீர் இருக்கிறது. நம் கோயில் குளத்து நீரை தலையில் தெளித்துக் கொள்வது போல் மக்கள் தெளித்துக் கொள்கிறார்கள்.

சர்ச் வாசலில் வெள்ளை உடையில் தேவதை போல் ஒரு மணமகள் காத்திருக்க, ஆண்கள் அனைவரும் கோட் சூட்டுடன் இருந்தார்கள். இருந்தாக வேண்டுமாம். அதுதான் கிருத்துவ திருமண விசேஷம். திருமணம் முடிந்தவுடன் (பாதிரியார்—மோதிரம் மாற்றுதல் எல்லாம் வழக்கப்படி) ஒரு பொது இடத்தில் டான்ஸ் நடைபெறுகிறது. ஆண்களும், பெண்களும் கலந்து கொள்ளும் டான்ஸ். பிறகு கல்யாணத்திற்கென விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட பானம் ஒன்று.

* டோனு பாலா.





* பாம் ஜீஸஸ் சர்ச்.

வழங்கப்படும். அப்புறம் காக்டெய்ல் பார்ட்டி!

மணப்பெண்ணை மனத்தில் வாழ்த்தி விட்டு (மணமகன் வரவில்லை) மங்கேஷ்கர் கோயிலுக்குப் பயணம். புகழ்பெற்ற ஹிந்திப் பாடகியான லதா மங்கேஷ்கரின் சொந்த ஊர் இதுதான். இந்த ஊர் கோயிலில் சிவனுக்கு மங்கேஷ்கர் என்று திருநாமம். காட்டுப் பூக்களை மாலையாகச் செய்து 'ஒரு ரூபாய்' 'ஒரு ரூபாய்' என்று கூவி விற்கிறார்கள். கோயிலில் விசேஷமாய்ச் சொல்ல எதுவும் இல்லை என்றாலும் ஹிந்துக்களுக்காக என்று கட்டப்பட்ட கோயில்களில் இது பிரசித்தம். அருகில் இருக்கும் சாந்ததுர்கா கோயிலும் டூரிஸ்டுகளை மட்டுமே நம்பியிருக்கிறது. வறண்ட குளம். ஆனால் பளிங்குக் கல் தளத்துடன் கோயில் கர்ப்பக்கிருகம் வரை. சாந்த துர்கா அட்டகாசமாய்ப் புன்னகைத்து அனைவரையும் ஆட்கொள்கிறாள்.

கோவாவில் பார்க்க இன்னும் எத்தனை கோயில்கள். எத்தனை சர்ச்சுகள்!

சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆனால் பார்த்ததற்குச் சமமாகாது.

எனவே—

ஒருமுறை கோவா போய் வாருங்களேன்!

கோவா பை நைட்

இரவு ஏழு மணி சுமாருக்குப் பஸ்கள் தூங்கப் போய்விடுகின்றன. ஊர்வாசிகள் தங்கள் வீடுகளில் முடங்கிவிடுகிறார்கள். அவர்களுக்கு மதுக் கோப்பைகள் துணையாய் இருக்கின்றன. சில சமயங்களில் அரட்டைக் கச்சேரி. சில சமயங்களில் காரம் விளையாட்டு. ஒன்பது மணிக்கெல்லாம் படுக்கை. ஆந்தைகள் போல் விழித்துக் கொண்டு சுற்றி அலைபவர்கள் டூரிஸ்டுகளே.

பொதுவாக டூரிஸ்டுகள் கோவாவில் நுழையும்போது தவறான அபிப்பிராயத்துடன் நுழைகிறார்கள்.

மது, மாது.

மது நிறைய.

மாது?

நாங்கள் சுற்றியவரை, விசாரித்தவரை பனாஜியில், மட்காவில், மாப்ஸாவில் அந்த மாதிரி மாதுகள் இல்லை.


இருந்தாலும் மிக அந்தரங்கமாக விசாரித்தபோது கிடைத்த தகவல்கள் சில சுவையானவையாக இருந்தன.

கோவாவின் தலைநகரான பனாஜியிலிருந்து சுமார் 22 கி.மீ. தூரத்தில் இருக்கும் மங்கேஷ்கர் கோவிலை ஒட்டிய ஒரு இடம் மர்தோலா. இந்துக்கள் நிறைய உள்ள இடம். ஊருக்குள் நுழைந்தாலே சந்தனம் மணக்கிறது. ஊதுவத்தி புகைகிறது. அகிற்கட்டைகள் ஆவியாகின்றன. ஒருபுனிதமான இடத்திற்குள் வந்துவிட்டதைப் போல் உணர்கிறோம். பனாஜியில், வாஸ்கோவில் எல்லாம் தப்படிக்குத் தப்படி இருக்கும் 'பார்கள்' இங்கே மருந்துக்குக்கூட இல்லை.

இந்த மர்தோலாவில்தான் தேவதாசிகள் வசிக்கிறார்கள். அந்நாளில் தேவதாசிகள் நிறைய பேர் தங்கள் குலத்தொழிலைச் செய்து வந்தார்கள். இப்போது இவர்களின் வாரிசுகள் டாக்டர்களாகவும், இன்ஜினியர்களாகவும் உருமாறியுள்ளபடியால் தேவதாசி தொழிலுக்கு முழுமையாக ஒரு முழுக்கு. ஊரில் போய்த் தேவதாசி அது இது என்று ஏதாவது பேசினால் எல்லா எலும்புகளுடனும் திரும்பி வருவது கஷ்டம்.

தம்பிடி மார்ட்டீ என்றொரு இடம். பனாஜியிலிருந்து சுமார் எழுபது கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. இந்த இடத்திற்கு விசேஷமான ஒரு சிறப்புப் பெயர் 'சிவப்பு மண்.' இங்கேயும் அந்தத் தேவதாசிகள் அந்தக் காலத்தில் இருந்ததால் அந்தப் பெயர்.

இப்போது கோவாவில் தேவதாசிகளே இல்லை. ஆனாலும் பைனா பீச்சில் சில 'சிவப்பு விளக்குப்' பெண்கள் இருப்பது உண்மைதான்!



• மிக்ஸி
பரிசு பெறும் கட்டுரை
• சிறுநீரகச் சம்பந்தமான நோய்களைப்
பற்றி முழுமையாகக் கூறும் மருத்துவப் பேட்டி!
• 'மின்சாரபில்'லை எப்படிக் குறைக்கலாம்?
• சீதனம் பெண்களுக்கே உரியது!
- சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை ஒட்டிய கட்டுரை.

ரூ. 5,000

மதிப்புள்ள

குக்கிங் ரேஞ்ஜ்

பரிசாக அளிக்கப்படும்

போட்டி!

விவரங்களுக்கு

மங்கையர் மலர்

ஆகஸ்ட் 85
இதழைப்
பாருங்கள்

கிண்டி சென்னை-32

உணர்வுகள் உறங்குவதில்லை

1

வாழ்க்கை ஒரு தேடல்!

மார்கழி மாதத்து இரவு. வானம், துறவியின் மனம் போல் நிர்மலமாயிருந்தது. பௌர்ணமிக்கு இன்னும் இரண்டு தினங்கள் இருந்தன. சந்திரன் கொஞ்சம் மூளியாகப் பவனி போய்க் கொண்டிருந்தது. உறக்கத்திலிருந்து விழித்த சந்திரசூடன், சன்னல் வழியாக வெளியே பார்த்தார். ஒரு வெள்ளை நிறப் பறவை சன்னலை க் கடந்து சென்றது.

இந்த நேரத்தில் இது எங்கே போகிறது? இரவில் ஊர் சுற்றும் ரசிகன் போலிருக்கிறது. மணி என்ன இருக்கும்.....?

அவருடைய கேள்விக்குப் பதில் கொடுப்பதுபோல் கீழே ராதா வீட்டுக் கடிகாரம் அபஸ்வரத்தில் பாடத் தொடங்கியது. டிங் டாங் டிங்..... டாங் டிங் டாங்.....

ஆடச்சே, சீக்கிரந்தான் அடித்துத் தொலையேன். இதுஎப்போதும்முதலில் ஆரோகணம் அவரோகணம் முடித்த பிறகுதான் மணியைச் சொல்லும். சந்திரசூடன் படுத்தபடியே, அபஸ்வர ஆரோகணம் அவரோகணம் முடியும்வரை காத்திருந்தார். பிறகு 'சொர்' என்ற கரகரப்பு ஒலி. அதைத் தொடர்ந்து இரண்டு மணி அடித்தது. கீறல் விழுந்த வெண்கல ஓசை.

அது விக்டோரியா மகாராணி காலத்துக் கடிகாரமாம். ராதா சொல்லிச் சொல்லிப் பெருமைப் படுவாள். அவளுடைய தாத்தா வாங்கியதாம். அதனால்தான் விக்டோரியா மகாராணியின் வயது மாதிரி அதுவும் வயது ஏறிப் போய் இப்படித்தான் முக்கி முனகி, மூச்சு விட்டுக் கொண்டு ஆட்சி செலுத்துகிறது.

சுகமான பனி. போர்வைக்குள் ரசித்தபடி கிடந்தார் சந்திரசூடன். வெற்றிலையின் நினைவு வந்தது. வாய் துறுதுறுத்தது. வெற்றிலை போடவும் வேண்டும், எழுந்திருக்கவும் கூடாது. முடியுமா? சற்று நேரம் படுத்துக் கிடந்தார். முடியவில்லை. வெற்றிலையின் நினைவு, படுக்கை சுகத்தை உதறச் செய்தது. ஒரு சுகத்தைப் பெற மற்றொரு சுகத்தைத் தியாகம் செய்ய வேண்டியிருக்கிறது.

சந்திரசூடன் போர்வையை விலக்கி ஒதுக்கிவிட்டு எழுந்து உட்கார்ந்தார். பக்கத்து ஸ்டூலில் அவருக்காகவே காத்திருந்தது எவர்சில்வர் வெற்றிலைப் பெட்டி. பெட்டியின் மீது நிலவொளி, சன்னல் வழியாக விழுந்து கொண்டிருந்தது. அவர் வெற்றிலைப் பெட்டியை எடுத்துத் தம் அருகில் வைப்பதே ஒரு விதரசனைதான். காதலியை வேட்கையுடன் அருகே இழுத்து இருத்தி வைத்துக் கொள்வது மாதிரி.

அவர் ஒரு பிரும்மா. பிரும்மாவேதான். அவர் ஒப்புக் கொள்கிறாரோ, இல்லையோ, அவரைப் பிரும்மா என்றுதான் கீழே குடியிருக்கும் பார்வதி கூப்பிடுகிறாள்.

அவர் பிரும்மா. மாடியிலிருக்கும் அவருடைய அறை, படைப்புக்கான 'ஒர்க் ஷாப்' என்றுதான் அவள் கூறுகிறாள். ஒருவகையில் அதுவும் உண்மைதான். அந்தப் பட்டறையிலிருந்து உருவான நாவல்களில் படைக்கப்பட்ட பாத்திரங்கள், இலக்கிய ரசிகர்களை என்ன பாடுபடுத்திக் கொண்டிருக்கின்றன. கொஞ்சம் சிந்திக்கத் தெரிந்தவன் அவருடைய எழுத்துக்களைப் படித்துவிட்டால் போதும் தொலைந்தான். அதன் பிறகு, அவனுடைய சிந்தனைக்கு ஓய்வு கிடையாது. மண்டைக்குள்ளே புகுந்து எழுத்துக்கள் குறுகுறுத்துக் கொண்டே இருக்கும். இவர் எழுதுவதாலேயே இவர் துணை ஆசிரியராகப் பணிபுரியும் வாரப் பத்திரிகையின் புகழும், விற்பனையும் அபரிதமாக உயர்ந்துவிட்டன.

படுக்கையிலிருந்து எழுந்தவர், மெத்தை மீதே சம்மணம் போட்டு அமர்ந்து கொண்டார். அப்படி சம்மணம் போட்டு அமர்வது அவருடைய இயல்பு. வலதுகாலை மடக்கி இடது தொடைக்குக் கீழ் அமர்த்தி, இடது காலை வலது தொடை மீது வைத்துக் கொள்வார். அப்படி அமர்ந்துவிட்டார் என்றால், கொஞ்சம் சுறுசுறுப்பு வந்துவிட்டது என்று அர்த்தம். மொத்தத்தில் படு சோம்பேறி. தம்முடைய சோம்பலையே ரசிக்கும் ரசிகர். இப்படி அமரும்போது, மூளை மட்டும் சுறுசுறுப்பாகிவிடும்.

எழுதத் தொடங்கும்வரைதான் சோம்பல் அவரை ஒட்டியிருக்கும். ஒரு நாவலுக்கும் அடுத்ததற்கும் சில ஆண்டுகள் இடைவெளி கூட ஏற்பட்டதுண்டு. சிந்திக்கக்கூடச் சோம்பல்தான். வீணாகச் சிந்தித்து மூளைக்கு ஏன் வேலை கொடுக்க வேண்டும்; நிம்மதியாக இருப்பதை விட்டுவிட்டு? சும்மா இருப்பதே சுகம். ஆனால் ஓர் உத்வேகம் தோன்றி எழுத

ரா.சு.நல்லபெருமாள்

முனைந்துவிட்டால், பிறகு நிற்காது. காட்டாற்று வெள்ளந்தான். உள்ளே அடங்கிக் கிடந்த எண்ணங்கள் குதித்துத் துள்ளி ஆடத் தொடங்கிவிடும். எங்கோ கேட்டவை, எப்போதோ பார்த்தவை, படித்தவை, பேசியவை, சிந்தித்தவை, ரசித்தவை அனைத்தும் நான் முந்தி நீ முந்தி என்று கும்மாள மடித்தபடி அவருடைய சோம்பேறித்தனத்தை உடைத்துக் கிழித்துக் கொண்டுவரத் தொடங்கும்.

இப்போது வயது நாற்பதை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இதற்குள் அவர் பெற்றுவிட்ட அனுபவங்கள்! ஓ.....! அந்த அனுபவங்களோடு இணைந்து விரியும் கற்பனைகள் இப்போது எழுத்துக்களாக உருவெடுத்து வாசகர்களை மயக்குகின்றன.

சந்திரசூடன் குடியிருந்த மாடிக்குக் கீழே அந்த வளைவின் எதிர் வரிசையிலிருந்த வீட்டின் வாசற்கதவு திறக்கப்படும் ஓசை கேட்டது. சந்திரசூடன் சன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். ராதா, வாசற்கதவைத் திறந்து வைத்துக் கொண்டு நடை மீது அமர்ந்திருந்தது தெரிந்தது. பக்கத்துத் திண்ணையில் பரணி படுத்து உறங்கிக் கொண்டிருந்தான். அவனுக்குப் பதினெட்டு வயது இருக்கும். பி. ஏ. முதல் ஆண்டில் படித்துக் கொண்டிருந்தான். அவனுடைய தகப்பனார் தாசில்தாராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அண்மையில் வேறு ஊருக்கு மாற்றலாகிப் போய்விட்டார். பரணியின் படிப்பிற்காக அவனும் அவனுடைய பாட்டியும் அங்கே குடியிருந்தனர். ஞாயிறு தோறும் தகப்பனார் வந்துவிட்டுப் போவார். அவனுடைய தாயார் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டாள்.

படுத்திருந்த பரணி திடீரென்று விழித்துக் கொண்டு தலையைத் தூக்கிப் பார்த்தான். ராதாவைக் கண்டதும், "இன்னும் வரவில்லையா?" என்றான்.

ராதா தலையை அசைத்துவிட்டு வாசலை நோக்கினாள். பரணி மீண்டும் படுத்துக் கொண்டான். இன்னும் கோபால் வரவில்லை. அவருக்காகத்தான் ராதா காத்திருக்கிறாள். மணி இரண்டாகிவிட்டது. குடித்துவிட்டு எங்கே கிடக்கிறாரோ?

சந்திரசூடனுக்கு அவர் மீது கோபம் எழுந்தது. 'ஓர் அழகான அறிவுள்ள பெண்ணோடு வாழத் தெரியவில்லையே. இப்படி ஒருத்தி மனைவியாகக் கிடைப்பதற்கு போன ஜென்மத்தில் கோபால் தவம் செய்திருக்க வேண்டும். முட்டாள்..... முட்டாள்.....'




வைட்டமின்கள்
தெம்பும்
உடல்
ஆரோக்கியமும்
பெற
சில துளிகளே
தேவை

'உம்..... இப்படி ஒருவனைக் கணவனாகப் பெற இந்த ராதா என்ன பாவம் செய்தாளோ....?'

சந்திரசூடனின் மனத்தில் வலி எடுத்தது. தெருவில் ஆட்டோ ரிக்ஷாவின் சப்தம் கேட்டது. ராதா பரபரப்புடன் எழுந்து வாசலை நோக்கி விரைந்தாள். சற்று நேரத்தில் கோபாலைக் கைத்தாங்கலாக அழைத்து வந்தாள். அவர் ஏதோ உளறிக் கொண்டே அவளுடைய தோள் மீது சாய்ந்தவாறு தள்ளாடினார். நடை மீது ஏறியபோது சரிந்து விழுந்தார். ராதா அவரைத் தூக்க முயன்றாள். அவரோ அவளுடைய தோள்களைப் பற்றியபடி எழுந்திருக்கமுயன்றார். அவளால் தூக்க முடியவில்லை.

உதவிக்குப் போகச் சந்திரசூடன் எழுந்திருக்க முயன்றபோது, கீழே திண்ணையில் படுத்திருந்த பரணி, வாசலை நோக்கி ஓடிச் சென்றான்.

"என்ன அக்கா, இப்போதுதான் வருகிறாரா?" என்று கேட்டவாறே பரணி அவரைத் தூக்கினான். அவளும், அவனும் கோபாலைத் தூக்கி நிறுத்தினார்கள். அவர் தள்ளாடிக் கொண்டிருந்தார்.

"என்னடா பரணி, இன்னும் தூங்கவில்லையா?" என்று வாய் குளறியபடியே கேட்டார், கோபால்.

"உங்கள் ஆட்டோ சப்தத்தில் விழித்துவிட்டேன்" என்றான் பரணி.

"இன்றைக்குச் சீட்டாட்டம் முடிய நேரமாகிவிட்டது" என்று குளறியபடியே தள்ளாடி நடந்தார், கோபால்.

சந்திரசூடனுக்குக் கோபம் வந்தது. "மடப் பயல். இன்றைக்கு மட்டுமா நேரமாகிவிட்டது. முட்டாளே, உன் வாழ்க்கை முழுதுமே நேரமாகிப் போனதுதான்" என்று முனகினார்.

ராதாவும், பரணியும் கோபாலை அழைத்துக் கொண்டு அவருடைய வீட்டிற்குள் சென்றனர். உள்ளே சென்றதும், "பரணி, நீ போ, நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள் ராதா.

கோபாலை அவள் பொறுப்பில் விட்டு விட்டுத் தன் வீட்டுத் திண்ணையில் போய்ப் படுத்துக் கொண்டான் பரணி. சற்று நேரத்தில் ராதா தன் வீட்டுக் கதவைச் சாத்தித் தாழிட்டாள்.

எல்லாவற்றையும் மாடிச் சன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த சந்திரசூடன், எழுந்து, குளியலறைக்குச் சென்று வாயைக் கொப்பளித்துவிட்டுக் கட்டிலில் வந்து படுத்தார்.

காலையில் அவர் விழித்தெழுந்தபோது மணி எட்டாகிவிட்டது. பனிக்கால வெயில் சுளீரென்று உறைத்தது. கீழே குழாயடியில் நீர் இறைக்கும் சப்தத்தில்தான் விழித்தார். கீழே முற்றத்தில் அடிகுழாயின் ஒலி அதிகமாகவே இருந்தது. சந்திரசூடன் சன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். ராதா, ஓங்கி ஓங்கிக் குழாயை அடித்துக் கொண்டிருந்தாள். கணவன் மீதுள்ள கோபம் போலும். கணவனை அடிப்பதாக எண்ணிக் கொண்டு குழாயை மொத்துகிறாளோ.....?

அப்போது அவளுடைய முந்தானை சரிந்திருந்ததால் அவளுடைய இளமை மாருத மார்பகங்கள் அவருடைய பார்வையில் பட்டன. முப்பது வயதிலும் இளமை குன்ருத மேனி. அது மட்டுமா? இவளுடைய அழகு, அறிவுக் கூர்மை, ரசனை எல்லாமே சற்று மிகையானவைதாம்.

வாழ்க்கையைப் பற்றி ஒரு நாள் சொன்னுள்: "வாழ்க்கை என்பது ஒரு தேடல்தான். இரவில் நிம்மதியான தூக்கத்தைத் தேடிப் பெறுவதுதான் வாழ்க்கையின் குறிக்கோள். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

ஐயோ, நான் நினைக்கவே இல்லையே. நான் சிந்திக்காத ஒரு கோணத்தில் அவளுடைய சிந்தனை எவ்வளவுதுல்லியமாகவாழ்க்கையைக் கணித்திருக்கிறது!

ஓ.....! இது எவ்வளவு உண்மை! நிம்மதியான இரவைத் தேடிப் பெறுவதுதான் வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவம். பகலின் ஆட்டபாட்டங்களும், பரபரப்புக்களும், போராட்டங்களும் கடைசியில் எதை நாடி.....? ராதா சொன்னதுபோல் இரவின் மடியில் அமைதியான தூக்கத்தை நாடி.... எல்லாமே இதில் அடங்கிவிட்டன.

அவள் மீது சந்திரசூடனுக்குக் கழிவிரக்கம் தோன்றியது. கணவராக வாய்த்திருக்கும் கோபால் ஒரு பேராசிரியர். நல்ல வருமானம். ஆனல் இந்த நிம்மதியான தூக்கம்.....?

குடித்துவிட்டு, சீட்டாட்டத்தையும் முடித்து, இரவு கோபால் வீடு வந்து சேரும்போது மணி இரண்டோ அல்லது மூன்ருே ஆகிவிடும். இது ராதாவிற்குப் பழகிப் போன விஷயம். ஆனல் அவளுடைய வாழ்க்கை...? இரவில் அமைதியான தூக்கம்.....?

அவளுடைய ஏக்கம், பார்வையிலேயே தென்படும். உள்ளார்ந்த சோகம், முகத்தில் நிழலாடும்; பூரணச் சந்திரனில் கறும்புள்ளிகள் இருப்பது மாதிரி.

"முட்டாள்..... படுமுட்டாள்......" சந்திரசூடன் வாய்விட்டுக் கோபாலை ஏசினுர்.

"யார் சார் படுமுட்டாள்?" என்ற குரலைக் கேட்டு வாசலைப் பார்த்தார். பரணி உள்ளே வந்தான்.

"வாப்பா, பீஷ்மாச்சாரி" என்ருர் சந்திரசூடன்.

"சார், காலையிலே ரேடியோ நியூஸ் தெரியுமா?" என்று பரபரப்புடன் கேட்டான், பரணி.

"என்ன?" என்றவாறே எழுந்து உட்கார்ந்தார், வெற்றிலைப் பெட்டியை அருகே இழுத்தார்.

"நடிகை இந்திராணி செத்துப் போனுளாம்."

அவன் கூறி முடிப்பதற்குள் அதிர்ச்சியால் தாக்குண்டவராகத் துள்ளி எழுந்துவிட்டார், சந்திரசூடன். செய்தியை அவரால் ஜீரணிக்க முடியவில்லை.

"எப்போது நியூஸ்?" என்று பதற்றத்துடன் கேட்டார்.

"ரேடியோவில் காலை நியூஸில் முதலில் இதைத்தான் சொன்னுன்."

துக்கச் செய்தி சந்திரசூடனை உலுக்கிவிட்டது. சற்று நேரம் கண்களை மூடியவாறு நின்ருர். இந்திராணியைப் பற்றிய நினைவுகள் அனைத்தும் மனத்தில் குழுமின.

"அடிப் பாவிப் பெண்ணே" என்று அவருடைய வாய் முனகியது.

ஆற்ருமை உணர்வு அவரை அழுத்தியது.

(தொடரும்)

அட்டையில்...



அட்டையில் வெளியாகியுள்ள வண்ணக் கார்ட்டூனை வரைந்தவர் பிரபல கார்ட்டூனிஸ்ட் மாரியோ. இவர் பம்பாயிலும் கோவாவிலுமாக வசித்துக் கொண்டிருப்பவர். கோவாவை மிகவும் நேசிப்பவர். கோவாவைப் பற்றி 'Goa with Love' புத்தகமும் எழுதியுள்ளார்.

மாரியோ



ஏராளமான பாடல்களைப் பாடி கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துவிட்ட லதாமங்கேஷ்கரின் சொந்த ஊர் கோவாதான். "அனைவரும் ரசிக்கும் கோவாவில், நீங்கள் சிறு வயதில் வாழ்ந்த போது ரசித்தவை என்ன?" என்று லதாவின் சகோதரி ஆஷா போஸ்லேயிடம் கேட்டபோது, "சிறு வயதில் நாங்கள் வறுமையில் கஷ்டப்பட்டோம். அந்த நிலையில் எதை ரசித்திருக்க முடியும் எங்களால்?" என்கிருர்.

தகவல்: செம்பூர் சந்துரு

ஆஷா போஸ்லே

"உங்க வீட்டில் என்ஜினியரிங் படிச்ச பையன் இருக்கானுமே, எங்க பொண்ணுக்குப் பாக்கலாம்னு வந்தோம். ஜாதகம்லாம் பொருந்தியிருக்கு."

"பொண்ணுக்கு என்ன வயசு?"

"இந்த ஜூன் வந்தா இருபத்தெட்டு."

"பரவாயில்லே. ஆறு வருஷம் வித்தியாசமிருக்கு. வேலைக்குப் போருளோ?"

"ரெண்டு மூணு எடத்துக்குப் போட்டிருக்கிரு. கெடெச்சிடும்."

"பொண்ணை எங்க பாக்கலாம்?"

"நாளைக்கு மீராமர் பீச்சுக்கு அழைச்சிட்டு வரோம்."

"ஓ. கே."

சொஜ்ஜி, பஜ்ஜி, போய் லெட்டர் போடறும் பிஸினஸ் இல்லாமல் ஒரு பொது இடத்தில் பெண்—பிள்ளை பார்த்துக் கொள்கிருர்கள். பிடித்துவிட்டதா? நிச்சயதார்த்தத்தில் மோதிரம் மாற்றிக் கொள்கிருர்கள்.

வரதட்சணை?

உண்டு. ஆனுல் பெண்ணைப் பெற்றவர் பாங்கில் போய்க் கெஞ்சிப் புது நோட்டு எடுத்து வர வேண்டாம். தட்சணை பொன் நகைகள் வடிவில்தான். 'நோ கேஷ் ப்ளீஸ்!'

கல்யாணச் செலவு, சத்திரம், போக்குவரத்து, கொடுக்கும் ஐஸ்க்ரீம் எல்லா செலவும் ஆளுக்குப் பாதி. கல்யாணத்தில் ஐஸ்கிரீம் வழங்குவதோடு சரி; சாப்பாடெல்லாம் கிடையவே கிடையாது! சாதாரணமாகவே பெண் இருபத்தைந்தைத் தாண்டியிருப்பாள். பையன் முப்பதுக்கு அந்தண்டை இருப்பான். இந்ததாமதக்கல்யாணங்களால் ஒரு சௌகர்யம். இந்திய ஜனத்தொகைக்கு இவர்கள் வெயிட் சேர்ப்பது குறைச்சல். கல்யாணத்தன்று பெண்ணும், அவர் வீட்டாரும் மண்டபத்தில் வந்து காத்திருப்பார்கள். பந்தலில் உட்கார்ந்து இருக்கும் பெண்ணுக்குப் பக்கத்தில் ஒருகுட்டிப் பையனைப் பிடித்து உட்கார்த்திவிடுவார்கள். (முதல் குழந்தைபிள்ளையாய்ப்பிறக்கட்டும்). பையன் வீட்டினர் வரும் வழியைப் பார்த்துக் காத்

கோலா கல்யாண வைபோகமே!



திருமணத்தில் ஒரு சடங்கு.



திருப்பார்கள். புனித விளக்குடன் பையன் வீட்டினரைக் கூட்டி வருவார்கள். 'லமண்டியா' என்று சொல்கிறார்கள் இந்த நிகழ்ச்சியை.

பையன் பக்கத்துப் பெண்கள், பெண்ணுக்குச் சீதனம் கொண்டு வந்து கொடுப்பார்கள். காத்திருந்த பெண்கள் அத்தரையும், சென்ட்டையும் கலந்து சீதனம் கொடுத்தவர்கள் மீது தெளிப்பார்கள். 'தேல்' எனப்படும் இவ்விழாவில் முக்கியமாய் மூக்கிலும், காதின் பின்புறமும் இந்த வாசனை நீர் தெளிப்பார்கள். புஷ்பம் கொடுத்து வரவேற்பார்கள்.

மாப்பிள்ளைக்குக் கொடுக்கும் சீதனமும், பெண்ணுக்குக் கொடுக்கப்படும் சீதனமும் 'கேளவன்' என்றழைக்கப்படுகிறது.

பெண்ணுக்கும், மாப்பிள்ளைக்கும் இடையில் மெல்லிய திரை தொங்கும். 'மங்களாஷ்டகா'வைப் புரோகிதர்கள் மூச்சைப் பிடித்துச் சொல்வார்கள். திரை விலகும். உடனே மாலைமாற்றுதல். தங்கத்தாலி கோத்த செயினைப் பெண்ணுக்கு மாப்பிள்ளை அணிவிப்பார். மங்களச் சரடும் உண்டு. ஆனால் அதில் ஒரு விசேஷம். அடுத்த நாளே ஒரு சின்னக் கூட்டம் போட்டு உறவினர், நண்பர் முன்னிலையில் மாப்பிள்ளையே அந்த மஞ்சள் சரட்டைப் பிரித்து விடுவார். தங்கச் சங்கிலியும், அதில் தொங்கும் தாலியும் மட்டும்தான் சாசுவதம்.

மருமகள் நமஸ்காரம் செய்யும்போது பையன் வீட்டுப் பெரியவர்கள் வசதிக்குதகுந்த மாதிரி ஏதாவது பரிசு கொடுப்பார்கள். தங்க மோதிரம், பொன் வளையல், ஜிமிக்கி என்றெல்லாம் கூட அதிர்ஷ்டப் பெண்களுக்குக் கிடைக்குமாம். நம்மூர் தலை தீபாவளி போல் அங்கே தலை கணேஷ் சதுர்த்தி சீதனம் உண்டு. அவ்வளவுதான்! மற்றபடி நம்ம ஊர் கல்யாண டாம்பீகமெல்லாம் அங்கே கிடையாது.

"எங்கள் மக்கள் ஜாலியானவர்கள்!"


அவினாஷ் மாஷேல்கர்

கோவாவில் மேடை இலக்கியம் எப்படி?

50,000 மக்களுக்கு நான்கு தியேட்டர்கள். அதுவும் மசாலா சினிமாக்களை மட்டுமே விரும்பும் மக்கள். இவர்களுக்கு நாடகங்களை எப்படி எந்த ஸ்பூனில் ஊட்ட முடியும்?

கோவா மக்கள் பொழுதுபோக்கு நாடகங்களைத்தான் அதிகம் விரும்புகிறார்களாம். சீரியஸ் டைப் நாடகங்கள் அவர்களுக்கு வேப்ப மருந்து. கருத்தைத் தெரிவித்தவர் அவினாஷ் மாஷேல்கர்.

''நான் நாடகங்களை எழுதியிருக்கிறேன். இயக்கியிருக்கிறேன். நடித்திருக்கிறேன். கொங்கிணியில் எழுதுவதைவிட மராத்தியில் எழுதுவதே சிறப்பாய் வரவேற்கப்படும். உண்மையில் கோவாவில் மட்டுமில்லாமல் பம்பாயிலும், மகாராஷ்டிராவின் மற்ற இடங்களிலும் எங்கள் நாடகங்கள் நடைபெறும். போட்டிகளில் கலந்து கொள்ளும். மக்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு நகைச்சுவை கலந்தே எங்கள் ஸ்க்ரிப்ட்கள் தயாராகின்றன.

நகைச்சுவை என்றால் பிரச்னைகளை விட்டு விலகியிருக்கிறோம் என்பதல்ல. 1980ம் வருஷம் **Down with the Festivals** என்றொரு நாடகம் போட்டோம். நம் இந்திய மக்கள் பண்டிகைகளிலும், விழாக்களிலும் அதிக நேரத்தையும் பணத்தையும் வீணடிக்கிறார்கள். 'கணேஷ் சதுர்த்தியா, வா பிரும்மாண்டமுறையில் கொண்டாடலாம் பிச்சை எடு, அல்லது கடன் வாங்கு இல்லையென்றால் திருடிக் கொண்டாவது வா, பண்டிகையைக் கொண்டாடாமல் விட்டுவிடாதே' என்கிறார்கள். 50,000 செலவழித்துக் கணேசன் சிலை செய்து அதை தண்ணீரில் எறியும் பணக்காரர்கள் மீது கோபம் வருகிறது. எதற்கு இத்தனை பணத்தை விரயம் செய்ய வேண்டும்? ஹோலிப் பண்டிகையின்போது கட்டுப்பாடு இல்லாமல் யாரையும் அடிக்கலாம், திட்டலாம், அழுக்குச் செய்யலாம். இந்த விழாக்கள் மீது நியாயமான கோபம் வந்தது. எங்கள் நாடகம் இந்த கருத்தைத்தான் பிரதிபலித்தது.

''எங்கள் மக்கள்' கடின உழைப்பை வெறுப்பவர்கள். ஜாலியாய் எழுந்து கொஞ்சம் வேலை செய்துவிட்டு, பீரைக் குடித்துவிட்டு நண்பர்களுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்து கவலைகளை மறக்க விரும்புபவர்கள். பத்திரிகைகள் விஷயத்திலும் அப்படித்தான். செய்தித் தாள்களை வாசிப்பார்கள். அதிக அளவில் சினிமாப் பத்திரிகைகளை வாங்கிப் படிப்பார்கள். வாரா வாரம் வரும் இலக்கிய பத்திரிகை எதுவும் கிடையாது. எனவே கொங்கிணியில் சிறுகதை வளர்ச்சி இல்லை. சுற்றியுள்ள பிரச்னைகளை விட எந்த நடிகை எந்த நடிகனை எத்தனாவது தடவை கல்யாணம் செய்து கொண்டாள் என்பதுதான் முக்கிய செய்தி இங்கே. சாதாரணமாகவே கோவா மனிதர்கள் அமைதியை விரும்புபவர்கள். அரசியல்வாதிகளால் குழப்பம் வந்தால்தான் உண்டு. மற்றபடி நாங்கள் எளிமையானவர்கள். நட்பானவர்கள். எங்கள் வேலையுண்டு என்று இருப்பவர்கள்!'' என்று அருவியாய்க் கொட்டினார் அவர்.

"ஸ்டேஃப்ரீ பெல்ட் இல்லாத நேப்கின்கள்-வசதிக்கு வசதி, சுகத்துக்கு சுகம், விடுதலை உணர்வுடன் விரும்பியதைச் செய்கிறேன்"



பெல்ட் இல்லை, நாடா இல்லை, கவலை இல்லை!



உரியுங்கள்... ஒட்டுங்கள்:
இறுக்கமாக அணிந்துள்ள பேண்டீயின்மீது ஒட்டும் பகுதியை வைத்து அழுத்துங்கள்.

ஸ்டேஃப்ரீ பெல்ட் இல்லாத நேப்கின்கள் இருந்துவிட்டால், பெல்ட், நாடா, ஊசி, லூப் என்று எதைப்பற்றியுமே நான் கவலைப்பட வேண்டியதில்லை. முண்டு, முடிச்சு கிடையாது. வெட்டு, சிராய்ப்பு எதுவுமில்லை. எவ்விதமான அசௌகர்யமும் இல்லை.

ஸ்டேஃப்ரீயில் உள்ள ஒப்பற்ற ஒட்டும்பகுதி, நேப்கினைக் கச்சிதமாகப் பொருந்த வைக்கிறது. அணிவது சுலபம், மாற்றுவதும் எளிது. சாதாரண நேப்கினைவிட, ஸ்டேஃப்ரீ மிகவும் வசதியானது, சுகமளிப்பது.

ஸ்டேஃப்ரீ என் உடலோடு ஒட்டி உறவாடுவதுடன், உயர்ந்த பாதுகாப்பும் அளிக்கிறது. அதை அணிந்து என் மனம் விரும்பியதைச் செய்யமுடிகிறது. விரும்பியதை அணியவும், கவலையின்றி வெளியில், விரும்பிய இடத்திற்கு சென்றுவரவும் முடிகிறது.

அதுமட்டுமா? உங்களுக்குத் தேவையான சுகாதாரப் பாதுகாப்பு அனைத்தும் கிடைக்கிறது.


ஒரு முழு அளவு நேப்கினுள் ஸ்டேஃப்ரீயில் அதிக உறிஞ்சும் தன்மை கொண்ட உள்-அடுக்குகள் அமைந்துள்ளன. அத்துடன் 3-வழி லீக் கிற பிளாஸ்டிக் ஷீல்டும். இருப்பதால் கறை படியுமோ என்ற கவலை ஒருபோதும் இல்லை. மேலும் இதில் அதி மென்மையான விசேஷ ஒண்டர்ராப் அமைந்திருப்பதால் ஈர உணர்வு சிறிதுமின்றி எப்போதும் உற்சாகத்துடன் உங்களால் உலாவ முடிகிறது.

10 அல்லது 20 நேப்கின்கள் கொண்ட பாக்கெட்டுகளாக கிடைக்கின்றன



விடுதலை உணர்வுடன் விரும்பியதைச் செய்திட ஸ்டேஃப்ரீ

OBM/5017/TAM



தீராத விளையாட்டு ஸாயி

ரா. கணபதி

1. மூலாதார கணபதி

அலகி லாவிளை யாட்(டு)உடை யார்—அவர்
தலைவர்; அன்னவர்க் கேசரண் நாங்களே!
—கம்பர்.

"அடர்ந்த காட்டிலே மற்ற ப்ராணிகளுக்கு வழி ஏற்படுத்தித் தருவது யானைதான். எந்த மரம், செடி, கொடியையும் முறித்துக் கொண்டு அது கம்பீரமாகத் தன் வழி செல்லும். அதன் பின்னாலேயே மற்ற விலங்குகள் தொடரும். எத்தனை இடர்ப் புதரிலும் நமக்கு வழி ஏற்படுத்தித் தந்து ஸம்ஸாரக் காட்டுக்கு அப்பால் சேர்ப்பதாலேயே கணேசர் யானைமுகராயிருக்கிறார்! அது மட்டுமல்ல; மற்ற விலங்கினத்துக்கு யானை வழி ஏற்படுத்தித் தருவது போல, கணநாதரை முதலில் அழைத்துவிட்டால் போதும். அவர் பின்னோடேயே ஸகல தெய்வ கணமும் வந்துவிடும்!" — பாபா.

பிள்ளையாரப்பன் வந்திருக்கிறான் என்றால் யாருக்குத்தான் ஸந்தோஷமாயிருக்காது? அதுவும் எதிர்பாராத விதத்தில், இன்னமும் எதுவோ புரியாத ஸஸ்பென்ஸோடு வந்திருக்கிறானென்றால்? விநோதக் களிப்பு கூடும்தானே? அது மட்டுமில்லை. அவனே வழக்கமாக நாமறிந்த உருவிலன்றி சற்று மாறுதலாக வந்திருக்கிறான்!

இந்தியா சென்று ஸ்ரீஸத்ய ஸாயிநாதனை தர்சித்து, ஸ்பர்சித்து, உரையாடி, உறவாடிக் கோலாலம்பூரில் தமது வீடு திரும்பிய ஜகதீசனுக்கு மூன்று வாரங்களுக்குப் பிறகு ஒரு பார்ஸல் வந்தது. கருன் பார்ஸல் — ஏதோ படமாகவோ, காலண்டராகவோ இருக்க வேண்டும்!

யார், எங்கிருந்து அனுப்பினார்கள்? 'யார்' என்பதற்குப் பார்ஸலின் மேல் முகவரி இல்லை. 'எங்கிருந்து' என்பது மட்டும் தபால் முத்திரையிலிருந்து தெரிந்தது. பெங்களூரிலிருந்து வந்திருக்கிறது.

ஆலைகள் அதிகம் ஏற்பட்ட பிறகு பெங்களூரில் வெப்பம் அதிகமாகிவிட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் ஸாயிபக்தர்களுக்கு இன்றும் பெங்களூர் என்றால் ஒரு 'ஜில்' தோன்றத்தான் செய்யும். புட்டபர்த்திக்கு அடுத்ததாக அவர்களுடைய ஸ்வாமி ஸாம்ராஜ்யத்தில் இடம் பெற்ற ஒயிட்ஃபீல்ட் பெங்களூரின் புறநகர்தானே?

எதிர்பாராமல் பெங்களூரிலிருந்து கோலாலம்பூருக்குப் பார்ஸல் வந்திருக்கிறதென்றால்? அப்படியும் இருக்குமா?

ஆவலாகப் பார்ஸலைப் பிரித்தார் ஜகதீசன். படச்சுருள்தான்! சுருளை விரித்தால்...

ஆனந்த விநாயகன் அழகு தர்சனம் தருகிறான்!

"மலைத்தேன், கனித்தேன்" என்கிறார் தேனனை தர்சனம் கண்ட அவர்.

மலைப்பானேன் என்றால், அது அச்சிட்ட ஒரு சித்ர ப்ரதி அல்ல. ஓவியர் தீட்டிய அசலே அது!

யார் அந்த ஓவியர்? தெரியவில்லை. ஓவியத்தில் ஒப்பம் இல்லை.

சரி, யார் அதை அனுப்பியது? அதற்கும் பார்ஸலில் எந்தக் குறிப்பும் வைத்திருக்கவில்லை.

விந்தைதான்! சிந்தையைக் கவரும் சிந்துரானனன் சித்ரத்தில் காட்டிய கோலமும் ஒரு விந்தைதான்!

மூஷிக வாஹனனாகவே உலகமறிந்த அவன் இங்கே பெரிதான ஒரு தாமரையில் அமர்ந்து காட்சி தருகிறான். மூலாதார கமலத்தில் அமர்ந்திருப்பவன் என்பதற்கு எத்தனை பொருத்தமாக இருக்கிறது?

பொதுவாக அவனை நாற்கரங்களில் பாசம், அங்குசம், மோதகம், தந்தம் தரிப்பவராகவே தர்சிக்கிறோம். இங்கோ, கதை, பரசு (கோடாரி), பத்மம், அபயமுத்ரை ஆகியவற்றைக் கைக் கொண்டிருக்கிறான்! முன் வரும் கணநாதனைத் தொடர்ந்து தெய்வ கணம் வரவேண்டுமென்றில்லாமல் அவனிலேயே மற்ற தெய்வங்களையும் இணைத்துக் கொண்டாற் போலல்லவா இருக்கிறது? திருமாலை நினைவுறுத்தும் கதை, திருமகளை நினைப்பூட்டும் பத்மம், பரமேச்வரன் கைக்கொள்வதான பரசு, புவனேச்வரி பரிந்தருளும் அபயமுத்ரை! விநோத விநாயகன்!

பத்மத்தில் அமர்ந்திருப்பது திருமகள், சதுர்முகன் இருவருக்கும் பொது. ஆனால் இங்கே பத்மம் திருமாலின் நாபியில் தோன்றியதாக இல்லை. கடலிடை கமலமாகவே காண்கிறது. ஆயினும் பார்க்கவி தோன்றிய பாற்கடல் இல்லை. கொந்தளித்து அலை வீசும் நம்முலகக் கடலாகவே இருக்கிறது. கொந்தளிப்பின் நடுவிலேயே அசையாத கல்லுப் பிள்ளையாராக, அலை வீசும் மனத்தின் ஆதார ஆத்மனாக ஐயன் அமர்ந்திருக்கிறான்!

எல்லாம் ஸந்தோஷம்தான். ஆனால் யார் அனுப்பியதெனத் தெரியவில்லையே!

ஸ்வாமியாகவே இருக்கக்கூடுமா? ஆஹா, அப்படி இருக்கக் கூடாதா? ஸ்வாமி அனுப்புவாரா? ஏன் அனுப்பமாட்டார்? 'அனுப்ப' வேண்டுமென்பதுகூட இல்லை. இந்தக் கோலாலம்பூரிலேயே கூட ஒரு சித்ரம் 'தோன்றும்படி' அவரால் விசித்ரம் செய்ய முடியும்தான்! ஆனால் இது அப்படியிருப்பதற்கில்லை; பெங்களூர் என்று முத்திரை இருக்கிறதே! அதனாலென்ன? அந்த முத்திரையும் இங்கே கோலாலம்பூர் அஞ்சலகத்தில் படம் தோன்றும்போதே தானும் தோன்றியிருக்கலாம்!

*****

முப்பத்தேழாண்டுகள் முன்பு! அன்று வேங்கடகிரி ராஜாவாக இருந்தவரை ஸ்வாமி அப்போதே ஆட்கொண்டார். வேங்கடகிரிக்கு விஜயம் செய்யுமாறு ராஜா வேண்டியதற்கு மகிழ்ச்சியோடு இணக்கம் கூறினார்.

புட்டபர்த்தியிலிருந்து ஸ்வாமி வேங்கடகிரிக்குச் செல்லவிருந்த நாள் நெருங்கியது.

ராஜா தமது இரண்டாவது குமாரர் கோபாலிடம், அரண்மனைக் காரை பர்த்தி எடுத்துச் சென்று ப்ரசாந்தி நிலயத்திலிருந்து ஸ்வாமியை அழைத்து வருமாறு கூறினார்.

கிரிக்கெட் ஒன்றிலேயே கோபால் 'ஏகாந்த பக்தி' கொண்டிருந்த காலம் அது! இந்த 'ஸாயிபாபா ஸமாசாரம்' அவருடைய அக்கறைக்கு அப்பாற்பட்ட விஷயமாயிருந்தது. எனவே தகப்பனாரிடம் விருப்பமின்மை கூறி விட்டார்.

அன்று நள்ளிரவில் யாரோ தம்மைத் தட்டி எழுப்பியதும் தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு ராஜா எழுந்தார். எழுப்பியது கோபால்தான். மிகவும் மகிழ்ச்சியான விஷயம் கொண்டு வந்திருந்தார்.

கனக்கண்டாராம் கோபால். அவருடைய அக்கறைக்கு அப்பாற்பட்டவர்தான் பரம அக்கறையோடு கனவிலே வந்தார். அவரிடம் இரண்டு மாம்பழங்கள் கொடுத்தார். கோபால் உண்டார். அவ்வளவுதான். முழிப்புக் கொடுத்தது. அதிலிருந்து புட்டபர்த்திக்குப் போக வேண்டும் என்ற துடிப்பு வந்து விட்டதாம்! இதயத் துடிப்பு போல, பௌதிக இதயத்தை மனித இதயமாக்கும் அன்பின் துடிப்பு!

கனவென்ன, நனவிலேயே ஒரு குமார ராஜா ஆசைப்பட்டால் ஒரு மண்டி மாம்பழம் தருவிக்க முடியாதா என்ன? பின் ஏன் கனவு மாம்பழம் இந்த மாறுதலைச் செய்தது என்றால், ஸ்வாமி ஒன்றைத் தரும்போது அந்தப் பொருளையா தருகிறார்? "When I give, I give myself" என்று விட்மன் கூறினாற்போலத் தம்மையே அல்லவா தந்து கொள்கிறார்? தமது இரு சுவாஸகோசங்களைப் போன்ற அன்பு, இன்பு என்ற இரண்டு தேமாங்கனிகளை அல்லவா தருகிறார்?

மறுதினம் கோபால் பர்த்திக்குப் புறப்பட்டார்.

ஸ்வாமிக்கு ராஜாதிராஜனுக்குரிய மரியாதைகள் செய்து வேங்கடகிரிக்குள் வரவேற்று பவனி நடத்த வேண்டுமென மன்னர் ஏற்பாடுகள் செய்திருந்தார். வேங்கடகிரி எல்லையிலேயே தாம் அவரைக் கண்டு பூர்ண



கும்பம் அளித்து உலா அழைத்து வர வேண்டுமென்று தீர்மானித்தார்.

ராஜே ஸாஹேப் ஒருவர் குறிப்பாக ஸ்வாமி எந்த நேரத்தில் எல்லைக்கு வருவாரென்று தெரியாமல் அங்கு சென்று நெடு நாழி காத்திருப்பதற்கில்லை அல்லவா? எனவே அவர் கோபாலிடம், "புட்டபர்த்தியிலிருந்து நீங்கள் புறப்பட்ட பின் வழியில் வரும் பெரிய ஊர்களிலிருந்தெல்லாம் ஒவ்வொரு தந்தி கொடுத்துக் கொண்டே வா!" என்று கூறி அனுப்பி வைத்தார்.

கோபாலைப் பகலின் பாலாக இனிக்க வரவேற்றார் ஸ்வாமி. குறும்புநகை சுடர்விட, "மாம்பழம் ரொம்ப சக்திதான், இல்லே?" என்று வினவினார்.

அவரைச் சுற்றி வீசிய காந்தியில், அவரது காந்தத்தில் இழுப்புண்டு வாயடைத்து நின்றார் கோபால். இளமையிலும் தெய்வத் தாய்மை செறிந்த ஸாயிமாதா அக்குழந்தையைத் தட்டிக் கொடுத்து, "இரண்டு மூன்று நாளில் வேங்கடகிரி போகலாம்" என்றாள்.

எத்தனை நாளாயினும் அவருடன் இருக்க ஆர்வமுற்றது கோபாலின் இதயம். கிரிக்கெட் அக்கறை கூட அக்கரைக்குப் போய் விட்டது!


வேங்கடகிரிக்குப் புறப்பட்டனர் இளைய ராஜாவும், என்றும் இளைய ராஜாவும். தகப்பனார் தந்திகள் கொடுக்கச் சொன்னதை ஸ்வாமியிடம் கோபால் விண்ணப்பித்துக் கொண்டார்.

"அது அவசியமில்லை" என்று இரண்டே வார்த்தைகளில் ஸ்வாமி 'வீடோ' செய்து விட்டார்!

'எவ்வளவோ முன்னேற்பாடுகளுக்கு இது அவசியமென்று கருதியே தந்தையார் கூறியிருந்தும் ஸ்வாமியானால் இப்படிச் சொல்லிவிட்டாரே!' என்று சற்றே கோபால் சிந்தை வசப்பட்டாலும், 'எல்லாம் ஸ்வாமி கவனித்துக் கொள்வார்' என்று உடனே ஒரு நம்பிக்கையும் பெற்றார்.

வேங்கடகிரி ஊரெல்லை நெருங்கியது.

என்ன ஆச்சர்யம்! சொல்லி வைத்தாற் போல அங்கே எல்லா ராஜரீக வரவேற்பு ஏற்பாடுகளும் ஸித்தமாயிருந்தன!



பந்துக்களும், பரிவாரமும் தொடர ராஜா, ஸ்வாமியை எதிர்கொள்ள வந்த போது ஒரு நிமிஷம் ஆனந்த அதிசயத்தில் மெய்ம் மறந்து விட்டார். காரிலிருந்து இறங்குவது அவரது இஷ்ட தெய்வமான ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியல்லவா?

பவனி; விருந்து யாவும் முடிந்தபின் கோபால் தந்தையாரிடம், "எப்படி ஸரியான சமயத்தில் நீங்கள் ஊரெல்லைக்கு வந்திருந்தீர்கள்?" என்று கேட்டார்.

"ஏன்? உன்னிடமிருந்து வரிசையாக வந்த தந்திகளைக் கொண்டுதான்" என்றார் ராஜா ஸாஹேப்.

"நான்...? தந்தி...? ஸ்வாமி கூடாதென்று விட்டார். அதனால் நான் தந்தி கொடுக்கவே இல்லையே!"

ராஜா பேராச்சர்யத்துடன் ஒரு கட்டுத் தந்திகளை எடுத்துப் பிள்ளையின் முன் போட்டார். ஆம், ஸ்வாமியின் பயண முன்னேற்றத்தை ஒவ்வொரு கட்டத்திலும் தெரிவிக்கும் தந்திகள்தாம்! அவற்றுக்குக் கையொப்பம் அவசியமில்லை எனினும் ஒவ்வொன்றும் ஸ்பஷ்டமாக கோபாலின் பெயரிலேயே கொடுக்கப்பட்டிருந்தது! விருந்தாவன கோபாலனுடைய மறுபதிப்பின் குறும்பு விருந்துதான்!

ராஜா வேங்கடகிரி போஸ்ட் — மாஸ்டரைக் கூப்பிட்டு, வரிசைத் தந்திகளைப் பற்றி விசாரிக்க, அவர் அப்படி எதுவும் வரவில்லை என்று உறுதிப்படுத்தினார். ஆயினும் ராஜாவுக்குத் தந்திகள் வந்தேயிருக்கின்றன! பட்டுவாடா செய்தது யார், பெற்றுக் கொண்டது யார் என்று தெரிவதற்கில்லாமல், ஒவ்வொரு தந்தியும் ராஜா அறையை விட்டுச் சென்று மறுபடி திரும்பிய ஸமயங்களிலேயே அவர் மேஜை மீது காணப்பட்டது.

*****

கொடுக்காத தந்தி வந்து சேர்ந்தாற் போல, எடுக்காத ஃபோட்டோவின் ப்ரதியை ஸ்வாமி கொடுத்ததுண்டு! புத்தகத்தில் இல்லாத வாசகத்தை ஒருவர் படித்துத் திருந்துமாறு செய்ததுண்டு!

அப்படியானால், பெங்களூரிலிருந்து ஜகதீசனுக்கு அனுப்பாமலே கோலாலம்பூரில் அவருக்கு டெலிவரியாகுமாறு பார்ஸல் வர முடியாதா என்ன?

ஜகதீசனின் ஆறு மாத ஸஸ்பென்ஸ் வாசகர்களுக்கும் ஒரு வாரம் இருக்கட்டும். இன்னமுங்கூட சில ஸஸ்பென்ஸ்கள்: எடுக்காத ஃபோட்டோ, அச்சாகாத வாசகம் என்று சொல்லிவிட்டு அதோடு விட்டு விடலாமா?

இவற்றோடு, "எதற்காக ஸார், இந்த விளையாட்டெல்லாம்? நீங்களும் பெரிசாக எழுத ஆரம்பித்துவிட்டீர்களே!" என்று எவரோ அன்பர் கேட்பதற்குப் பதில் சொல்லக் கொஞ்சம் முயற்சி செய்ய வேண்டாமா? எல்லாம் அடுத்த வாரம்.

(தொடரும்)

"கோவா மக்கள் அதிகம் கூலி கேட்கிறார்கள்!"

கோவாவை இரும்பு நகரம் என்று கூட அழைக்கலாம். அதன் அமைதியான கடல்களும், ஆர்ப்பாட்டமான தென்னைகளும் இயற்கைக் காட்சிகளாக வரைந்து தள்ளியிருந்தாலும், முக்கியமான நரம்பு மண்டலம் இரும்புச் சுரங்கங்கள்தான். இந்தியாவின் முதல் பத்து பணக்காரர்களில் மூன்று பேர் கோவாவைச் சேர்ந்தவர்கள். இந்த மூன்று பண முதலைகளும் இரும்புச் சுரங்கங்களைச் சொந்தம் கொண்டாடுபவர்கள். சல்கோ(ங்)கர் (Salgaocar) இதில் பிரதானமானவர். பத்து வயதில் சின்னக் கடை ஒன்றை மார்க்கெட் ஏரியாவில் நடத்திய சிறுவன்தான் இன்று இரண்டரை மில்லியன் டன்களுக்கு மேல் இரும்புத் தாதுவை ஐரோப்பாவிற்கும், ஜப்பானிற்கும் ஏற்றுமதி செய்யும் பெரிய கம்பெனியின் சேர்மன்! இந்த கம்பெனியின் மக்கள் தொடர்பு அதிகாரியைச் சந்தித்தபோது ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. இந்த முக்கிய பதவியில் முழுப் பொறுப்புடன் செயல்படும் சங்கர் ஒரு தமிழர்! அவர் சொன்னார்:

"போர்ச்சுக்கீசிய அரசு தனி நபர்களை ஊக்குவித்தது. வருமான வரி என்று ஏற்றுமதியாளர்களைத் தொந்தரவு செய்யவில்லை. இந்தந்தத் தொழிலுக்கு இத்தனை வரி என்று மட்டும் நிர்ணயித்ததே தவிர, தனி நபரின் வருமானத்தைப் பற்றி அக்கறை காட்டவில்லை. எனவே ஒவ்வொருத்தரும் முழு முயற்சியுடன் ஏற்றுமதியில் இறங்கினார்கள். இறக்குமதி செய்பவர்களுடன் நேரடியாய் ஒப்பந்தங்கள் செய்து கொண்டார்கள். தொழில் பிரமாதமாய் வளர்ந்தது. சுதந்திரத்திற்குப் பின் இந்த நிலைமையை அரசு கலைக்க விரும்பவில்லை. இன்னொரு காரணம் இந்த இரும்புத் தாது இன்னும் இருபது வருடங்களில் தீர்ந்து போய்விடும் என்று கணித்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் தலையிடுவது உசிதமில்லை என்று அரசு நினைத்திருக்கலாம்!"

"இத்தனை பிரும்மாண்ட முறையில் இரும்பு மூலப்பொருள்கள் ஏற்றுமதியாவதில் சந்தோஷம்தான். ஆனால் கோவா இப்போது சுற்றுலா மையமாகிக் கொண்டிருக்கிறது. இரும்புப் போக்குவரத்தால் சுற்றுப்புற சுகாதாரம் கெட்டுப் போகிறதே?"

* இரும்புக்கனி ஏற்றுமதிக்குத் தயாராகிறது.

"தவறு. நிலத்திலிருந்து தோண்டி எடுக்கப்படும் மூலப்பொருளில் ஈரப்பசையும் இருக்கிறது. அதனால் இரும்புத் துகள்கள் காற்றில் அடித்துச் செல்லப்படுவதில்லை. மேலும் நதி மார்க்கமாக நேரடியாய்க் கடலுக்குள் போய் விடுவதால் மக்களின் நடமாட்டங்களை நாங்கள் அதிகம் பாதிப்பதில்லை. மழைக் காலங்களில் தான் கொஞ்சம் பிரச்னை..."

இந்த இடத்தில் சல்கோகர் கம்பெனியின் தகவல் அதிகாரியை குறுக்கிட்டு, "கோவாவில் ஆஸ்த்மா, மற்றும் நுரையீரல் தொடர்பான நோய்கள் வருவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். மழைக் காலங்களில் குவித்து வைத்த இரும்புத்துகள்கள் தண்ணீரில் மிதந்து நதிகளில் கலப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. கூடிய வரையில் இந்தப் பிரச்னையையும் சமாளிக்க முயற்சி செய்து வருகிறோம்!" என்றார்.

"சுரங்கத்திற்காகக் காடுகளையும், மரங்களையும் அழிக்க வேண்டி வருமே, அரசு கண்டிப்பதில்லையா?" என்று மீண்டும் சங்கரிடம் கேட்டோம்.

"எங்கள் கம்பெனி மரங்களை அழிப்பதோடு நிற்பதில்லை. புது மரங்களை நட்டு வளர்க்கிறோம். முக்கியமாய் நாங்கள் நிராகரித்த மண்ணைக் கொட்டி வைக்கும் இடத்தில் முந்திரிகளை வளர்க்கிறோம்!"

"மைனிங் இன்டஸ்ட்ரியில் வெளி மாநிலத்தவர்கள்தான் அதிகமாய் வேலையிலிருப்பதாய்ச் சொல்லப்படுகிறதே?"

"உண்மைதான். கோவா தொழிலாளி ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் நாற்பது ரூபாய் எதிர்பார்க்கிறான். ஆனால் கர்நாடகாவிலிருந்து வரும் தொழிலாளிக்குச் சோறு போட்டுக் கையில் மூன்று நான்கு ரூபாய் கொடுத்தால் போதும். திருப்தியாய் வேலை செய்கிறான். கோவா மக்களைப் போல வெளி மாநிலத்தவர் கடும் உழைப்புக்கு அஞ்சுவதில்லை. எனவே வெளி மாநிலத்தவர் அதிகம் இருப்பதில் ஆச்சரியம் இல்லை!"

* சங்கர்.



சின்னச்



மீராமர் பீச்.

* ஒரு வீட்டுக்குப் போனால் 'காப்பி சாப்பிடறீங்களா சார்?' என்று கேட்பது போல் கோவாவில் எந்த வீட்டுக்குப் போனாலும், 'லைக் டு ஹாவ் ஸம் ட்ரிங்ஸ்?' என்று கேட்கிறார்கள். பீர் நிச்சயம்.

* கோவா வீதியில் ஒரு கல்லைத் தூக்கி எறிந்தால் ஒன்று அது சர்ச்சின் மீது விழும் அல்லது ஒரு மதுபானக் கடை மீது விழும் என்பது ஊர் பழமொழி. அத்தனை சின்ன இடத்திற்கு கிட்டத்தட்ட 3450 பார் (Bar) கள்!

* நீங்கள் குடித்தால் உங்களுக்குத் தூக்கம் வரும். தூங்கிப் போனால் பாவங்களைச் செய்ய மாட்டீர். பாவங்களைச் செய்யாவிட்டால் உங்களுக்குச் சொர்க்கம் கிடைக்கும். எனவே வாருங்கள், நாமெல்லாம் குடிப்போம்; சொர்க்கம் போவோம். — கோவா Bar ஒன்றின் விளம்பரம்! சாராயக்கடை வாசலில் பொடி எழுத்தில்



* போர்த்துக்கீசிய டான்ஸ்.


டைப் ஹோட்டல்களில். கொஞ்சம் பெரிய ஹோட்டல்களுக்குப் போனால் நமது சொத்தையே எழுதி வைக்க வேண்டி வரலாம்.

* ஜூன் மாதம் முதல் தேதி கிழிக்கும் போது கோவாவின் மேகங்கள் பொழிய ஆரம்பிக்கின்றன. அட்டவணை போட்டுக் கொண்டு மூன்று மாதங்கள் இடைவேளை கொடுக்காத அகர மழை. சாதாரணமாகவே மாலை ஏழு மணிக்கு மூடி விடும் கடைகளில் இந்த மழை சீஸனில் குடையில்லாதவர்கள் ஒதுங்கினால்தான் உண்டு. எறும்புகளைப் போல மழைக்கு முன்னாலேயே மூன்று மாதத்திற்குத் தேவையான மளிகை, சோப்பு, பவுடர் எல்லாவற்றையும் வாங்கி ஸ்டாக் செய்துவிடுகிறார்கள்.

* கோவாவில் மருத்துவக் கல்லூரி இருக்கிறது. இன்ஜினியரிங் கல்லூரி இருக்கிறது. கட்டிடக் கலை கற்றுத்தரக் கூட ஒரு கல்லூரி. சட்டக் கல்லூரி, மேலும் கலைக் கல்லூரி (பெயிண்டிங், சிற்பம்) யும் அங்கே இருந்தாலுங்கூட ஒரே ஒரு கல்லூரி இல்லையே என்ற குறையும் மக்களுக்கு இருக்கிறது. அது என்ன கல்லூரி? கால்நடை மருத்துவக் கல்லூரிதான்.

* பனாஜியில் உள்ள சென்ட்ரல் நூலகத்தில் ஏராளமான தமிழ்ப் புத்தகங்கள்









* தாலோ டான்ஸ்.



* சுத்தமான சாலே.



* மாண்டோவி நதி.

சின்னச் செய்திகள்

'குடி குடியைக் கெடுக்கும்' என்ற உபதேச வாசகத்தைவிட இந்தக் கற்பனே நயமிக்க ஏமாற்று வாசகம் எவ்வளவோ தேவலாம்!

* ஹர்மல் பீச்சுக்குப்போனுல் குடிசை போட்டுஹோட்டல்மாதிரியான அமைப்புகள் உங்களே வரவேற்கும். ஆனுல்கிட்டே போனுல் சாப்பிட எதுவும் கிடைக்காது. பீர் வேண்டுமா, பிராந்தி வேண்டுமா, இல்லே ஃபென்னி சாப்பிடுகிறீர்களா என்று மட்டும்தான் உபசாரம் செய்வார்கள்.

* மீராமர் பீச்சில் ஒரு விசேஷம். இரவு பதினென்று பதினென்றரை வரைக்கும் கூட கூட்டம் இருக்கிறது. பெரும்பாலும் குடும்பம் குடும்பமாய் வந்து அரட்டை அடித்து விட்டுச் சுகமான காற்றை அனுபவித்துவிட்டுப் போகிறுர்கள். விசேஷம என்னவென்றுல் ஆங்காங்கே இரும்பு நாற்காலிகள், மேஜை என்று சிதறிக் கிடக்கின்றன. மக்கள் உட்கார்ந்து பேச நிரந்தரமாய் இங்கேயே கிடக்கின்றன. ராத்திரியோடு ராத்திரியாய் யாரும் கடத்திப் போவதில்லே!

* மெட்ராஸ் லாட்ஜ்களில் தங்கியிருக்கும் பிரம்மச்சாரிகளே கோவாவுக்கு ஒரு வாரம் அனுப்பினுல் போதும். அப்புறம் நம் ஹோட்டல்களேப் பற்றி எந்தக் குறையும் சொல்லமாட்டார்கள். கொஞ்சம் பசியோடு போய் டிஃபன் சாப்பிட்டால் சட்டை பாண்ட்டைக் கழற்றிக் கொடுக்க வேண்டிய அளவுக்கு விலே. இரண்டு இட்லி 2.50. தோசை 2.50. பூரி 3.50. இதெல்லாம் வெகு சாதாரண உடுப்பி






* கோவா புராதன வீடு, புது வீடு.

உள்ளன. இந்தப் புத்தகங்களின் ஆயுள் காலம் சுமார் முந்நூறு வருடங்கள். போர்த்துகீசியர்களின் காலத்திலிருந்து இருக்கும் இப்புத்தகங்களில் பெரும் பாலனவை கையெழுத்துப் பிரதிகளே. சர்வ ஜாக்கிரதையாக வைத்துக் காப்பாற்றுகிறுர்கள்.

* கோவா மக்களுக்குப் பிடித்தமான ஒரு கொங்கணிச் சொல் 'கஸேகாத்' — ஆங்கிலத்தில் டேக் இட் ஈஸி என்று பொருள். மக்களும் அப்படித்தான்.

* மீராமர் பீச்சில் நிறையஇளேஞர்கள் குடித்துவிட்டு மயக்கத்தில்பாடுகிறுர்கள். ஆடுகிறுர்கள். மோட்டார் பைக்கில் சாகசங்கள் செய்கிறுர்கள். எத்தனே மணிக்கு? இரவு பதிஞெரு மணிக்கு. யாராவது ஒருபெண் தனியாகப் போனுல், அந்தப் பெண் அவர்களேக் கடக்கும் வரையில் வாலேச் சுருட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறுர்கள். வம்பு செய்வதேயில்லே. நம்மவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம்.



* நதியோரத்துச் சாலை.

* ஒரு போர்த்துகீசிய நாட்டுப் பாடலில் முதல் இரண்டு வரிகள்:

சிரி பிரி பீ
ப்பா ப்பா ப்பா
மனுபாய் மதுகரய்
ப்பா ப்பா ப்பா.

* தாலோ டான்ஸ் என்பது கோவாவில் குளிர்காலத்தில் நடைபெறும் ஒரு நடனம். குளிரை எதிர்ப்பதற்காக நடத்தப்படும் நடனம். மண்பாண்டம் (சிறியது) கொட்டாங்கச்சி, கைதட்டல் ஆகியவைகளுடன் இது நடைபெறும்.

* கொங்கணிப் பெண்களில் பெரும்பாலோர் மூக்குக் குத்தி ஒரு வளையமும் மாட்டிக் கொள்கிறார்கள். சின்னச் சின்னப் பெண்கள்கூட வளையம் மாட்டிக் கொண்டு வளைய வருகிறார்கள். பார்ப்பதற்கு அது ஒரு தனி அழகு.

* பெண்கள் எம்ப்ராய்டரி செய்கிறார்கள். வயர்கூடை பின்னுகிறார்கள். கலை வேலைப்பாடுகளுடன் ஓவியங்கள் எல்லாம் வரைகிறார்கள். கல்யாணம் ஆகிற வரைக்கும். கல்யாணத்தின் போது இப்படி உருவாக்கிய பொருட்களை எல்லாம் தங்களுடன் பெண் வீட்டுச் சீதனமாகக் கொண்டு போய்விடுகிறார்கள். கல்யாணத்திற்குப் பின் இதில் எல்லாம் அவர்கள் அக்கறை காட்டுவதில்லையாம்!

* பெயர் தெரியாத ஒருவரைக் கோவாவில் எப்படி கூப்பிடுகிறார்கள். ஸ்ஸ்... அல்லது ஸ்க், ஸ்க்.... ஆண்களும் சரி, பெண்களும் சரி இப்படித்தான் கூப்பிடுகிறார்கள். யாரும் கோபிப்பதில்லை. நம்மூரில் ஒரு பெண்ணை 'ஸ்ஸ்' என்று கூப்பிட முடியுமா? கூப்பிட்டுவிட்டு உதை வாங்காமல் போய்விட முடியுமா?

* தம்படி — சூர்லாவில் இருக்கும் மகாதேவர் கோவில் கடம்பர்கள் — யாதவர்கள் பாணியில்கட்டப்பட்ட ஒரு கோவில். கடம்பர்கள் ஆட்சிக்குச் சாட்சி இன்றைக்கு இந்தக் கோவில் மட்டுமே.

* கோவாவில் பொதுவாகப் பிச்சைக்காரர்களே இல்லை. நாங்கள் இருந்த பத்து நாட்களில் இரண்டே இரண்டு பிச்சைக்காரர்களை மட்டும் தரிசித்தோம். அவர்களில் ஒருவர் குடுமி வைத்த ஃபாரின் பிச்சைக்காரர். ரெகுலர் கஸ்டமர் போலிருக்கிறது கடைகளுக்கு. கடைக்குக் கடை அவரை விரட்டி அடித்தார்கள். பாவம், ஃபாரினிலிருந்து இங்கே வந்து பிச்சை எடுக்க வேண்டிய நிலை. இன்னொருவர் பஸ் ஸ்டாண்டில். உள்ளூர் பிச்சைக்காரர். துருவியிருந்தால் கோவாவைச் சேர்ந்தவன் இல்லை என்று சொல்லியிருப்பாரோ என்னவோ, நமக்கு ஏன் வம்பு?


* கோவாவில் இரண்டு விளையாட்டுக்கள் பிரபலம். ஒன்று கால்பந்தாட்டம். பெரிய பெரிய மைதானங்கள் உள்ளன. புல்வெளிகள் உள்ளன. இன்னொன்று கேரம். சின்ன இடம்பிடித்து உள்ளே லைட் போட்டு இரவு நேரங்களில் எல்லாம் ஆடுகிறார்கள். பக்கத்தில் கிராஸ் செய்து போனால், டொக் டொக்தான். ஆமை, நத்தையுடன் போட்டி போட்டு வாழும் மக்களுக்கு ஐந்து நாட்கள் நடத்தப்படும் கிரிக்கெட்டில் ஈடுபாடு இல்லை!

* நா சாஹூ ஸோனு, சாந்தி
நா சாஹூ ஹீரா மோத்தி.... எனும் பாபிப் படப்பாடல் நினைவிருக்கிறதா? இது கோவாவில் இன்றைக்கும் பாடப்படும் ஒரு நாட்டுப்பாடலின் ஒரு அங்கமே.

* கோவாவிலும், ஸ்கூட்டரில் போகிறவர்கள் ஹெல்மெட் கட்டாயம் அணிய வேண்டும். ஆனால் பின்னால் உட்காருபவர்கள் அணிய வேண்டியதில்லை. ஹெல்மெட்டில் ஐ. எஸ். ஐ. முத்திரை இருக்கிறதா என்று யாரும் சோதிப்பதில்லை. ப்ளாஸ்டிக்கில்கூட ஹெல்மெட் செய்து அணிகிறார்கள்!

* கோவாவில் ஆட்டோக்கள் நிறையச் சுற்றுகின்றன. கறுப்பு ஆட்டோக்கள். கத்தமாகக் கதவை மூடிவிடுகிறார்கள். பின்னால் தனியாக ஒரு கூண்டு மாதிரி

* கோவா ஆட்டோ



"கோவா பெண்கள் ஒன்றும் மட்டமில்லை"



"பஸ்ஸில் பக்கத்தில் உட்காருகிறார்கள்; சரி. தூணுக்குப் பின்னால் மறைந்து நிற்காமல் பேசுகிறார்கள்; சரி. அதற்காகக் கோவா பெண்களெல்லாம் கூப்பிட்ட இடத்திற்குக் கூப்பிட்டவனுடன் வருவார்கள் என்பதெல்லாம் பொய்யான செய்தி. இதையெல்லாம் நம்பிக் கொண்டு வரும் டூரிஸ்ட்களால்தான் கோவாவே கெட்டுப் போகிறது!" என்று சீறுகிறார் பெண் நிருபர் தேவிகா!

ஓர் உப்பல் இருக்கிறது. எங்கே கூப்பிட்டாலும் வருகிறார்கள். முகம் சுளிப்பதில்லை. ஆனால் கட்டணம்? இங்கே டாக்ஸிக்கு வாங்கும் கட்டணம்!

* கோவாவில் இரு பெரும் ஆறுகள் ஓடுகின்றன. நகரத்தை அணைத்துக் கொண்டு அவை வெகு அழகாக ஓடுகின்றன. மாண்டோவி நதி. ஜுவேரி நதி இன்னொன்று. இந்த மாண்டோவி நதியில் படகுப் பிரயாணம் உண்டு. உல்லாசப் படகு. இரவில் ஏராளமான விளக்குத்தோரணங்களுடன் இந்தப் படகுகள் போகும்போது நதியின் மீன்கள் துள்ளி விளையாடுகின்றன. அவற்றின் உடல்கள் படகு வெளிச்சத்தில் மின்னல்கள் போல் ஜொலிக்கின்றன. சொன்னால் மட்டும் போதாது. பார்த்து ரசிக்க வேண்டும். காணக் கண் கோடி வேண்டும் என்று சொல்கிறார்களே, அது இந்தக் காட்சிக்கும் பொருந்தும்.


* கோவா மக்களுக்கு இன்னொரு பொழுதுபோக்கு (இரவு நேரங்களில் மது பானம்) தூண்டிலால் மீன் பிடித்தல். நதியோரங்களில் தூண்டிலைப் போட்டு விட்டுச் சிலை போல் உட்காருகிறார்கள். கண்கள் தக்கையின் மேல். அந்த நேரத்தில் என்னென்ன சிந்தனைகளோ? எவ்வளவு பிரச்னைகளோ? மீன் பிடிக்கும் போதே எல்லாவற்றையும் அலசுகிறார்கள். போகும்போது ராத்திரி சாப்பாட்டுக்கு புது மீன்கள். பிரச்னைகளுக்கு தீர்வுகள். எப்படி, ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள்.

* கோவாவின் வீடுகளில் கிராமியமும், புதுமையும் கலந்திருக்கின்றன. தோட்டமும், புல்லும் சூழ்ந்த ஓட்டு வீடுகள் அங்கங்கே பழம் பெருமை பேசுகின்றன. கடற்கரையின் ஓரம் ஃபிளாட்கள் கட்டப்பட்டு உயர உயரமாய் இப்போது உருவாகின்றன. இன்னொரு பம்பாய் என்று கூடச் சொல்லலாம். மீனவர் பகுதியில் ஓலைக் குடிசைகள் மற்றும் கல் வீடுகள். ஒரு நகரத்தில்தான் எத்தனை தரத்து மக்கள்!

* கோவாவில் இருக்கும்போது மறதியாகச் சாவியையோ, வேறுபொருளையோ தொலைத்துவிட்டால் போலீஸுக்குப் போக வேண்டாம். பேப்பர்களில் பார்த்துக் கொண்டிருந்தால் இரண்டு மூன்று நாட்களுக்குள் வரி விளம்பரங்கள் பகுதியில் அறிவிப்பு வரும். 'மீராமர் பீச் அருகே பெட்ரோல் பங்க் பக்கத்தில் ஒரு கொத்துச் சாவி கண்டு எடுக்கப்பட்டது. உரிமையாளர்கள் தொடர்பு கொள்ளவும்.' கூப்பிட்ட இடத்துக்குப் போய் அடையாளம் சொல்லி வாங்கிக் கொள்ளலாம். நம்மூரில் யாராவது இப்படி செய்கிறார்களா?

* கோவாவில் நுழைவதற்கு முன் நிறைய ஏற்றங்கள், இறக்கங்கள். மலைப்பிரதேசம். குறுகிய பாதை. எனவே கோவாவிற்குச் செல்லும் ரயில்பாதை மீட்டர் கேஜ் ரயில் பாதையாகவே இருக்கிறது. அதை பிராட் கேஜாக மாற்ற மத்திய அரசு தயங்குகிறது. அதனால் ரயில்கள் கோவாவை அவ்வளவாக எட்டிப் பார்ப்பதில்லை. அதனால் ரயில் மூலமாக வரும் பயணிகள் வெகு குறைவு.

* மங்கேஷ்கர் கோயில் துவஜஸ்தம்பம்.



தோட்டம் போட்ட அனுபவம்

உரமே எமனானது!

எங்கள் வீட்டுத் தோட்டத்தில் தக்காளிச் செடிகளைப் பயிரிட்டு வளர்த்தேன். செடிகளும் செழிப்பாக வளர்ந்தன. எங்கள் வீட்டுக்குப் பால் வாங்க வந்த விவசாயி ஒருவர் செடிகளின் செழிப்பைப் பார்த்து ஒவ்வொரு செடிக்கும் ஒன்றரைக் கைப்பிடியளவு யூரியா போட்டால் பழங்கள் பெரியவையாக வளரும் என்று சொல்லவே நானும் அவ்வாறே போட்டேன். இரண்டே நாட்களில் எல்லாச் செடிகளும் கருகிப் போய் விட்டன. அதிர்ந்து போன நான் மற்றொரு விவசாயியிடம் காரணம் கேட்ட போது யூரியாவின் அளவு அதிகமானால் அப்படித்தான் கருகிப் போகும் என்றார்!

—என். சிடி. நாச்சியப்பன், சென்னை—11.



நட்பை வளர்த்த செடிகள்!

நான் குடியிருந்த காலனியில் யாருக்கும் இல்லாத அதிர்ஷ்டமாக என் வீட்டின் பக்கவாட்டில் கொஞ்சம் வெற்றிடம் இருந்தது. நானும் அதில் வேலிபோட்டுப் பூச்செடிகளை வளர்க்க ஆரம்பித்த போது பலரும் பொறுமைப்படத் தொடங்கிவிட்டார்கள். செடியில் வெந்நீர் ஊற்றப் போவதாக முணுமுணுத்தவர்களும் உண்டு; என்னுடன் பேசாமல் இருந்தவர்களும் உண்டு! செடிகள் வளர்ந்து பூத்துக் குலுங்கிய போது, அந்தப் பூக்களையெல்லாம் ஒவ்வொருவருக்கும் முறைவைத்து நான் கொடுத்தனுப்பியபோது அனைவரும் மகிழ்ச்சியோடு வாங்கிக் கொண்டு என்மேல் அன்பு காட்டியதோடு, செடிகள் நன்கு வளர ஒவ்வொருவரும் ஒவ்வொரு யோசனை கூறிய போது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை!

—திருமதி ராமலக்ஷ்மி, கல்கத்தா—27.

வாசகர் பங்கு

பட்ஜெட்டை மிச்சப்படுத்துகிறது!

நாங்கள் சொந்த வீடு கட்டிய போது மிஞ்சியமணலைமொட்டைமாடியில்கொட்டி வைத்திருந்தார்கள். ஒருநாள் ஏதோவோர் உந்துதலில் அதில் வெண்டை, அவரைச் செடிகளைப் பயிரிட்டேன். ஆச்சரியப்படும் அளவுக்கு அவை வளர்ந்து காய்க்க ஆரம்பித்து விட்டன. பிறகு எனக்கே தோட்டக் கலையில் ஆர்வம் வந்து விட்டது. பெரிய பெரிய மண் தொட்டிகளை வாங்கி வந்து வைத்து அவற்றில் காய்கறிச் செடிகளைப் பயிரிட்டு வருகிறேன். வீட்டிற்குத் தேவையான காய்கறிகள்கிடைப்பதோடு, இப்போது எங்கள் வீட்டு பட்ஜெட்டிலும் ஒரு கணிசமான தொகை மிச்சப்படுத்தப்படுகிறது!

—எஸ். ரவிச்சந்திரன், சென்னை—4.



பயிரை விஞ்சிய களைகள்!

என் நண்பர் குப்தா பிடிவாதமாகத் தம் குவார்ட்டர்ஸின் பின்புறம் மண்வெட்டியால் கொத்திப் பாத்தி கட்டித் தண்ணீர் விட்டு நெல் விதைத்தார். இரண்டு மாதங்களுக்குப் பிறகு என்னை வீட்டுக்குக் கூப்பிட்டார். நெற்பயிரைப் பார்த்த போது அதில் வளர்ந்திருந்த நெல்லுக்கும் புல்லுக்கும் வித்தியாசமே தெரியவில்லை. நெல்லைவிடப் புல் செழிப்பாக வளர்ந்ததால் அவையும் நெல்லாக இருக்குமோ என்று நினைத்துக் களை எடுக்காமலேயே இருந்து விட்டார். கடைசியில் கதிர் அறுவடைக்குப் பின் விதை நெல்லோடு போட்ட உரத்தையும் கணக்கெடுத்துப் பார்த்த போது மொத்தம் ரூபாய் முந்நூற்றைம்பது நஷ்டம்!

—பி. ராமசாமி, நாக்பூர்—21.

சிந்திக்க வைத்தார் மாமா!

என் வீட்டின் முன்புறத்தில் புல் தரை அமைப்பதற்காக அங்கிருந்த காய்கறிச்



செடிகளையெல்லாம் அகற்றும் வேலையில் ஈடுபட்டிருந்தேன். அதைப் பார்த்த கிராமத்திலிருந்து வந்திருந்த என் மாமா, "நாங்க அங்கே செடி வைக்கப் புல் வெட்டறோம். இங்கே புல் வைக்கச் செடி வெட்டறீங்க. அப்புறம் ஏன் காய்கறி விலை ஏறாது?" என்று தமாஷாகக் கூறியது என்னைச் சிந்திக்க வைத்தது.

—ஆர். கோபாலகிருஷ்ணன், சிறுமுகை.

வயிறு புண்ணாகச் சிரித்தோம்!

எங்கள் வீட்டின் முன்பக்கத்துத் தோட்டத்தில் நன்றாகக் கிளைத்து வளர்ந்திருந்த ரோஜாச் செடிகளின் முற்றிய கிளைகளைச் சிறுசிறு துண்டங்களாக வெட்டி வெவ்வேறு இடங்களில் நட்டுத் தண்ணீர் ஊற்றினார் மாமா. அதைப்பார்த்துக்கொண்டிருந்த இரண்டாம் வகுப்புப் படிக்கும் அவர் மகன் ஒரு பெட்டி சிலேட்டுக் குச்சிகளை அங்கும் இங்குமாக நட்டு வைத்துத் தண்ணீர் ஊற்றிவிட்டு, "அப்பா இனி எனக்கு சிலேட்டுக் குச்சி வாங்க வேண்டாம். இதில் காய்க்கும் குச்சிகளே போதும்!" என்றானே. பார்க்கலாம்! அன்று நாங்கள் சிரித்த சிரிப்பைச் சொல்லி மாளாது!

—கே. எஸ். லலிதாம்பாள், ஆலப்புழை—1



தயவு செய்து தெரிந்து கொள்ளுங்கள்!

சாதாரணமாக ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளின் முன்னால் பூச்செடிகளையாவது பயிரிட்டிருப்பார்கள். ஆனால் மிகக் குறைந்த செலவில் மிக அதிகப் பலன் பெறும் ஒரு விஷயம் அவர்களில் எத்தனை பேருக்குத் தெரியுமோ தெரியவில்லை. ஆம்; சென்னை மாநகராட்சியில் எழுபத்தைந்து பைசாவுக்கு இரண்டு கிலோ எடையுள்ள ஓர் உர பாக்கெட் விற்பனை செய்கிறார்கள். அதை வாங்கிப் போட்டுப் பாருங்கள்; பின்னர் பலனை நீங்களே தெரிந்து கொள்வீர்கள். இந்த உரத்தைப் பொதுவாக எல்லாச் செடிகளுக்கும் போடலாம்!

—எம். சந்திரசேகர், சென்னை—10.

பூக்களால் மலர்ந்த உறவு!

ஒருநாள் நான் தோட்டத்திற்குச் சென்றபோது, ஒரு கை வேலியின் வெளியிலிருந்து நீண்டு வந்து பூக்களைப் பறிக்க முயன்றபோது, ஓடிச் சென்று அந்தக் கையைப் பிடித்தேன்; அது ஒரு பெண்ணின் கை!



அவள் என்னிடம், "அண்ணா, எனக்குப் பூ என்றால் ரொம்பவும் இஷ்டம். அதனால் தான் இப்படிப் பறித்துவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள் அண்ணா!" என்றாள்.

'அண்ணா' என்ற அந்த வார்த்தையைக் கேட்டதும் எனக்குத் தங்கையில்லாத குறை தீர்ந்து விட்டதை நினைத்து மகிழ்ந்தேன். அன்று முதல் என் தோட்டத்தில் பூக்கும் பூக்களில் என் தங்கையின் கூந்தலுக்குப் போக மீதியைத்தான் பூஜைக்குக் கூட உபயோகப்படுத்துகிறேன். எனது தோட்ட அனுபவத்தில் ஒரு நல்ல தங்கை கிடைத்தாள்.

—எம். எஸ். பஞ்சாட்சரம், திருச்சி—2.

மலையைக் குடைந்து எலியைப் பிடித்தோம்!

வீட்டைச் சுற்றியிருக்கும் ஏராளமான இடமும் கேட்பாரற்றுக் கிடக்கிறதே என்று நிலத்தைச் சமன் செய்து சுத்தப்படுத்தி, வேலி போட்டுக் காய்கறிகளைப் பயிரிட்டோம். ஆறு மாத இடைவெளிக்குப் பிறகு அந்த இடமே பச்சைப் பசேல் என்று

வளர்ந்து காய்த்துக் கொண்டிருந்த காய்கறிச்செடிகளால் அழகு பெற்றது. பார்க்கப் பார்க்கச் சந்தோஷமாக இருந்தது. ஆனால் தோட்டம் போடும் போது இருந்த காய்கறிகளின் மார்க்கெட் விலையையும், தோட்டத்தில் காய்க்கும் போது இருந்த மார்க்கெட் விலையையும் ஒப்பிட்டுப் பார்த்த போது மலையைக் குடைந்து எலியைப் பிடித்த கதையாகத்தான் இருந்தது.

—கே. எஸ். ராஜலக்ஷ்மி, சென்னை—41.

வேலை இல்லையா? கவலை வேண்டாம்!

கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வந்தவுடன் நானும் என் நண்பனும் சேர்ந்து வாழை பயிரிட்டு மிக நல்ல முறையில் லாபம் பெற்று வருகிறோம். இப்போது மேலும் சிறிது நிலத்தைக் குத்தகைக்குப் பிடித்து அதிலும் வாழை பயிரிட்டிருக்கிறோம். பட்டதாரிகளான எங்களுக்கு இந்தச் சுய வேலையின் மூலம் மாதம் ஒன்றுக்கு எண்ணூறு ரூபாய்க்குக் குறையாமல் வருமானம் கிடைக்கிறது. மற்ற வேலையில்லா நண்பர்களும் எங்களைப் பின்பற்றிப் பயனடையலாமே!

—ஆர். ராஜா, பி.காம்., பண்ருட்டி.



அறுவடையைத் தடுத்த அதிகாரிகள்!

கருணாநிதி நகரில் உள்ள வீட்டு வசதி வாரியக் குடியிருப்பின் கீழ்த்தளத்தில் நாங்கள் குடியிருக்கிறோம். வீட்டின் முன்பகுதியில் உள்ள செங்கல், சுண்ணாம்புக் காரை ஆகியவற்றையெல்லாம் அப்புறப்படுத்திவிட்டுச் செம்மண், எரு ஆகியவற்றைக் கொட்டி நல்ல விளைநிலமாக்கினோம். வேலி கட்டினோம். நல்ல நல்ல காய்கறி விதைகளை வாங்கி வந்து பயிரிட்டோம். ஆஸ்திரேலிய எலுமிச்சை முதல், யாழ்ப்பாணத் தென்னங்கன்று வரை அனைத்தையும் பயிரிட்டு முடிப்பதற்குள் என் ஒரு வார கால விடுமுறையும் பறந்தோடியது. கூடத் தெரியவில்லை. அந்த அளவுக்கு உற்சாகமாக உழைத்தோம்.

நாங்கள் எங்கள் தோட்டத்திற்குக் குடிநீரைப் பாய்ச்சி வீணாக்குவதாக அக்குடியிருப்பில் இருக்கும் நல்வாழ்வுச் சங்கம் புகார் செய்தது. அதனால் வீட்டின் கோடியிலிருந்த தரைக் கிணற்றுக்குக் கைப்பிடிச் சுவர் எழுப்பி நீர் இறைக்க வசதி செய்தோம். செடிகள் அனைத்தும் கொழுகொழுவென்று வளர்ந்து காய்க்கும் சமயம், அக்கம் பக்கத்திலுள்ளவர்களெல்லாம் சேர்ந்து எங்கள் மேல் வீட்டு வசதி வாரியத்திடம் புகார் கொடுக்கவே, நிர்வாக இயந்திரம் ஓடோடி வந்து செடிகளையெல்லாம் அகற்ற ஆணையிட்டது!

என்னே கொடுமை! கேட்பாரற்றுக் கிடந்த நிலத்தைக் கொத்தி விளை நிலமாக்கியது பொறுக்காத மற்றவர்களை என்ன சொல்வது? எங்கள் முயற்சிக்கும் உழைப்புக்கும் இதுதானா பலன்? நினைத்து நினைத்துக் குமுறுகிறோம்!

—எல். விஜயலட்சுமி, சென்னை—78.

திகைக்க வைத்த நண்பன்!

தோட்டம் போட்டு வளர்த்து வந்த ஒரு நண்பனின் விருப்பப்படி கொய்யா, எலுமிச்சை ஆகியவற்றின் கன்றுகளை வாங்கிக் கொடுத்தேன். மூன்று மாதம் கழித்து அவனைச் சந்தித்த போது, "அவை வளராமல் குன்றிப் போய் விட்டன. என்ன உரம் போட்டும் பயனில்லை!" என்று முறையிட்டான். எனக்கும் வருத்தமாக இருந்தது. அதனால் மீண்டும் இரண்டு கன்றுகளை வாங்கிச் சென்று நானே இரு குழிகளை வெட்டி, கன்றுகள் இருந்த மண் சட்டிகளை உடைத்துவிட்டுக் குழிக்குள் நட்டேன். அதைக் கண்ட அவன், "முந்தைய செடிகள் வளராமல் போனதற்கு நான்தான் காரணம். நான் சட்டிகளை உடைக்காமலேயே கன்றுகளை நட்டுவிட்டேன்!" என்றான். நான் அவனது அறியாமையைக் கண்டு திகைத்துப் போய் விட்டேன்.

—துரைமதி, தஞ்சை—1.

புனோபிளாஸ்ட் வழங்கும் வி.ஐ.பி. ஸூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:

கே. எஸ். ராஜலக்ஷ்மி,
25/20—1, ஸ்ரீராம் நகர்,
திருவான்மியூர்,
சென்னை—600 041.



இவர்தான் மிஸ்டர் பிரபஞ்சதாசன்

இராஜா பாலச்சந்தர்



பிரபஞ்சதாசன் வாசகர் வட்டத்தில் மிகவும் பிரபலமாகப் பேசப்படும் ஒரு நபராக இருந்தார்.

ரொம்பவும் வித்தியாசமானவர், விசித்திர மனிதர் என்றெல்லாம் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டேன். எனவே, அவரைக் காண வேண்டும் என்ற ஆவல் என்னுள் பல நாட்களாக இருந்தது.

என் துரதிர்ஷ்டம். வாசகர்வட்ட கூட்டத்திற்கு நான் போகும் நாட்களில் அவர் வருவதில்லை. அதே போல, அவர் போயிருந்தால் ஏதாகிலும் காரணத்தால் நான் போகாமல் நின்றிருப்பேன். இந்த விசித்திர நிலையே அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தை என்னுள் அதிகமாக்கியது. இதைப் பற்றி நண்பர்கள் எல்லாரிடமும் கூறினேன்.

அந்த நாளும் வந்தது.

ஒரு நாள் நூலகத்திற்கு ஒரு புத்தகம் எடுக்கச் சென்றேன். நான் உள்ளே நுழையவும், வாசகர்வட்ட நண்பன் ஒருவன் வெளியே வரவும் சரியாக இருந்தது.

"ஹலோ" என்றேன்.

"வாப்பா வா. உன்னுடைய நெடுநாளைய விருப்பம் இன்னைக்கித்தான் நிறைவேறப் போகுது" என்றான்.

"என்ன?"

"தோ இவர் தான் மிஸ்டர் பிரபஞ்சதாசன்' என தன் பக்கத்தில் வந்தவரைச் சுட்டிக் காட்டினான்.

"இவன் தான் உங்களை பார்க்கணும்னு ரொம்ப விருப்பப் பட்டுக்கிட்டு இருந்தான்' என என்னைப் பற்றி அவரிடம் கூற இருவரும் வந்தனம் செலுத்திக் கொண்டோம்.

பிரபஞ்சதாசன்— ஏறக்குறைய என் வயதுக்காரர் தான், நாற்பது இருக்கும்.

ஐந்தரை அடிக்கு ஆஜானுபாவாக இருந்தார். மிடுக்கான தோற்றம். மாநிறம். பெரிய மீசை, பெரிய கிருதா. சில்க் ஜிப்பாவும், பாண்டும் கிளிப் பச்சையில் உடுத்தியிருந்தார். கழுத்தில் மைனர் செய்ன் டாலடித்தது. கையில் 'ஐ. நா. சபையும், உலக அமைதியும் — ஓர் விளக்கம்' என்ற புத்தகம் இருந்தது.

"எனக்குக் கொஞ்சம் அவசர வேலை இருக்கு. நீங்க பேசுங்க, நான் போறேன்'' என விலகிக் கொண்டான் அறிமுகப்படுத்தி வைத்த நண்பன்.

ஒரு மரத்து நிழலுக்குப் போனோம். பெஞ்சில் அமர்ந்தோம்.

"உங்கள பாத்ததுல எனக்கு ரொம்பவும் சந்தோஷம் மிஸ்டர்....'' அவர் பெயர் சட்டென மறந்துவிட்டது. (நான் சரியான ஞாபக மறதிக்காரன்).

"நிகரகுவான்னு கூப்டுங்க'' என்றார் அவர்.

எனக்கு என்னவோ போல இருந்தது. 'கிண்டல்' பண்ணுகிறாரோ?

கொஞ்ச நேரம் எத்தியோப்பிய பஞ்சம் பற்றி அழுதார். பொறுப்பற்ற அந்த நாட்டு அரசாங்கத்தைக் காரமாகச் சாடினார். இன்னும் கூட அதிகமாக அந்த நாட்டுக்கு அமெரிக்கா உதவலாம் என சிபாரிசு செய்தார்.

நான் பேசாமல் கேட்டுக் கொண்டு இருந்தேன்.

"நீங்க சொல்றதெல்லாம் சரிதான் மிஸ்டர்.....'' (ஞாபகமறதி)

"ஜாம்பியான்னு கூப்டுங்க.''

மறுபடியும் எனக்கு என்னவோ போல இருந்தது.

"என்ன ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு நாட்டோட பேர் சொல்றீங்க?'' என்றேன் எரிச்சலுடன்.

"என் பேர் கேட்கும்போது, எந்த நாட்டோட நினைவு எனக்கு வருதோ அதான் என் பேர்ன்னு சொல்லுவேன். தட்ஸ் மை பாலிஸி!''

"எதுக்காக இப்படி?''

"பின்ன என்னங்க? இந்த பிரபஞ்சத்த எடுத்துக்கிட்டா, அதுல இத்துணூண்டு, ஒரு கடுகளவுகூட இருக்காது இந்த உலகம். இதுலேயே உன் நாடு என் நாடுன்னு பிரிச்சிகிட்டு, சீச்சீச்சீ..... எனக்கு இது கொஞ்சங்கூட பிடிக்கலே. உலக நாடுகள்ளாம் ஒரே குடியரசு ஆகணும். ஒற்றுமையா இருக்கணும். அதான் என்னோட விருப்பம், லட்சியம் எல்லாம். என்னோட பேசறவங்களுக்கு இந்தக் கருத்த வலியுறுத்தத்தான் இப்படியொரு வழக்கத்த வச்சிருக்கேன்.''

அவர் கூறிய காரணத்தைக் கேட்டதும் எனக்கு மெய்சிலிர்த்தது. அவர்மீது இருந்த மதிப்பு ஒருபடி ஏறியது. இருந்தாலும் அவர் வாயைக் கிளறினேன்.

"இப்ப இருக்கிற தனித்தனி அமைப்பு நல்லதுதானே'' என்றேன்.

"எத வச்சி சொல்றீங்க?''

"ஒரே நாடா இருந்தா எல்லாவிதமான மக்களின் தேவைகளேயும் சரியா கவனிச்சு பூர்த்தி செய்ய முடியாதே.''

"இன்னைக்கு ஒரு நாடு பஞ்சத்தல வாடுது. மில்லியன் கணக்கா சாகறாங்க அங்க. இன்னொரு நாடு கோதுமையை கொண்டுபோய் கடல்ல கொட்றாணும். இது எதனால? நாடு பிரிஞ்சிருக்கிறதால. நா யாரோ நீ யாரோன்ற மனப்பாங்கு வந்திடுச்சி. நீ செத்தா எனக்கென்ன என்ற அலட்சியம். அப்படியே உதவி செய்ய நினைச்சாலும் சட்டம் அது இதுன்னு ஒண்ணு நடுவுல வந்து தடுக்குது'' ஆத்திரத்தோடு பேசினார் பிரபஞ்சதாசன்.

மேலும் அவர் கூறினார்: "இந்த தேசிய இயக்கத்தல எனக்கு கொஞ்சங்கூட உடன்பாடு கிடையாது.''

நான் அதில் ஈடுபாடு கொண்டவன் என்பதால் எனக்கு 'சுருக்'கென்றது.

"அதனாலே நாட்டுப் பற்று வளரும்னு சொல்றாங்களே.''

"அதெல்லாம் சுத்த டுப்பு. தோ பாருங்க. என்னை. நா போட்டிருக்கிற ஜிப்பா சிங்கப்பூர் சரக்கு. பேண்ட் துபாய் துணி. கால்ல இருக்க செருப்பு ஜப்பான்து, வெயிட்டே இருக்காதுங்க. இந்த வாட்ச் இம்மி பிசகாது, சுவிஸ்மேட் இது. எனக்கு இருக்கே நிறைய தேசபக்தி. அது எப்டி?''

என்னால் பேசமுடியவில்லை.

என்றாலும், சும்மா இருக்க முடியாமல், "இந்தியா சார்பா என்ன உடுத்தியிருக்கீங்க இப்ப?'' என்றேன்.

மேலும் கீழும் பார்த்தார். ஒன்றுமில்லை. வழிந்த அசடை மறைத்துக் கொண்டு கூறினார். "இப்ப ஒண்ணுமில்ல. பட், வீட்ல வச்சிருக்கேன். அத ஒரு நாளைக்கி போடுவேன். இருந்தாலும் உங்க கேள்வியில ஏதோ ஒரு பொடி இருக்கற மாதிரி தெரியுது. அதனால சொல்றேன், இப்ப போட்டிருக்க ஜட்டி இந்தியா மேட்தான்.''

ஏண்டா கேட்டோமென்றாகிவிட்டது எனக்கு. மேலும் என் கேள்வியால் அவர் சீரியஸ் மூடில் இருப்பது தெரிந்தது. எனவே, சமாதானப்படுத்த முயன்றேன்.

"உங்க கருத்த நா ஏத்துக்கறேன் மிஸ்டர் போர்னியோ.''

"அது ஒரு நாடுங்களா?''

"ஆமா. இந்தோனேஷ்யா பக்கத்ல இருக்கு'' என்றேன். மேலும் அந்த நாட்டைப் பற்றிய விவரங்களைக் கூறினேன்.

மிகவும் சந்தோஷப்பட்டார். கூறியதற்காக நன்றி சொன்னார்.

வரும் வாரம் வாசகர் வட்டத்தில் தான் பேசப் போவதாகக் கூறினார். நிச்சயம் வருவதாக வாக்களித்து விடைபெற்றேன்.

இவர் சிறிது வித்தியாசமான பிரஜை தான் என எனக்குப்பட்டது.

* * * * *

என்ன தான் பேசப்போகிறார் என்ற



எதிர்பார்ப்போடு வாசகர் வட்டக் கூட்டத்திற்குப் போனேன்.

சும்மா சொல்லக்கூடாது. மனிதரிடம் நிறையவே சரக்கு உள்ளது.

தமிழில் மழையாகப் பொழிந்தார். தேவைப்பட்ட இடங்களில் ஆங்கிலம் சரளமாகக் கொட்டியது. நடுவில் தெலுங்கு, மலையாளம் எல்லாம் பேசினார். இந்தி எதிர்ப்புப் பிரசாரத்தைக் கண்டித்தார். அதற்கு அடையாளமாக சில நிமிடங்கள் இந்தியிலேயே பேசினார்.

ஒருமொழி இன்னொருமொழியை அழிக்க முடியாது என வாதிட்டார்.

அவர்பேச்சைக்கேட்டபின் இந்திஎதிர்ப்பு பற்றிய என் கருத்தை மறுபரிசீலனை செய்யலாமே என்றுகூட நினைத்தேன்.

''நாட்டுக்குள்ளேயே இப்டி வேற்றுமை இருந்தா, உலக சமாதானம் எப்போ வர்றது?'' என குறைப்பட்டுக் கொண்டார்.

''வேற கிரகத்துல இருந்து ஒரு பலமிக்க எதிரி வரணும். அப்பதான் இந்த உலகம் தனக்குள் இருக்கிற பகைமையையும் வேற்றுமையையும் விட்டு ஒற்றுமையாகும்'' என்ற விநோதமான ஆனால் சிந்திக்க வைக்கும் கருத்தைச் சொன்னார்.

இறுதியில், ''உலக ஒற்றுமை ஓங்குக'' என வீராவேசமாக முழங்கிவிட்டு முடித்தார்.

உறுப்பினர்கள் எல்லோரும் உணர்ச்சிவசப்பட்டு, அதையே திரும்பக் கூறினர். நானும் கூறினேன்.

மற்றவர்கள் இவரைப் பற்றிக் கூறியது உண்மை என உணர்ந்தேன்.

கூட்டம் முடிந்தபின் என்னிடம் வந்தார் பிரபஞ்சதாசன்.

''பேச்சு, எப்படி இருந்தது?'' எனக் கேட்டார். நான் வானளாவப் புகழ்ந்தேன்.

''புகழுறதோட நிறுத்திக்காதிங்க. சிந்தியுங்க'' என்றார்.

பிரிந்தோம்.

* * * * *

வேலை காரணமாக தொடர்ந்து மூன்று, நான்கு வாரங்களாக வாசகர் வட்டம் பக்கமே போகவில்லை.

ஒருநாள் ஆஃபீஸ் விலாசத்திற்கு ஒரு கடிதம் எனக்கு வந்தது. பிரபஞ்சதாசன் தான் எழுதியிருந்தார்.

என் விலாசம் இவருக்கு எப்படித் தெரியும்? ஆச்சரியப்பட்டேன்.

கடிதத்தைப் படித்தேன்.

'அன்புடைய நண்புருக்கு.

நண்பர்டான் ஸானியா எழுதிக்கொள்வது.

ஏன் வாசகர் வட்டக் கூட்டங்களுக்கு சில வாரங்களாக வரவில்லை? வர முயற்சி செய்யவும்.

லக்கேஜ் பெட்டித் தயாரிப்புத்
தலைவர்களின் படைப்பு—

விஐபி

கன்கார்டு

வந்திறங்குது இப்போது—

இதோ, ஜெட் யுகக் கட்டழகுள்ள
புதிய விஐபி கன்கார்டு! நாகரீக
நரம்போடிய அலாதி ஸ்டைலிங்.
கண்டறியாத வர்ண வகைகள்:
பீச் க்ரீம் (செவ்விள மஞ்சள்),
டெஸர்ட் பிரவுன் (மணற் கபில
நிறம்), மிஸ்ட் க்ரே (பனிச்
சாம்பல்), க்ரீம் சாக்கலேட்,
மேலும் பலப் பல. உட்புறமோ
இடவசதி மிகுதி.

ஓடோடிப் பார்வையிடுவீர்:
அருகிலுள்ள வியாபாரியிடம்...
சொகுசு லக்கேஜ் புதுவரவுகள்.

ஆகாயமெட்டும் எங்கள் அதிநவீனக் கற்பனை.



**தேர்ந்தெடுக்க மிகப் பல வகைகள்,
வருங்கால யோக வரவுகளோ மேலும் பலப்பல.**

நிற்க, நான் கூறிய கருத்துக்களைப் பற்றி யோசித்தீர்களா? ஒவ்வொருவரும் உலக ஒற்றுமையைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தால், விரைவில் உலகம் ஒன்றாகிவிடு மன்றோ? சிந்தியுங்கள்.

அன்புடன்,
அங்கோலா.

கொள்கையில் இத்தனை துடிப்புடன் இருக்கிறாரே என்று வியந்தேன்.

சந்தேகமே இல்லை. இவர் ஒரு மாறுபட்ட லட்சிய புருஷர்தான்.

* * * * *

மயிலாப்பூரில் ஒரு அவசரக் காரியமாகப் போனேன்.

நினைத்ததைவிட சுலபமாக முடிந்தது வந்த வேலை. அந்த சந்தோஷத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருந்தபோது, நண்பர் பிரபஞ்சதாசின் ஞாபகம் வந்தது.

என்ன விந்தையான மனிதர்!

அவர்கூட மயிலாப்பூரில்தான் இருப்பதாக ஒருமுறை கூறினார். விலாசம் தெரிந்தால் போய் பார்த்திருக்கலாமே என வருத்தப்பட்டேன்.

நல்ல வேளையாக எதேச்சையாக அந்தப் பக்கமாகப் போனார் நண்பர் பிரபஞ்சதாசன். என்னைப் பார்த்துவிட்டார்.

ஓடி வந்து அணைத்துக் கொண்டார். இவ்வளவு தூரம் வந்துவிட்டுத் தன் வீட்டிற்கு வராமல் போகப்போவதைக் கூறி வருத்தப் பட்டார்.

விலாசம் தெரியாது என சமாதானப் படுத்தினேன்.

''ஏதாச்சும் அவசரமா?'' என்றார்.

''அவசர வேலை முடிந்துவிட்டது. இப்ப நிதானமாக வீட்டுக்குப் போறேன்.'' என்றேன்.

''அப்பமன்னு என் வீடு பக்கத்லதான் இருக்கு வாங்க. சாப்டுப் போகலாம்'' என அழைத்தார்.

''பரவாயில்லை. இன்னொரு நாளைக்கு வர்றேன்.''

வற்புறுத்தினார். போகாவிட்டால் கோபப் படுவார் போல தெரிந்தது.

இப்படியொரு மனிதருடன் - அதுவும் அவர் வீட்டிலேயே சாப்பிடக் கொடுத்து வைக்க வேண்டும் என நான் எண்ணியதால் சம்மதித்தேன்.

மேலும், அவர் வீட்டைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலும் எனக்குள் இருந்தது.

வீடு அப்படியொன்றும் பெரியதாக இல்லை. ஆனால், சுத்தமாக இருந்தது. வசதியாக இருந்தது. அறைகளை அழகுபடுத்த திட்டமிடப்பட்டு இருப்பது தெரிந்தது.

சுவரெல்லாம் நிறைய தேசப்படங்களாகத் தொங்கின. ஆதிக் குடியரசுகள் முதல், நேற்று தோன்றிய குட்டி நாடுகள் வரை தனித் தனியாக அணி வகுத்து நின்றன.

ரீகனும், கார்பச்சேவும் தோள் மீது தோள் கைப்போட்டுக் கொண்டு சிரிப்பது போல் ஒரு படம் மாட்டியிருந்தது.



ஆபத்தில் உதவிய — உதவி பெற்ற அனுபவம்

போட்டி: 14

ஆபத்தில் உதவிய அல்லது உதவி பெற்ற அனுபவத்தைப் பெருமையுடன் அல்லது நன்றியுடன் நினைவு கூர்ந்து, கீழே உள்ள வெற்றிடத்தில் எழுதி அனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு. தவிர, குலுக்கல் முறையில் ஒருவருக்கு விலையுயர்ந்த வி.ஐ.பி. ஸூட்கேஸ். உறையின் மேல் 'ஆபத்தில் உதவிய — உதவி பெற்ற அனுபவம்' என்று குறிப்பிட வேண்டும். இந்த அரைப் பக்கத்தை மட்டும் முழுமையாகக் கத்தரித்து அனுப்புங்கள்.

முடிவு தேதி: 19.8.85

இன்னும் 39 விலையுயர்ந்த வி.ஐ.பி. ஸூட்கேஸ்கள் உங்கள் வீடுதேடி வரக் காத்திருக்கின்றன. வாரந்தோறும் போட்டியில் பங்கு பெறுங்கள்.

என் பெயர்: ....
விலாசம்: ....
....

வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்

''இது எப்ப பிடிச்சது?''

''பிடிச்சதில்ல, தயார் பண்ணினது'' என்றார்.

அதற்கான அர்த்தத்தைப்புரிந்து கொண்டேன்.

திடீரென்று 'திமுதிமு'வென ஐந்து பிள்ளைகள் ஓடி வந்தனர்.

''எல்லாம் என் பசங்கதான். ஃபேமிலி ப்ளானிங்ல எனக்கு நம்பிக்கை கிடையாது' என்றார்.

நான் தர்க்கம் பண்ண விரும்பவில்லை.

''இவந்தா பெரியவன். ரொம்ப சுறு சுறுப்பு. பேர் ஜப்பான்துரை. இவன் அடுத்தவன். நல்ல அறிவாளி. கிரேக்கஞானின்னு பேர் வச்சிருக்கேன். இது மூணாவது பையன். நல்ல குதிச்சிக் குதிச்சி ஓடுவான். ஸ்போர்ட்ஸ்ல ஜிடலான்னு இருக்கேன். இவன் பேரு ஆஸ்ட்ரேலிய அரசன்.

அடுத்தது கருப்பாக இருந்த பையனைக் காட்டினார். ''இவன் நாலாவது. பேர் ஆப்ரிக்க சிங்கம். இவதா கடைக்குட்டி.''

சட்டைப் போடாமல் அம்மணமாக இருந்தது கடைக்குட்டி பாப்பா.

''துணிய மாட்டிவிட்டா உடனே ஒண்ணு வொண்ணு கழற்றி எறிஞ்சிடுவா'' என கூறி செல்லமாகப் பாப்பாவின் கன்னத்தில் தட்டினார்.

''பேர் என்ன பாப்பாவுக்கு?''

''அமெரிக்கசுந்தரி.''

சரியான பேர்தான் என நினைத்துக்கொண்டேன்.

பிரபஞ்சதாசன் மனைவி வந்து எனக்கு வணக்கம் சொன்னார்கள்.

''இவதா என்னோட ஒய்ஃப். பேர் லலிதா. ஆனா நா அகிலாண்டம்னுதான் கூப்டறது. அகில அண்டமும் ஒண்ணாகணும்கற என்னோட கருத்த எனக்கு நானே வலுயுறுத்திக்க'' என்றார்.

''உங்களைப் போல கொள்கைப் பிடிப்பு உள்ளவரை நா இதுவரைக்கும் பார்த்ததே இல்லே'' என்றேன் மனதார.

''புகழ்ச்சி எனக்குப் பிடிக்காது'' என்று கூறி சிரித்துக் கொண்டார்.

இருவரும் பல விஷயங்கள் பற்றி பேசிக் கொண்டு இருந்தோம்.

உள்ளே தடபுடலாக சமையல் நடப்பதை என் மூக்கு துப்பறிந்துவிட்டது. நாக்கில் ஜலம் ஊறியது எனக்கு.

கொஞ்ச நேரம் கழித்து உள்ளே போனார் பிரபஞ்சதாசன்.

அவருடைய மனைவி அவரிடம் என்னவோ சொல்லுவது எனக்குக் கேட்டது. உடனே, நான் இருக்கிறேன் என்பதைக் கூட மறந்தவராக் சத்தம் போட ஆரம்பித்தார் பிரபஞ்சதாசன்.

''வந்தானா? இங்க வந்தானா அவன்? யார்டி அவன இங்க வரச் சொன்னது? உன்ன யாருடி அவன சேர்க்கச் சொன்னது? என் தம்பிங்கற உறவெல்லாம் அறுந்து போய் மூணு வருஷமாயிடுச்சி. இப்ப நா யாரோ, அவன் யாரோ. அறுந்த உறவு அறுந்ததுதான். அதுல மாற்றமே கிடையாதுடி. இன்னொரு தரம் வந்தான்னா, இனிமே இந்தப் பக்கமே வரக்கூடாதுன்னு நா சொன்னதா சொல்லிடு தீர்மானமா. தம்பியாம் தம்பி. ப்ளடி.. பாஸ்ட்.....''

எனக்கு என்னவோ போல் ஆகிவிட்டது.

எழுந்து வந்துவிட்டேன்! அவரிடம் சொல்லிக்கொள்ளக் கூடத்தோன்றவில்லை எனக்கு!



"கோவாவைக் கெடுப்பது டூரிஸ்டுகளே!"

-கோபமாகக் கூறுகிறார் ஒரு பத்திரிகை ஆசிரியர்

கோவாவின் லோக்கல் தினசரிகளைப் பார்வையிட்டபோது யாராவது ஒரு எடிட்டரையாவது பார்க்கலாமே என்று ஆசை வந்தது.

'ஓ ஹெரால்டோ' தினசரியின் அலுவலகம் தேடிப் போனோம். எடிட்டர் ரூம் என்று காட்டப்பட்ட அறை சற்றே இருளாயிருந்தது. காற்றே வராத ஒரு மூலையில் மேஜை ஒன்று. சாயம் போன நாற்காலி. மேஜையின் மீது இருந்த சமாசாரங்கள் ஒரு நாகரீகக் குப்பைக் கூடையைக் கவிழ்த்த மாதிரி இருந்தன. நாற்காலியில் நேரே உட்காராமல் 45° கோணத்தில் திரும்பி உட்கார்ந்திருந்த மனிதர் புன்னகை செய்தார்.

"நான்தான் ராஜும் நாராயண். எடிட்டர்."

அறிமுகம் செய்து கொண்டோம்.

''சந்தோஷம்'' என்றார். மேஜை மீது குழறிக் கொண்டிருந்த சோடா பாட்டிலை எடுத்து வாயில் ஒரு மடக்கு கவிழ்த்துக் கொண்டார். சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டார். கண்களைச் சுருக்கிக் கொண்டார். ''கேளுங்கள்!''

''கோவாவில் பத்திரிகைச் சுதந்திரம் எப்படி?''

''விடுதலைக்கு முன்புவரை சென்ஸார்ஷிப் இருந்தது. அப்புறம் இரும்புச் சுரங்கங்களை ஆள்பவர்கள் தினசரிகளையும் ஆள ஆரம்பித்தார்கள். நவீன் டைம்ஸ், கோவன் டைம்ஸ் எல்லாம் அவர்களுடைய கைப் பொம்மைகள். சல்கோம்கர்களும், சௌக்லேக்களும் எல்லாவற்றையும் ஆட்சி செய்தார்கள்.''

''உங்கள் பத்திரிகை எப்படி?''

''ஓ ஹெரால்டோவைப் பொறுத்தவரையில் நாங்கள் அதிர்ஷ்டசாலிகள். அச்சுத் தொழில் வைத்திருந்தவர்கள்தான் இந்தத் தினசரியை ஆரம்பித்துள்ளார்கள். போர்ச்சுகீசிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு 80 லிருந்து ஆங்கிலப் பத்திரிகையானது.''

"உங்கள் பேப்பர் கத்தோலிக்கர்களைத்தான் ஆதரிக்கிறதாமே?''

''பத்திரிகையின் சொந்தக்காரர்கள் கத்தோலிக்கர்கள் என்றால் இந்து மதத்தையா ஆதரிப்போம்? இப்பொழுது நவீன் டைம்ஸ் ஒரு இந்துப் பத்திரிகை, அது தெரியுமா?''

''அது போகட்டும். பேப்பரில் உலக செய்திகளோ, குறைந்த பட்சம் அகில இந்தியச் செய்திகளோ அதிகம் இல்லையே. கோவாவில் பாங்க் தன் அட்ரஸை மாற்றிக் கொண்டது பற்றியெல்லாம் பெரிதாய்ச் செய்தி போடுகிறீர்களே?''

''கோவா ஒரு சின்ன உலகம். பத்து லட்சம் ஜனத்தொகை. ஒரு பெரிய கிராமம் மாதிரி என்று சொல்லலாம். கிராமத்தில் ஒரு க்ஷவரக்கடை மூடப்பட்டால் கூட அதுதான் பெரிய செய்தி. கோவாவிலும் அந்த மாதிரிதான். அடுத்த தெருவில் என்ன நடந்தது என்று தெரிந்து கொள்வதுதான் மக்களுக்கு முக்கியம். நான் முழுக்க முழுக்க ஓர் லோக்கல் தினசரியைத்தான் நடத்துகிறேன். உலகச் செய்திகளைத்தர வேறு எவ்வளவோ பேப்பர்கள் இருக்கின்றன. அடுத்தது விளம்பரங்கள். விளம்பரம் தரும் பாங்க் எந்த தகவல்

கொடுத்தாலும் செய்தியாகப் போடுவோம். செய்தித்தான் என்பது சோப் விற்பனை மாதிரிதான். வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப நாங்கள் தரும் செய்திகளின் அமைப்பு மாறும்.''

''மற்றதின சரிகளைவிட நீங்கள் சிறப்பாய்ப் பணியாற்றுவதாய் நினைக்கிறீர்களா?''

''நிச்சயமாக. கோவா செய்திகளுக்கு முக்கியத்துவம் தருகிறேன். இப்பொழுது மத்திய அமைச்சர் வசந்த் சாத்தே வந்திருந்தார். இரும்புத் தொழிலால் ஏற்படும் பொல்யூஷன் பற்றிக் கண்டித்துப் பேசினார். மற்றப் பத்திரிகைகள் இந்தச்செய்தியை இருட்டடிப்பு செய்தன. ஏனென்றால் அவற்றின் சொந்தக்காரர்கள்தான் இரும்பு சுரங்கங்களையும் வைத்திருப்பவர்கள். எங்கள் பத்திரிகையில் இதைக் கொட்டை எழுத்தில் போட்டோம். தண்ணீர்ப் பிரச்னை பற்றி விடாமல் எழுதுகிறோம். அரசாங்கத்தைத் தாக்கி மற்றவர்கள் எழுத மாட்டார்கள். காரணம் இவர்களால் அவர்களுக்குக் காரியம் ஆக வேண்டும். அவர்களால் இவர்களுக்குக் காரியம் ஆக வேண்டும்.''

''அப்படியென்றால் உங்களுக்கு அரசியல் தடைகள் இருக்குமே?''

''நோ — நோ பொலிடிகல் பிரெஷர். பத்தாயிரம் பிரதிகள் விற்றால் கூட எனக்கு எடிட்டர் என்ற மரியாதையும், என்னிடம் பயமும் உண்டு. போலீஸ் ஐ. ஜி. யைப் பார்க்க வேண்டுமென்றால் நான் தேடிப் போக வேண்டாம். கூப்பிட்டனுப்பினால் இங்கே கதறிக் கொண்டு வருவார். உண்மையில் இது ஒரு மாயையான மரியாதைதான். என்னை ஏமாற்றுவதற்காகச் செய்யப்படுகிற மரியாதைதான். தெரிந்திருந்தும் அனுபவிக்கிறேன்.''

''நீங்கள் முறையாய் ஜர்னலிஸம் படித்தவரா?''

''முட்டாள்தனம். படித்து என்ன கிழித்தார்கள் ஜர்னலிஸ்ட்கள். பிராக்டிகலாகக் கற்பதுதான் நிற்கும். இந்தியன் எக்ஸ்பிரஸ், ஆன்லுக்கர், மிர்ரர், இம்ப்ரிண்ட் என்று எத்தனையோ இடங்களில் எடிடிங் செய்தவன் நான். ஸ்கூலுக்குப் போய் டிப்ளமா வாங்க அவசியம் இல்லை.''

''இப்பொழுது உங்கள் பேப்பரின் குறிக்கோள் என்ன?''

''நாங்கள் முதல் கட்டத்தில் இருக்கிறோம். பெரிதாய்ச் செயல்படப் பணம் போதவில்லை. வருவதைச் சேர்க்கிறோம். இன்னும் விரிவாக்குவோம்.''

''உங்களைப் பற்றிக் கேட்கவில்லை. மக்களுக்காக உங்கள் தினசரி என்ன செய்யப் போகிறது?''

ராஜூம் நாராயண் சோடாவை மறுபடி ஒரு 'மடக்' விழுங்கினார். குறும்பாய்ப் புன்னகைத்தார். வாயில் புது சிகரெட்.

''நிறைய செய்யப் போகிறோம். முதலில் உங்களையெல்லாம் துரத்தப் போகிறோம்.''

''எங்களையா?''

''உங்களை என்றால் சுற்றுலாப் பயணிகளை. கோவாவின் அமைதியையும், அழகையும் கெடுக்கும் இந்த டூரிஸ்ட்களை நான் வன்மையாய் எதிர்ப்பவன். டூரிஸம் என்ற பேரில் போதை மருந்துகளை ஊருக்குள் கொண்டு வந்து அப்பாவி மக்களைக் கெடுக்கிறார்கள், பாவிகள். குடித்துவிட்டு தெருவில் புரண்டு கிடக்கிறார்கள். இந்திரா காந்தி சுடப்பட்டபோது வெளிநாட்டினர் சில நாட்களுக்கு இந்தப் பக்கம் வரவே பயப்பட்டார்கள். இந்திய டூரிஸ்ட்களும் குறைந்திருந்தார்கள். அது அருமையான நேரம். முதலில் அரசாங்கம் சுற்றுலாவுக்கு திட்டம் போட்டட்டும். அப்புறம் டூரிஸ்ட்கள் வரட்டும்.''

''இந்தியாவின் ஒரு பகுதி கோவா. இங்கு டூரிஸ்ட்கள் வருவதை நீங்கள் எப்படி ஆட்சேபிக்க முடியும்?''

''இன்றைக்கு இப்படிக் கேட்பீர்கள். வெளியிலிருந்து வருபவர்கள் தங்கிப் போனால் கோவன் மக்கள் நிறைய பிரச்னைகளை சுமக்கிறார்கள். இன்னும் பத்து வருடங்களில் கோவா இன்னொரு அஸ்ஸாமாக மாறப் போகிறது. அப்போதுதான் விழித்துக் கொள்வார்கள். இப்போது முக்கியமான பெரிய பதவிகளையெல்லாம் கோவனல்லாதவர்கள் (Non-Go ans) பிடித்துக் கொண்டுவிட்டார்கள்.''

''நீங்கள் கூடத்தானே?''

சிகரெட்டை எடுத்துவிட்டுக் கண்களைச் சுருக்கிக் கொண்டார். ''எனக்கு நிறைய வேலைகள் இருக்கின்றன. வேறு கேள்விகள் இல்லையே?'' என்றார். நாங்கள் சத்தம் போடாமல் கிளம்பி வெளியே வந்துவிட்டோம்!

குளிக்க முடியாத அருவி!

பனாஜியிலிருந்து அறுபது கி.மீ. தொலைவில் இருக்கும் தூத்சாகர் நீர் வீழ்ச்சியை ரயில் மார்க்கமாகத்தான் போய்த் தொட முடியும். குளிக்கலாம் என்று போனால் ஏமாந்து திரும்ப வேண்டியதுதான். அந்த அருவியின் சாரலை அனுபவிக்கலாம். பால் நுரைபொங்கும் பனிநீரைப் பார்த்து ரசிக்கலாம். இந்த நீர் வீழ்ச்சியின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமா என்று கோவா அரசு இப்போது ஆராய்ந்து வருகிறது.





ஆணும் பெண்ணும் சேர்ந்தே ஆடலாம்

கோவாவில் ஸ்ட்ரீட் டான்ஸ் நடைபெறுகிறதாமே! ஆண்களும், பெண்களும் சரிசமமாகக் கைகோத்து ஆடுவதுண்டாமே! உண்மையா என்ன?

ஆமாம். ஆமாம். ஆமாம்.

ஏதாவது ஒரு படையெடுப்பு நடக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். என்ன ஆகிறது? உள்ளே நுழையும் அன்னிய நாட்டினர் தங்கள் கலை நிகழ்ச்சிகளை இங்கேயும் கொண்டாடுகிறார்கள்.

உள்ளூர் மக்களுக்கு அந்தக் கலை மீது மோகம் பிறந்து, அவர்களும் அதைக் கற்றுக் கொள்ளத் தொடங்குகிறார்கள்.

அந்த மாதிரிதான் கோவாவிலும் ஆகியிருக்கிறது.

போர்த்துகீசியர்கள் கோவாவில் நுழைவதற்குமுன் அங்கே இருந்த ஹிந்துக்கள் 'ஷிக்மோ' என்ற விழாவைக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். கோவில் திருவிழாக்கள் 'Z ஆத்ராக்கள்' என்ற பெயரில் நடந்தன. கணேஷ் சதுர்த்தி விமரிசையாக நடந்தது.

மக்கள் மிகக் கோலாகலமாக அந்த விழாக்களில் கலந்தார்கள். ஆடினார்கள். பாடினார்கள்.

போர்த்துகீசியர்களின் வருகைக்குப் பின் நிறைய கிறிஸ்தவர்கள் அங்கே குடி வந்தார்கள். அவர்களுக்கு முக்கியமாக 'கிறிஸ்துமஸ்' விழா மட்டுமே இருந்தது.

எனவே அவர்களுக்கு வேறு வகை விழாக்கள் இல்லாமல் மனம் சஞ்சலப்பட்ட நேரத்தில் —

கோவா வாழ் ஹிந்துக்களும் கிறிஸ்துவ மதத்தில் சேர என்ன வழி என்று போர்த்துகீசிய அரசாங்கம் யோசித்த நேரத்தில் —

இந்தத் தெரு நடனங்களும் கார்னிவல் எனப்படும் கலைவிழாவும் ஊருக்குள் நுழைந்தன. போர்த்துகீசிய நாட்டுப்பாடல்களுடன் நடனங்களும் இங்கே வாழும் மக்களுக்கு இப்படித்தான் அறிமுகமாயின.

கிட்டத்தட்ட ஹோலிப் பண்டிகை போலவும் இருக்கிறது. சாயத் தண்ணீரைப் பீய்ச்சி அடிக்கிறார்கள். கேலியும், கிண்டலும் பொங்கி வழிகின்றன. ஊர்வலங்கள் போகின்றன.

விதவிதமான விநோதமான உடைகளுடன் நாட்டியமாடும் மக்கள் (ஆண்கள் + பெண்கள்) ஊர்வலங்களில் மேளம் கொட்டுகிறார்கள். பப்பரப்பரப்பா .... பா .... பா .... என்று ஸாக்ஸபோன் முழங்குகிறது. 'நீ வா, நீ வா' என்று வயலின் அழைப்பு விடுக்கிறது!

இரவு ஏழு மணி சுமாருக்கு ஊர்வலம் நகரின் முக்கியமான சர்ச்சை ஒட்டியுள்ள ஒரு மைதானத்தை அடைகிறது. பெரிய தட்டி போட்டு மைதானத்தை சுற்றி வளைத்திருக்கிறார்கள். இந்த மைதானத்தில் நுழைவதற்குக் கட்டணம். ஆண்களுக்கு மட்டும். ஏனும்?

இங்கேதான் ஸ்ட்ரீட் டான்ஸ் நடைபெற இருக்கிறது. ஸ்ட்ரீட் டான்ஸில் பங்குகொள்ளும் ஆண்கள் தங்களுடன் ஒரு பெண்ணையும் கூட்டி வரவேண்டும். பெண்களுக்கு அனுமதி இலவசம். உள்ளே நுழைந்தால் பாண்ட் ம்யூஸிக், பீர், விஸ்கி, பிராந்தி இன்ன பிற. இசையுடன், லேசாக போதையும் கலந்தவுடன் நடனம். மேற்கத்திய பாணியில் நடனம் மட்டுந்தான். அதற்கு மேல் எல்லை மீறுதல் ..... மூச்! யார் வேண்டுமானாலும், யாருடன் வேண்டுமானாலும் ஆடலாம். இந்த ஸ்ட்ரீட் டான்ஸின்போதே பெண் பார்க்கும் படலமும் நடைபெறப் பல கல்யாணங்கள் சொர்க்கத்திற்குப் பதிலாக இந்த நடன மைதானத்திலேயே நிச்சயிக்கப்படுகின்றன.



இவளுடைய ஃப்ளோரைட் பாதுகாப்பினை பினாகா ஃப்ளோரைட் மூலம் அளியுங்கள்



உங்கள் பற்கள்
பல்லாண்டு நீடித்திருக்க,
சொத்தை விழுவதிலிருந்து
அவைகளைப் பாதுகாக்க வேண்டும்.
இதோ பினாகா ஃப்ளோரைட். அவைகளுக்கு
ஃப்ளோரைட் மூலம் இன்றியமையா பாதுகாப்
பளிக்கிறது. ஏனெனில், தீங்கு விளைவிக்கும் அமிலங்
கள் பற்களின் பரப்பைத் தாக்கும் போது, பற்களினால்
கிரகிக்கப்பட்ட ஃப்ளோரைட், பல்லின் எனாமலுக்கு
சொத்தையை எதிர்க்கும் ஆற்றலைக் கொடுக்கிறது. இதன் மூலம்
பற்சிதைவு ஆரம்ப கட்டத்திலேயே தடுத்து நிறுத்தப்படுகிறது.
பற்சிதைவையும் சொத்தையையும் பினாகா
ஃப்ளோரைட் உபயோகித்து தடுத்து நிறுத்துங்கள்.

உங்கள் பற்கள் பல்லாண்டு வாழ

பினாகா ஃப்ளோரைட்
டூத்பேஸ்ட்

இந்தியாவின் முதல் முதல் சக்தி வாய்ந்த ஃப்ளோரைட் பற்பசை

ULKA-HCG-BF-10-85-TAM

நிம்மதி தேடும் நிர்வாண ஹிப்பிகள்

காசிக்குப் போய்விட்டு விஸ்வநாதர் கோயிலைப் பார்க்காமல் வந்தாலும் பாவமில்லை. கோவா போய்விட்டு, ஹிப்பிகளை தரிசிக்காமல் வந்தால் மோட்சம் கிடைக்காது.

'கலங்கோட் பீச்சுக்குப் போங்கள்..அங்கே தான் காற்று வாங்கிக் கொண்டிருப்பார்கள்' என்றார்கள் சிலர். அவர்கள் சொன்ன நேரம், கிளம்பத் தயாராய் ஒரு பஸ் நின்று கொண்டிருந்தது. போய்விட்டு வந்து டிபன் சாப்பிடலாம் என்று பட்டினி வயிற்றைச் சமாதானப்படுத்திக் கொண்டு அவசரமாய்த் தொற்றிக் கொண்டோம்.

கிட்டத்தட்ட நாற்பத்தைந்து நிமிடம் பஸ்ஸில் எங்களை முறுக்குப் பிழிந்ததுதான் மிச்சம். பொன்மணலின் நெடுக டூரிஸ்ட் பஸ்கள் கொண்டு வந்து துப்பிய மனிதர்கள் மட்டுமே. அப்புறம், போனால் போகிறதென்று காணப்பட்ட நீச்சல் உடை தேவதைகள், கடலில் ஆடிக் கொண்டிருந்த ஒரு தம்பதியர். ஆதாம்களையும், ஏவாள்களையும் அங்கே காணவே முடியவில்லை. பீச்சுக்கு வரும் பாதையில் காமிரா, செண்ட், டேப் என்று துண்டு பரப்பி விற்கும் ஹிப்பிகள் தவிர மணற்பரப்பில் ஒரு வெளிநாட்டு ஜீவனும் கண்ணில் படவில்லை.

'அன் ஜுனா பீச்சுக்குப் போய்ப் பாருங்கள்.'

அடித்துப் பிடித்துக் கொண்டு அங்கே போனால் காம்ப் காலி.

வகாதூர் பீச்சை யாரோ சிபாரிசு செய்தார்கள். போனோம்.

'பாகா பீச், பாகா பீச்' என்று யாரோ முனகினார்கள்.

'அடடா, வெள்ளை மணல் கொண்ட கோல்வா பீச்சில்தானே அவர்கள் இருப்பது' என்று யாரோ பரிதாபப்பட்டார்கள்.

கால் வலி, வயிற்றுப் பசி என்று எதையும் பொருட்படுத்தாமல் ஓடினோம். சாமான்கள் விற்கும் ஹிப்பியைப் போட்டோ எடுக்கவே 'ஃபைவ் ருபீஸ்' என்று விலை வைத்திருக்கிறார்கள். ஆகையினால் ஒரேயொரு ஹிப்பியை க்ளிக்கினோம்.

சில குளியல் காட்சிகளை அமுக்கிக் கொண்டோம். மணற்பரப்பில் மகிழ்ந்து கொண்டிருந்த மனிதர்களைப் பிடித்துக் கொண்டோம். ஆவல் தணியாமல் ஆதாம், ஏவாள்களைத் தேடினோம்.

கடைசியில் டிரஸ் மாட்டிய ஒரு ஹிப்பியை அணுகினோம். விஷயத்தைச் சொன்னோம்.

''வந்துவிட்டீர்களா? நிம்மதியாய் இருக்க விட மாட்டீர்களே!'' என்று முணுமுணுத்தார். அப்புறம் எங்கள் 'ஐயோ பாவம்' முகத்தைப் பார்த்து இரங்கி, ''ஹர்மல் பீச்சிற்குப் போங்கள். அங்கேதான் பக்கத்தில் எங்கள் காலனி இருக்கிறது.''

சொர்க்கத்திற்குக் கூட கலைமாய்ப் போய்



* கலங்கூட் கடற்கரை.



• வெளிநாட்டுப் பொருள் விற்கும் ஹிப்பி.

விடலாம். ஹார்மல் பீச்சிற்குப் போவது கொஞ்சம் கஷ்டம்.

கோவாவின் வடகோடியில் இருக்கிறது ஹார்மல் என்னும் அரம்போல் கடற்கரை.

பனுஜியிலிருந்து மாப்ஸாவிற்கு ஒரு பஸ். மாப்ஸாவிலிருந்து மறுபடி சியோலிம் என்ற இடத்திற்கு இன்னொரு பஸ்!

அப்புறம் பார்த்தால் 'ஹா'வென்று விரிந்த ஒரு நதிக்கரை. அந்த நதியை பெரிய படகில் கடந்து சிபோடெம் என்ற மறுகரை ஊருக்குப் போக வேண்டும். அந்த நதியைக் கடந்தால், வானிலை, அது இது என்று எல்லாம் பார்த்து அரம்போலுக்குப் பஸ் விடுவார்கள். அது ஒரு மணி நேரப் பயணம். அப்புறம் நடை. மனித வாடையற்ற பிரதேசத்தில் ஒரு ஸ்டேட் பாங்க் கிளை மட்டும் இருக்கிறது. ஒரு பாரில் பாட்டில்கள் தெரிகின்றன. இதோ பீச், அதோ பீச் என்று குதிரை முன் காரட் கதையாகப் போய்க் கொண்டேயிருந்தால் அந்த அரம்போலை அடையலாம்.

*****

கொஞ்சம் மலைப்பிரதேசம். நிறையச் சவுக்கு மரங்கள். சின்னச் சின்ன மணல் குன்றுகள். மணலில் இன்னும் வெயிலின் சூடு பக்குவமாய்ப் பாதுகாக்கப்படும் பின் மாலை. தூரத்தில் சின்னச் சின்னக் குடில்கள். சில குடில்களின் வாசலிலேயே சின்ன ரெஸ்டாரன்ட். வறுத்த மீன் ஸ்பெஷல் ஐட்டம். காமிராவும், கையுமாய்ப் பார்த்தவுடனேயே லுங்கி கட்டிய ஹிப்பி ஒருவர் எழுந்து வருகிறார்.

"நோ ஃபோட்டோஸ் ப்ளீஸ்" — சிரிக்கிறார்.

ஊரிலிருந்து கிளம்புமுன் கடைசியாய்ப் பல் துலக்கியிருப்பார் போலிருக்கிறது.

"உங்கள் பெயரை அறிந்து கொள்ளலாமா?"

"ப்ரெஸ்?"

"ஆம்."

"மெட்ராஸ்?"

"ஆம். நீங்கள்?"

"ஈரோப்."

"அங்கே என்ன இல்லை? இங்கே என்ன இருக்கிறது?"

"என்ன இருக்கிறது அங்கே? பீச்சில் உட்கார்க்கூட காசை எண்ணி கீழே வைக்க வேண்டும். டின்னில் அடைத்து விற்கும் விஷச்சாப்பாட்டைச் சாப்பிட வேண்டும். என் தந்தை வியாபாரத்தை நினைத்து இரவு முழுவதும் தூங்காமல் தவிப்பார். தாங்க் ஜீஸஸ். நான் இங்கே நினைத்த நேரத்தில் தூங்க முடிகிறது நினைத்த நண்பர்களுடன் பழக முடிகிறது. இதெல்லாம் எனக்கு வேறு எங்கு கிடைக்கும்?"

அவர் காட்டும் திசையில் பச்சைத் தென்னைகள், தங்க மணல் படுக்கை, நிழலான குன்றுகள், நீலப்பரப்புக் கடல், அந்த கடலுக்குள் மூக்கை நீட்டியுள்ள பாறைகளின்



• அரம்போல் பீச்.

மீது மோதிப் போராடும் அலைகள்.

"யூ ஆஸ்க் மை ஃப்ரெண்ட். ஷீ வில் கிவ் யூ ஸம்திங் இன்ட்ரெஸ்டிங்".

அவருடைய ஃப்ரெண்ட் ஜப்பானிலிருந்து நிம்மதி தேடிக் கிளம்பியவர்.

"ஜப்பான் அடிமைகள் நிறைந்த நாடு. ஆண்கள் கம்ப்யூட்டர்களுக்கு அடிமைகள். பெண்கள் வீட்டுக்கு. குழந்தைகள் முட்டாள் பெட்டிக்கு. (Idiot Box தான் முட்டாள் பெட்டி எனப்படும் டீ.வி. என்று பின்னால் புரிந்தது) இந்தியாவில் கிடைக்கும் அமைதியும், நிம்மதியும் அங்கு காசு கொடுத்தாலும் கிடைக்காது."

பேசிக்கொண்டிருந்த நேரம் நான்கைந்து குழந்தைகள் — தேசம், பெயர், மதம் அறியாத சிறுமொட்டுகள், உடம்பைப் பொட்டு கூட மூடாமல் ஓடி வந்தன. எங்களைச் சுற்றிக்

கொண்டு ஓடின. திருடன் — போலீஸ் விளையாட்டோ என்னவோ. சற்றுத் தள்ளியிருந்த வாசல்களில் நான்கைந்து பேர் சுவாரஸ்யமாய்ப் புகைத்துக் கொண்டிருந்தார்கள். கையைக் குவித்து ஒருவர் ஆழமாய் உறிஞ்ச வேண்டியது. அடுத்த ஆளிடம் தள்ள வேண்டியது.

"போதை மருந்திற்கு அடிமைகள் நீங்கள். பொறுப்புக்களிலிருந்து நழுவத்தானே ஹிப்பியாகிறீர்கள்?"

அடிக்காமல் விட்டது எங்கள் அதிர்ஷ்டம். கோபமாய் முறைத்தார்கள். பின் சத்தமின்றிப் பற்கள் தெரியச் சிரித்தார்கள்.

"யாருக்கு போதை அவசியமில்லை. டெல் மீ. யூ டெல் மீ... டெல் மீ".

மரத்துக் காகம் ஒன்று அந்தக் குரலுக்குப் பயந்து எச்சமிட்டது.

"ஷிட்... சிகரெட்டும், புகையிலையும், பானும் (வெற்றிலை) இந்தியர்களை எப்படி ஆட்டுவிக்கின்றன. இந்தப் புகை அதையெல்லாம் விட எவ்வளவோ ஆபத்துக் குறைந்தது. கமான் டேஸ்ட் இட்..."

"ஹிப்பி மூவ்மெண்ட் ஒழிந்துவிட்டது." என்கிறார் ஒரு புகையாளர்.

"இப்போது நாங்கள் 'இந்து சமயத்தையும், இந்திய கலாச்சாரத்தையும் பகவத் கீதையையும் நாடி வந்திருக்கிறோம். எங்கள் நோக்கம் பக்தியே. ஹிப்பிகள் எழுபதுகளில்தான் அதிகம். இப்போது மன நிம்மதியைப் போதிக்கும் ரிஷிகளும், யோகிகளும்தான் எங்கள் ஆசான்கள்."

"ஜான் சொன்னதைக் கேட்டீர்களா?" என்று ஜப்பான் பெண்மணி சிரித்துக் கொண்டே அந்த போதை சுருட்டை வாங்கிக் கொண்டார்.

"நிம்மதியைத் தேடுகிறீர்கள் என்றால் இந்த நிர்வாணம் எதற்கு?"

"நிர்வாணம்?" என்று வெடிக்கிறார் ஜான். "இந்தியர்கள் அத்தனை பேரும் செக்ஸ் பைத்தியங்கள்: காமசூத்ரா, கஜுராஹோ! ரகசிய மனைவிகள், வைப்பாட்டிகள். சட்டத்தை மீறிய உடலுறவுகள், ஷிட். ஓர் இந்தியப் பெண்ணுடன் கலைத்தில் பேசிவிட முடியாது. பேசியவனைக் கும்பல் சேர்ந்து அடித்தே கொன்று விடுவீர்கள். நட்பு என்ற வார்த்தைக்கே அர்த்தம் தெரியாது உங்களுக்கு. செக்ஸ், செக்ஸ், செக்ஸ். ஆல்ப்ளடி செக்ஸ் மேனியாக்ஸ். டூரிஸ்ட் கைடுகள் ஒரு நிர்வாண ஆசாமியைப் பார்க்க ஒரு ரூபாய் என்று ரேட் போட்டு வசூல் செய்கிறார்கள். ஆர் யூ நாட் அஷேம்ட்? நாங்கள் எல்லாம் என்ன கம்பிகளுக்குப் பின் அடைக்கப்பட்ட மிருகங்களா? ஆடையில்லாமல் பிறந்தோம். அப்படி இருப்பது தான் அழகு என்று தோன்றுகிறது - இருக்கிறோம். வாட் ஈஸ் இட்சிங் யூ?"

"டூரிஸ்ட்டுகளுக்கு பயந்து நாங்கள் எவ்வளவோ தூரம் தள்ளி வந்துவிட்டோம். ஆனால் அவர்கள் விடுவதாயில்லை" என்றார் ஜப்பான் பெண்மணி.

"இங்கே மொத்தம் எத்தனை பேர்? வருமானத்திற்கு என்ன வழி?"

"சென்ஸஸ் எதுவும் எடுக்கவில்லை நாங்கள். முக்கால்வாசி மக்கள் திருட்டுத்தனமாய் பாஸ்போர்ட், விசா இல்லாமல் ஊடுருவியவர்கள். பணத்திற்குக் கவலையில்லை. லட்ச ரூபாய் சம்பாதிப்பது, சேமிப்பது எங்கள் நாட்டில் பெரிய விஷயமில்லை. ஒரு லட்சம் இருந்தால். இந்தியாவில் கவலை இன்றி நாட்களை ஓட்ட முடியும் எங்களால். அதுமட்டுமில்லை. வெளிநாடுகளிலிருந்து துப்பாக்கிகளையும், போதை மருந்துகளையும் கடத்திவர சில பணக்கார இந்தியர்கள் எங்களுக்கு நிறையப் பணம் தருகிறார்கள். போலீஸில் மாட்டினால் ஜெயிலில் நாங்கள். எங்கள் ஆட்கள் நிறையப் பேர் இப்படி அடைபட்டிருக்கிறார்கள். கடத்தல் தொழிலில் ஈடுபட்டிருக்கும் உண்மையான இந்தியர்கள் தப்பித்து விடுகிறார்கள்."

மலையுச்சியில் கருமை படர்கிறது. மெலிதான தூறல்கள் புறப்படுகின்றன. நிர்வாணக் குழந்தைகள் கும்மாளமிட்டுக் குதிக்கின்றன. அரை நிர்வாண பெரியவர்கள் அலட்டிக் கொள்ளாமல் வானத்தைப் பார்க்கிறார்கள்.

"உங்களுக்கோ கூச்சமில்லை. அநாவசிய வெட்கம் இல்லை. ஏன் ஃபோட்டோ எடுக்கக் கூடாது என்கிறீர்கள்?"

"யாருக்காக ஃபோட்டோ. வேண்டுமென்பவர்கள் நேரில் வந்து பார்த்துக் கொள்ளட்டும்? ஃபோட்டோ எடுத்து எங்கள் சகஜ நிலையை நீங்கள் வியாபாரம் செய்ய நாங்கள் ஏன் அனுமதிக்க வேண்டும்? ஸாரி, நோ ஃபோட்டோஸ்."

திடீரென்று டேப் ரிகார்டர் வெடித்துக் கொண்டு அலற ஆரம்பித்தது. ட்ரம்களும், கிடார்களும், பாங்கோஸ்களும் சூழ்நிலையில் அதிரடி அடிக்கின்றன. போதைப் புகையும், இந்த அசுர இசையும் கலந்தவுடன் அவர்கள் உலகமே தனியாகிப் போக, நாங்கள் காமிராவைச் சுருட்டிக் கொண்டு நன்றிகளை உதிர்த்து விட்டுக் கிளம்பினோம். வெகு தூரத்தில் சமுத்திரமும், ஆகாயமும் கைகுலுக்கும் இடத்தில் ஆரஞ்சு சூரியன் மூழ்கி முடித்திருந்தது. மழை இன்னும் வலுத்தது. கடல் அலைகளில் இன்னும் நிறையப் பெண்கள் மார்பில் துணியில்லாமல் அல்லது மிக மெல்லிய துணிகளுடன் குளித்துக் கொண்டிருந்தார்கள். ஐரோப்பாவிலிருந்தோ, கனடாவிலிருந்தோ, ஜப்பானிலிருந்தோ வந்தவர்கள் இல்லை. இவர்கள் கோவாவின் உள்ளூர் மீனவ குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள்.

இதோ இவர்கள் கூடத்தான் பார்ப்பவர்களைப் பற்றிக் கவலைப்படாமல், மழையை ரசித்துக் கொண்டு, கூச்சமில்லாமல் குளிக்கிறார்கள். ஆனாலும் இவர்கள் ஹிப்பிகள் இல்லை. விடிந்தால் சம்பாதிக்கப் போய் விடுவார்கள்.

நாங்கள் பார்த்த கோவா மட்டும் வித்தியாசமாய் இல்லை. சந்தித்த ஹிப்பிகள் கூட வித்தியாசமானவர்கள்தான்!



ஒரு காஷ்பாக்ஸ் காலியாகப் போகிறது!

ஓடி வந்தான் பிரபு.

பைப் இழுப்பதை நிறுத்திவிட்டு அவனைக் கூர்ந்தான் சதீஷ்.

மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கிக் கொண்டிருந்தான்.

''போலீஸ் துரத்துதா?''

''நோ, பாஸ்.''

''அப்புறம் ஏன் இப்படி அநாவசியமா புஸ்புஸ்னு மூச்சு விடறே....?''

''ஸம் ஸார்ட் ஆஃப் எக்ஸைட்மெண்ட்.... நீங்க சொன்ன வேலையைச் செஞ்சுட்ட சந்தோஷத்திலே ஓடி வந்தேன் பாஸ்!''

''வெரிகுட். டெல் மீ த டீடெய்ல்ஸ்.... அந்த கொட்டாம்பட்டி பாங்கிலே எவ்வளவு பேர் இருக்காங்க....?''

''அஞ்சு பேர் பாஸ்.... ஒரு பிராஞ்சு மானேஜர், ஒரு காஷியர், ஒரு அக்கவுண்டன்ட், ஒரு குமாஸ்தா, ஒரு பியூன்!''

''பாங்க் திறந்ததும் கொஞ்ச நேரத்திலே தேட்டை போட்டா எவ்வளவு தேறும்?''

''குறைஞ்சது ஒரு லட்சம்!''

''அவ்வளவு ட்ரான்ஸாக்ஷன் இருக்கு?''

''யெஸ் பாஸ்!''

''பாங்கிலே எந்த ஒரு சமயத்திலேயும் எவ்வளவு கூட்டம் இருக்கும்?''

''மிஞ்சி மிஞ்சிப் போனா ஸ்டாஃப் தவிர அஞ்சு பேருக்கு மேலே தேற மாட்டாங்க பாஸ்!''

எஸ். பாலகிருஷ்ணன்

''ஸோ, நாம பத்துப் பேரைச் சமாளிச்சாத்தான் நம்ம திட்டத்தை நிறைவேற்ற முடியும்?''

''யெஸ் பாஸ்.''

''எப்படி சமாளிக்கிறதுன்னு பார்த்திட்டு வந்தியா?''

''யெஸ் பாஸ்.... பாங்கைத் தினமும் சரியாப் பத்து மணிக்குத் திறக்கிறாங்க. பத்தே காலுக்கு பாங்க் பியூன் ஸ்டாஃப் எல்லாத்துக்கும் பாங்குக்கு ஒரு ஃபர்லாங் தூரத்திலே இருக்கிற ஆனந்த பவனிலே காப்பி வாங்கப் போறான். அந்த காபியிலே நாம எப்படியும் நம்ம மாத்திரைகளைக் கலந்துட்டா....

பத்து முப்பதஞ்சுக்கு காபி சாப்பிடற அத்தனை ஸ்டாஃபும் பத்து நாற்பதுக்கு அவங்கவங்க பாவ புண்ணியத்துக்கேத்தமாதிரி நரகத்துக்கோ அல்லது சொர்க்கத்துக்கோ பயணமாகிறதுக்காக மேஜையிலே சரிஞ்சிடுவாங்க. அவ்வளவுதான் ....பத்து நாற்பதுக்கு பாங்குக்குள்ளாற நீங்களும் நானும் முகமூடி, துப்பாக்கி சகிதமா நுழைஞ்சுட்டா, நான் துப்பாக்கி முனையிலே கஸ்டமர்களைக் கவனிச்சுக்கறேன்; நீங்க 'காஷ்' பாக்ஸைக் காலி பண்ணிடுங்க....!''

''பிளானெல்லாம் பிரமாதமாத்தான் இருக்கு.... அதுசரி, மாத்திரைகளை அந்தப் பியூன் வாங்கிட்டு வர்ற காபியிலே எப்படிக் கலக்கறது?''

''அதான் பாஸ் எனக்கும் ஒண்ணும் புரியமாட்டேங்குது!''

பைப்பைத் தொடர்ந்து இரண்டு முறை இழுத்து, கண்களை மூடி மூளையைக் கசக்கினான் சதீஷ்.

'யுரேகா!'

''பிரபு, அந்தப் பியூன் காபி வாங்கிட்டுத் திரும்பறப்ப மாத்திரைகளைக் கலக்க முயற்சி பண்றது ரிஸ்க். பேசாம ஒரு ஆயிரத்தைத் தள்ளி அந்த ஆனந்த பவனிலே ம அடிக்கிறவனை வளைச்சுப் போட்டியானா காரியம் ரொம்ப சுலபமா முடிஞ்சிடும். அந்தப் பியூன் கொஞ்ச தூரத்திலே வர்றப்பவே காபி கலக்கற அந்தப் பெரிய டம்ளரிலே மாத்திரைகளைப் போட்டு ரெடியா வச்சிருக்கணும். அந்தப் பியூன் பக்கத்திலே வந்ததும் காபியைக் கலந்து ஃப்ளாஸ்க்கிலே ஊத்திக் கொடுத்தனுப்ப வேண்டியதுதான். இது சாத்தியமானா, நிச்சயம் அந்த ம அடிக்கிறவன் மாட்டிக்க மாட்டான். ஏன்னா அன்னிக்கு ஹோட்டல்லே காபி சாப்பிடற யாரும் சாகப் போறதில்லே. அதனாலே அவன் மேலே யாருக்கும் சந்தேகம் வராது. செத்துக்கிடக்கிறவங்கள்லே அந்தப் பியூனும் ஒருத்தனா இருந்தாலும் அவன் மேலேதான் போலீசுக்கு சந்தேகம் வரும். எப்படி நம்ம திட்டம்?''

''ஃபண்டாஸ்டிக் பாஸ். ஆனா.....''

''என்னடா ஆனா?''

''ஒரு லட்சத்துக்காக அஞ்சு பேரைக் காவு வாங்கணுமா பாஸ்....?''

''வாங்கினா என்னடா? ஐயாயிரத்துக்கெல்லாம் ஒரு கொலை பண்ணியிருக்கோம், லட்சத்துக்கு அஞ்சு கொலை பண்ணக் கசக்குதா?''

''ஓகே பாஸ். நீங்க சொன்னாச் சரிதான்!''

''அப்ப இன்னிக்கு ராத்திரி....''

''அந்த ம அடிக்கிறவனை ஆயிரத்தைத் தள்ளி செட்-அப் பண்ணிடறேன்!''

''அப்படிப் பண்ணிட்டா நாளைக்குக் காலேலே பத்து நாற்பத்தஞ்சுக்கெல்லாம்...''

''அந்த பாங்க் காலி!''

''சரி, போய் அனிதாவை அழைச்சிட்டு வா. எனக்கு அவளோட விளையாடணும் போல இருக்கு!''

''யெஸ் பாஸ்.''

* * * * *

அன்றிரவு.

சாலையிலுள்ள மின்சாரக் கம்பத்திற்கு நீர் பாய்ச்சிவிட்டு ஆனந்த பவனில் காபி, ம கலக்கும் கணேஷ் எழுந்தபோது....

''மிஸ்டர் உன்னோட கொஞ்சம் பேசணும்!'' என்றான் அருகில் வந்த பிரபு.

''என்னோடயா.... யார் நீங்க?''

''நான் யாருங்கறது உனக்கு அநாவசியம். உனக்கு ஆயிரம் ரூபாய் வேணுமா?''

''ஆயிரம் ரூபாயா.... சார்.... என்ன சார் சொல்றீங்க? மூன்று வேளை சாப்பாடு போக மாதம் ஐம்பது ரூபாயை மட்டுமே பார்த்தறியும் அவன் விழிகளில் பிரகாசம் வழிந்தது.

''யெஸ்.... நான் சொல்றதைச் செய்யறேன்னு ஒத்துக்கிட்டா இப்பவே ஆயிரம் ரூபாய் தள்ளறேன்!'' நோட்டுக்களை அவன் முன் படபடத்தான் பிரபு.

''என்ன சார் ஏதாச்சும் கொலை செய்யணுமா?''

''செய்வியா?''

''இதுவரைக்கும் செஞ்சதில்லே. ஆனா ஆயிரத்தை ஒட்டுக்கப் பார்க்கிறப்போ செய்யச் சொல்வீங்களோன்னு தோணறது!''

''ஹஹ்ஹஹ்ஹா..... அதெல்லாம் நீ செய்ய வேண்டாம். இந்த மாத்திரைகளை நாளைக்குக் காலேலே....'' தன் திட்டத்தை முழுக்க விவரித்தான் பிரபு.

சார், நான் ஏதாச்சும் மாட்டிக்கிட்டா?''

''நிச்சயமா மாட்டிக்க மாட்டே. ஹோட்டலிலே காபி சாப்பிடற யாரும் செத்தாத்தான் உன் மேலே சந்தேகப்படுவாங்க. அப்படி இல்லாத பட்சத்லே அந்தப் பியூன் மேலேதான் சந்தேகப்படுவாங்க. அப்படியே போலீஸ் உன்னை விசாரிச்சா, 'எனக்கு ஒண்ணுமே தெரியாது'ன்னு சலியா நீ சாதிச்சுடலாம். ஏன்னா, பியூனும் செத்துடப் போறான். காபியிலே நீதான் மாத்திரை கலந்தேங்கிறதுக்கு சாட்சியே கிடையாது. எல்லாத்தையும் மீறி.... நீ மாட்டிக்கிட்டா, உன்னோட அம்மாவை நாங்க காப்பாத்தறோம். இது சத்தியம்....!''

''இந்தக் கதை நீங்களே சொந்தமா சிந்திச்சு எழுதினதுதான்னு இப்பதான் தெரிஞ்சுது!

''எப்படித் தெரிஞ்சுது?''

''கதை உங்களுக்கே திரும்பி வந்துடுச்சே!''

—சி. என். ராஜராஜன்



சப்ளையராக இருக்கிறார் ஒரு சுதந்திரப் போராட்ட வீரர்

கோவாவில் போர்த்துக்கீசியர்கள் 1510—ல் அடியெடுத்து வைத்தார்கள். வைத்த காலைப் பின் வைக்க மாட்டேன் என்று அடம்பிடிக்க ஆரம்பித்தார்கள்.

என்ன ஆயிற்று?

1787—ல் 'பின்டோக்கள் சதி' உருவானது. கோவாவின் பாதிரியார்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, சில ராணுவ அதிகாரிகளின் உதவியுடன் போர்த்துக்கீசியர்களை விரட்டுவதற்காகத் திட்டம் தீட்டினார்கள். அந்தத் திட்டம் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது போர்த்துகல் அரசாங்கத்தால்.

அப்போதிலிருந்து அங்கங்கே, சின்னச் சின்னப் புரட்சிகள். 1946—ல் இந்தப் போராட்டத்தில் எல்லாத் தரப்பு மக்களும் பங்கேற்று புரட்சி விதைகளைத் தூவத் தொடங்கினார்கள். 1961—ல் இந்தியப்படை டிசம்பர் மாதத்தின் பத்தொன்பதாம் நாளன்று உள்ளே நுழைந்து, சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குக் கைகொடுத்தது.

கோவா போர்த்துக்கீசியரின் பிடியில் இருந்து விடுபட்டது.

போராட்டத்தில் இறந்து போனவர்களின் நினைவாக ஒரு ஸ்தூபி ஆசாத் மைதானத்தில் எழுப்பப்பட்டது.

பனாஜியில் ஒரு பெயிண்ட் உதிர்ந்த போர்டில் 'Freedom Fighters Association' என்று போர்டு இருக்கிறது. இந்த அமைப்பு சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு பென்ஷன் வாங்கிக் கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. சுதந்திரப் போராட்ட வீரர் என்று சொல்லிக் கொள்பவர் ஒருவர் பாரில் சப்ளையராகப் பணிபுரிகிறார். சுதந்திரம் பெற்றது பற்றி சுரத்தேயில்லாமல் பேசுகிறார். பொதுவாக மக்கள் விலைவாசி ஏற்றத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். போர்த்துக்கீசிய அரசாங்கத்தில் விலைகள் கொள்ளை மலிவு. இரவு இரண்டு மணி நேரம்தான் விளக்கு எரிந்தது (ஜெனரேட்டர் மூலம்) என்றாலும், என்ன ஓர் அமைதியான வாழ்க்கை அது என்று சொல்லிச் சொல்லிப் பெருமூச்சு விடுகிறார்கள்.



* நினைவு ஸ்தூபி.

''சரிங்க....!''

புத்தம் புதிய பத்து நூறு ரூபாய் சலவைத் தாள்களை அவன் கையில் திணித்து தோளில் தட்டிக்கொடுத்த பிரபு, ''சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கட்டும்...!'' என்றான்.

''தைரியமாப் போய்ட்டு வாங்க!'' விடை கொடுத்தான் கணேஷ்.

* * * * *

மறுநாள்.

காலை மணி 10.00.

''பிரபு, சீக்கிரம் கிளம்பு. நாம திட்டமிட்டபடியே எல்லாம் நடக்குதான்னு பார்க்கணும்!''

''காரிலேயா, ஸ்கூட்டரிலேயா பாஸ்?''

''ஸ்கூட்டரே போதும்.''

பாங்கிற்குச் சற்றுத் தூரத்தில் ஸ்கூட்டர் ஃபுல்ஸ்டாப்பானபோது....

மணி 10.16.

கையில் ஃபிளாஸ்குடன் தெருவில் இறங்கி நடந்தான் பாங்க் பியூன்.

''குட். திட்டத்தோட முதல் ஸ்டெப் எதிர்பார்த்தபடி எதிர்பார்த்த நேரத்திலே நடக்குது. வா, ஹோட்டல்கிட்டே போய் நிற்கலாம்....!'' ஸ்கூட்டருக்கு மீண்டும் உயிரூட்டினான் சதீஷ்.

* * * * *

மணி 10.24

''வெரிகுட். எதிர்பார்த்தபடியே எல்லாம் நடக்குது. காபியை ஃப்ளாஸ்கிலே வாங்கிட்டு பியூன் திரும்பிப் போய்க்கிட்டிருக்கான்.... வா, பாங்க்கிட்டே போய் திட்டத்தை நிறைவேற்றத் தயாராகலாம்!''

ஸ்கூட்டர் 'பிக்—அப்'பான ஓரிரு நொடிகளில்....

எதிரே லாரி— அசுர வேகத்தில்.

ஸ்கூட்டரை சற்றே ஒதுக்கி ஓட்டியும்....

லாரி ஸ்கூட்டருக்கு 'இடி ராஜா'வாக...

சதீஷும், பிரபுவும் தூக்கியெறியப்பட...:

லாரி ஜெட்டாகிப் பறக்க....

ஒரு சில நொடிகளில்....

சதீஷ், பிரபுவைச் சுற்றி ஒரு சிறிய கூட்டம் முளைத்து....

''மடப்பய எவ்வளவு வேகத்திலே போறான்... இந்த லாரிக்காரப் பசங்க அத்தனை பேரையும் தூக்கிலே தொங்க விடணும்!''

''மூச்சிருக்கான்னு பாருங்கய்யா...!''

''நல்லவேளை மூச்சிருக்கு.... ஆனா ரெண்டு பேரும் மயக்கத்திலே இருக்காங்க!'' இருவரது நாசிக்குக் கீழும் புறங்கையை வைத்துச் சோதித்தவர் சொன்னார்.

''இந்த காபியைக் கொடுங்க. மயக்கம் தெளிஞ்சிடும்....!'' அப்போது அங்கு வந்த பாங்க் பியூன் ஃப்ளாஸ்கிலிருந்து காபியை வழங்க முற்பட்டான்....;

மௌனப் புயல்

வாஸந்தி

பூர்வ கதை

புதுதில்லியில் வாழ்கிற சராசரி தமிழ்க் குடும்பங்களுள் ஒன்று. ரஞ்சனி, சகோதரன் ரமேஷ், அப்பா, அம்மா.

ரஞ்சனிக்கு மன்மோஹன்சிங்கிடம் ஏற்பட்ட நட்பு காதலாக மலரும் சமயம். அப்பாவும் அம்மாவும் அவளுக்கு வரன் பார்க்கத் தொடங்கும் தருணம். சீக்கியத் தீவிரவாதிகளின் வன்முறைச் செயல்களை இனியும் அனுமதிக்கக் கூடாது என்று அமிர்தசரஸ் பொற்கோவிலில் இந்திய அரசு "ஆபரேஷன் ப்ளூஸ்டார்" என்ற ராணுவ நடவடிக்கை எடுத்தது. விளைவு? சீக்கியத் தீவிரவாதிகளை அதுவரை எதிர்த்த சீக்கியர் கூட மத உணர்வுகள் புண்படுத்தப்பட்டதால் கடுமையானார்கள். சீக்கியரிடம் அனுதாபம் கொண்டிருந்த ஹிந்துக்கள் கூட புனிதக் கோவிலுக்குள் பதுக்கப்பட்டிருந்த போர் ஆயுதங்களைப் பற்றி அறிய வந்து வெகுண்டனர். மொத்தத்தில் சீக்கியர் – ஹிந்து விரிசல் அகன்றது.

கல்லூரிப் படிப்பு தவிர, பத்திரிகை நிருபராகவும் பகுதி நேரப் பணியாற்றி வந்த ரஞ்சனி, பத்திரிகையாளர் குழு ஒன்றில் இடம் பெற்று பஞ்சாப் பொற்கோவிலுக்குச் சென்று அமிர்தசரஸில் பல நேர்முக அனுபவங்களைப் பெற்றுத் திரும்பினாள். இந்தச் சம்பவங்களெல்லாம் தனி மனிதர்களின் வாழ்க்கைகளையும் பாதிக்கவே செய்தன. ரஞ்சனி தன் காதலன் மன்மோஹன் சிங்கை இழந்து விடுவோமோ என்று அஞ்சினாள். அவள் சிநேகிதி ருமா ஒரு சீக்கியப் பெண். அர்ஜுன் சிங்குடன் தன் திருமணம் ஒத்திப் போடப்படும் எனக் கருதினாள்.

அறிவுபூர்வமாக யதார்த்த நோக்கில் நிகழ்ச்சிகளை அலசி, இருதரப்பு நியாயங்களையும் கருத்தில் கொண்ட ரஞ்சனி போன்றவர்கள் சொற்பம் பேர்களே. அவர்களுக்கே கூட அன்று காலை கிடைத்த செய்தி தாங்க முடியாததாக இருந்தது.

பிரதமர், சீக்கியரான தமது பாதுகாப்புப் படை வீரர்களாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்! அதுவரை குமுறிக் கொண்டிருந்த பல உள்ளங்கள் எரிமலையாக வெடிக்க, புதுதில்லி பற்றி எரியத் தொடங்கியது.

அந்த ரணகளத்தின் மத்தியில் சிக்கி உடலாலும் உள்ளத்தாலும் தவிப்புண்ட பலருள் ரஞ்சனி, மன்மோஹன் சிங், ருமா, அர்ஜுன் சிங், பத்திரிகையாளர்கள் ராதாகிஷன், சியாம் கிஷோர், மற்றும் உண்மையும் கற்பனையுமான இந்தக் கதை மாந்தர் பலர்...

17

சீப் எடிட்டர் ராதாகிஷன் எதிரில் நின்ற ஃபோட்டாகிராஃபர் சியாம் கிஷோரை யோசனையுடன் பார்த்தான்.

"நிஜம்மாகவா? கண்ணால் பார்த்தாயா?" என்றான்.

"என் கண் முன்னால் நடந்தது" என்றான் சியாம் கிஷோர் மெல்லிய குரலில்.

"ஆனாலும் என்னால் இன்னும் நம்ப முடியவில்லே" என்று தொடர்ந்தான் வருத்தத்துடன். "ரயில் வண்டி நின்ற ஒவ்வொரு இடத்திலும் வண்டிக்குள் நுழைந்து பெட்டிக்குள் இருந்த சர்தார்ஜிகளைப் பிடித்து வெளியில் இழுத்து....."

சியாம் கிஷோர் ராதாகிஷனை வெறித்த பார்வை பார்த்தான். வாக்கியத்தைப் பாதியில் நிறுத்தினான். இடைவெளியில் தன்னுடைய அதிர்ச்சியை விழுங்கிக் கொள்ளப் பார்க்கிறான் என்று தோன்றிற்று.

"அடித்து, தாடியை வெட்டி, டர்பனை உருட்டி எரித்து.....! சியாம் கிஷோரின் கண்களில் ஒரு பளபளப்புத் தெரிந்தது.

ராதாகிஷன் மேஜையின் மேல் யோசனையுடன் தாளம் போட்டான்.

"உன்னுடைய அம்மா வழியில் எல்லாரும் சீக்கியர்கள் இல்லே?" என்றான் மெல்லிய அனுதாபத்துடன்.

"ஓ காட். அதனாலேதான் எனக்குத் தாங்கலேன்னு நினைக்கிறியா?" என்றான் சியாம் ஆத்திரத்துடன்.

ராதாகிஷன் எழுந்தான். "நோ. யார்! ஸாரி. அது எதேச்சையான கேள்வி. நானும் ஆபீஸுக்கு வர வழியிலே வரிசையாக ஏழெட்டு ஸ்கூட்டர்கள் (ஆட்டோ ரிக்ஷா) எரிவதைப் பார்த்தேன். அப்பலேந்து எதுவும் செய்ய ஓடல்லே. உனக்காக காத்துக் கொண்டிருந்தேன். ஒரு ரவுண்டு போய் விவரம் சேகரிக்கலாம், வா!"

"ரைட்டோ! நான் ரெடி!"

ராதாகிஷன் ஹெல்மெட்டை எடுத்தபடியே "எக்ஸ்ட்ரா ஃபிலிம் ரோல் வைத்துக்கொள்" என்றான். "ஸென்ஸிடிவ் ஏரியாக்களைக் குறிச்சு வெச்சிருக்கான்கள் நம்ம பசங்கள். நம்ம பில்டிங் மொட்டை மாடியிலிருந்து பார்த்தால் நாலா பக்கமும் புகைத் தூண்களைப் பார்க்கலாம். எந்த இடம் எரிகிறது என்று சொல்லலாம்."

தன் கைப்பெட்டியை ஆராய்ந்தபடி சியாம் மெல்ல முணுமுணுத்தான். "அதைப் பார்த்துவிட்டுத்தான் நான் கீழே வந்தேன். ரைட்டோ கிளம்பு. ஃபிலிம் இருக்கு."

லிஃப்ட் நிற்காமல் மேலே சென்றது.

"எல்லாரும் வேடிக்கை பார்க்க மேலே

போகிறார்கள்!'' என்றான் ராதாகிஷண் அலுப்புடன்.

கீழே வரும் லிஃப்ட் அவர்களுக்காக நின்று வழிவிட்டது. தரைக்கு வந்து திறந்ததும் அவர்கள் மௌனமாக விரைந்து வெளியில் வந்து ஸ்கூட்டர் நிறுத்தியிருந்த இடத்திற்கு வந்தார்கள்.

''ஒரு விஷயம் சொல்லணும் ராதாகிஷண்! பிளாட்ஃபாரத்திலே நடக்கிற கலாட்டாவைப் பார்த்ததும் பெட்டிக்குள்ளே இருந்த எல்லா பயணிகளும் அதிர்ந்து போனார்கள். இதென்ன அக்கிரமம் என்று ஆத்திரப்பட்டார்கள். பெட்டிக்குள்ளே இருந்த சர்தார்ஜிகளை அவசரமாக மறைக்கப் பார்த்தார்கள். ''இங்கே சீக் இல்லை'' என்று பலத்த குரல் கொடுத்தார்கள். ஆனாலும் சீக்கியர்களை மறைப்பது கஷ்டம். கண்ணில் தென்பட்டவர்பன்களையெல்லாம் வெளியில் காத்திருந்த கும்பல் பிடித்திழுத்தது.''

ராதாகிஷண் பதில் ஏதும் சொல்லாமல் தீவிரச் சிந்தனையுடன் ஸ்கூட்டரைக் கிளப்பினான்.

''எது உண்மைச் செய்தி, எது வதந்தி என்று புரியவில்லை யார்!'' என்றபடி சியாம் கிஷோர் பிலியனில் அமர்ந்து கொண்டான்.

''எந்த வதந்தியையும் நம்பக்கூடிய மனநிலையில் தில்லி ஜனங்கள் இருக்கிறார்கள். பிரதமரின் மரணத்தைப் பற்றின உண்மையான அதிர்ச்சி ஒரு பக்கம். பஞ்சாபில் பயங்கரவாதிகள் ஹிந்துக்களைக் கொலை செய்த ஞாபகம் மறுபக்கம்.''

ஸ்கூட்டர் வேகம் பிடித்து சீரான ரஸ்தாவில் விரைந்தது. பிரதான சாலைகள் எல்லாம் கிட்டத்தட்ட காலியாக வெறிச்சென்றிருந்தன. தீன்மூர்த்தி சாலையில் மட்டும் வாகனங்கள் அனுமதிக்கப்படாமல் ஜனங்கள் சாரி சாரியாகப் பிரத்மரின் சடலத்தை தரிசிக்கச் செல்வது தெரிந்தது.

''நமக்கு இங்கே வேலையில்லை'' என்றபடி ராதாகிஷண் வண்டியைத் திருப்பினான்.

எதிர்த்தாற்போல் யு.என்.ஐ.யைச் சேர்ந்த நாராயணஸ்வாமி மோட்டார் சைக்கிளில் விரைந்து கொண்டிருந்தான்.

சியாம் கிஷோர் கையை அசைத்து, ''ஹாய்!'' என்றான். ''எந்தப் பக்கம் போறே?''

''திரிலோக்புரி! அங்கேதான் பயங்கர கலாட்டாவாம்.''

''அங்கேயே போவோம்!'' என்று ராதாகிஷண் அவனைத் தொடர்ந்தான்.

''மங்கன்புரி கல்யாண்புரியிலும் ரொம்பக் கலவரம் என்று கேள்விப்பட்டேன்'' என்றான் சியாம் கிஷோர்.

ராதாகிஷண் பதில் சொல்லவில்லை. தில்லியை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் வெளியேற்றி இங்கு குடியேற்றப்பட்ட ஏழைகள் வசிக்கும் காலனிகள் இவை. பசி என்பதைத்தவிர வேறு உணர்வு இவர்களுக்கு இருக்க முடியுமா என்று ராதாகிஷண் வியந்தான். பிரதமரைக் கொன்றவர்கள் ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் என்கிற காரணத்தால் மதவெறியும் கொலை வெறியும் தூண்டப்படும் அளவுக்கு சோகம் புரையேறிப் போயிருக்குமா என்று ஆச்சரியம் ஏற்பட்டது.

ப்ளாக் 32. த்ரிலோக்புரி. பெரிசாகத் தெரிந்தது பலகை. தொலைவில் தெரிந்தது ப்ளாக். புகைச் சுருள்கள் மேலே எழும்பிக் கொண்டிருப்பது தெரிந்தது. எதிர்த்தாற்போல் ஒரு போலீஸ் ரைடரில் ஒரு கான்ஸ்டபிள் வந்து கொண்டிருந்தார். சைகை காண்பித்து ராதாகிஷண் ரைடரை நிறுத்தினான்.

''நாங்கள் பேப்பர்காரர்கள். அங்கே ப்ளாக்கில் என்ன நடக்கிறது?'' என்றான். ''கலவரமா?''

''இப்பொழுது ஒன்றும் இல்லை ஸாப். கொயட்டாகிவிட்டது. இரண்டு பேர் இறந்து போனார்கள். அவ்வளவுதான்'' என்று கான்ஸ்டேபிள் சொன்னதும் ரைடர் நிற்காமல் கிளம்பிற்று.

''பொய்'' என்றான் சியாம் கிஷோர் மெல்லிய குரலில்.

நாராயணஸ்வாமி நிற்காமல் முன்னால் செல்ல ராதாகிஷண் தொடர்ந்தான். மூலை திரும்பியதும் திமரென்று அவர்களை நோக்கிக் கற்கள் விழ ஆரம்பித்தன. மேலே அவர்கள் செல்ல முடியாமல் ஒரு கும்பல் வழி மறைத்தது.

''இந்த ப்ளாக்குக்குள்ளே யாரும் நுழைய முடியாது!'' என்றான் ஒருத்தன்.

''ஏன்?''

''கேள்வி கேட்காமல் பேசாமல் திரும்பிப் போங்கள், உயிர்மேல் ஆசை இருந்தால்...''



அவர்கள் பார்வையில் தெரிந்த வெறி அடி வயிற்றைக் கலக்கிற்று. ப்ளாக் 32 சற்று எட்டி அநாதையாக நின்றது. உள்ளேயிருந்து ஓலங்கள் கேட்கிறாற்போல் ராதாகிஷணுக்கு நிச்சயமாகப்பட்டது.

ஒரே ஒரு விநாடி அவன் யோசனையுடன் தயங்கினான். இவர்களைச் சட்டை செய்யாமல் முன்னேறினால் உயிரோடு ப்ளாக்கை அடைவோம் என்பது நிச்சயமில்லை. மறு

படி கற்கள் விழ ஆரம்பித்தன. நாராயணஸ்வாமி மறு பேச்சில்லாமல் வண்டியைக் கிளப்பினான். சுளீரென்று ஒரு கல் முழங்காலைப்பதம்பார்த்தது-ராதாகிஷண்நிமிர்ந்து பார்த்தான். சுற்றிலும் இளவட்டங்கள் தாக்கத் தயாராய். சுருண்டெழுந்த ஆத்திரத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவன் வண்டியைத் திருப்பினான்.

. சற்று தூரம் சென்றதும் நாராயணஸ்வாமியை நோக்கிச் சொன்னான்.

''போலீஸுக்கு கம்ப்ளெயிண்ட் செய்யணும் நாராயணஸ்வாமி! என்ன அக்கிரமம் பார்த்தியா? கேள்வி முறையில்லாமல்!''

நாராயணஸ்வாமி சிரித்தான். ''ஒரு கான்ஸ்டேபிளைப் பார்த்தியே? இங்கே கலவரம் ஏதும் இல்லேன்னு ஐந்து நிமிஷத்துக்கு முந்திச் சொல்லலே?''

''அவன் யாரோ பொறுப்பில்லாதவன்! எல்லாரும் அப்படியிருக்கமாட்டார்கள்!''

நாராயணஸ்வாமி தோளைக் குலுக்கினான். ''வழியில் கல்யாண்புரி போலீஸ் ஸ்டேஷன் இருக்கு. ட்ரை யுவர் லக்! நான் கால்காஜி போகணும்!''

''சரி. போய்ப்பார்க்கறேன்.''

''போலீஸ் படை ஸ்தம்பித்து நிற்கிறது ராதாகிஷண்! இட் இஸ் கம்ப்ளீட்லி டீ மாரலைஸ்ட். அவங்க தொழில்காரங்கதான் பிரதமரின் கொலைக்குக் காரணம் என்கிறதனாலே



இருக்கலாம். பொறுப்பெடுத்துக் கொண்டு செயல்பட எந்த ஆபீஸரும் தயாரா இல்லே!''

நாராயணஸ்வாமி பிரிந்து சென்றதும் அவர்கள் கல்யாண்புரி போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்தார்கள்.

அங்கிருந்த ஸப் இன்ஸ்பெக்டரிடம் ராதாகிஷண் படபடப்புடன் சொன்னான். ''நீங்கள் உடனடியாக திரிலோக்புரிக்கு ஆட்களை அனுப்பணும். ரொம்ப அவசரம். அங்கு ஏதோ பெரிய கலவரம் நடக்கிறது. குண்டர்கள் எங்களை உள்ளே போகவிடாமல் தடுத்தார்கள்.''

''திரிலோக்புரியிலா?'' என்றார் ஸப் இன்ஸ்பெக்டர் சாவதானமாக.

''அங்கு பெரிய கலாட்டா எதுவும் இல்லே. இப்பொழுதுதான் ரைடர் ரிப்போர்ட் வந்திருக்கிறது!''

''அந்த ரிப்போர்ட் தவறு ஸார். நாங்கள் கண்ணால் பார்த்துவிட்டு வந்து சொல்கிறோம்!''

''போலீஸ் பொய் சொல்கிறது என்கிறீர்களா? பத்திரிகைக்காரர்கள் என்பதால் நீங்கள்தான் ஒன்றைப் பத்தாக்குகிறீர்கள்!''

''நீங்கள் ஏதாவது செய்யப் போகிறீர்களா? இல்லே போலீஸ் ஹெட் குவார்ட்டரில் போய் சொல்லட்டுமா?''

''ஆகா, தாராளமாகச் சொல்லுங்கள்.'' ஸப் இன்ஸ்பெக்டரின் முகம் கோபத்தில் பளபளத்தது.

''என்னிடம் ரைடர் ரிப்போர்ட் இருக்கிறது. அதன்படிதான் நான் செயல்பட முடியும். என்னிடம் ஆட்களும் இல்லே அனுப்ப. சிக்கிய போலீஸ்காரர்களை ட்யூட்டிக்கு வரவிடவில்லே. மிகுதி இருப்பவர்களில் சவ ஊர்வலத்துக்கு வரும் வி. ஐ. பி.க்களுக்காகவும், தீன் மூர்த்தி ஹவுஸுக்காகவும் ட்யூட்டி போட்டுவிட்டார்கள். யாரோ இரண்டு பைத்தியங்கள் சண்டைப் பிடித்துக் கொள்வதற்கெல்லாம் எங்களால் வந்து நிற்க முடியாது. இங்கு ஆட்கள் இல்லே.''

''இது சாதாரணச் சண்டை இல்லே இன்ஸ்பெக்டர். வெறும் லூட்டியும், கொள்ளையும் கூட இல்லே. பெரிய அழிச்சாட்டியம் நடக்கிறது! கும்பல் கும்பலாக ஜனங்கள் கொளுத்தப்படுகிறார்கள்!''

''நீங்கள் பத்திரிகைக்காரர்கள். இப்படித்தான் மிகைப்படுத்திப் பேசுவீர்கள். என்னால் உங்களுக்கு உதவ முடியாது. என்னிடம் ஆட்கள் இல்லே. ஸாரி!''

வெளியில் வந்து தனது ஆத்திரத்தையெல்லாம் ஸ்கூட்டரின் மேல் ராதாகிஷண் அழுத்தியபோது சியாம் கிஷோர் மெதுவாகச் சொன்னான்.

''ஆட்கள் இல்லே என்று அவர் சொன்னது உண்மையாக இருக்கலாம்!''

''அவன் ஒரு உணர்ச்சிகள் செத்தவன்!''

''நீயும் நானும் கூட அவன் நிலையில் அப்படித்தான் இருப்போம் ராதாகிஷண்!''

ராதாகிஷண் பதில் பேசவில்லே. சொல்லத் தெரியாத ஆத்திரமும் கோபமும் கையாலாகாத்தனமும் பொங்கி பொங்கி எழுந்தன.

''எங்கே போகிறோம்?'' என்றான் சியாம் கிஷோர்.

FIRST BLOOD



வியட்நாம் போர் வீரன் ஊர் திரும்புகிறான். அமைதியான நடையில் நண்பனைத் தேடிப் போகிறான். அவன் இறந்து போனது அறிந்து துக்கப்படுகிறான். போர் அவன் உடம்பிலும் உள்ளத்திலும் பல ரணங்களைத் தழும்பாக்கியிருக்க, விரக்தியோடு உலாவிக் கொண்டிருக்கும் அவனை அந்த ஊர் ஷெரீஃப் ஓர் உப்பில்லாத காரணம் சொல்லிக் கம்பிகளுக்குப் பின் வைக்கிறார். "என் இனிய ஊரில் உன்னைப் போன்ற நாடோடிகள் தேவையில்லை."

அவனுடைய அழுத்தி வைத்த உணர்வுகளில் தீப்பற்றிக் கொள்ள, தனி மனிதனாய் போலீஸையும், ராணுவத்தையும் அழ வைத்து அதிரடிப்பதே மெயின் கதை. போலீஸ் பாதுகாப்பிலிருந்து ராம்போ திமிறிக் கொண்டு தப்பிக்கும் காட்சி இன்னும் மனசில் படபடவென்கிறது. அத்தனை மூவ்மெண்ட்களும் நம்பும்படியாய் இருக்கின்றன என்பது விசேஷம். மோட்டார் சைக்கிள் சேஸ் நல்ல விறுவிறுப்பு. படம் ஆரம்பித்ததிலிருந்து முடியும் வரை காட்சிக்குக் காட்சி ஃப்ரேமுக்கு ஃப்ரேம் ரத்தம். ஒரே ஒரு கூர்க் கத்தியை ஆயுதமாய் எடுத்துக் கொண்டு ராம்போ செய்யும் அட்டகாசங்கள், நம்மூர் ஸ்டண்ட் மாஸ்டர்கள் பார்க்க வேண்டிய விருந்து.

ஃபோட்டோகிராபி அரையிருள்களில் அகல கண்களோடு விழித்திருக்கிறது. படத்தைப் பார்த்துவிட்டு வெளியே வரும்போது கையில் மாட்டும் முதல் ஆசாமியை ஒரு குத்து குத்த வேண்டும் போலிருக்கிறது என்றால் அதன் நியாயமான காரணம், ராம்போவாய்ப் பிரகாசிக்கும் ஸில்வஸ்டர் ஸ்டாலோன் (Sylvester Stallone) தான்.

— ஜெயமன்மதன்

"போலீஸ் ஹெட் குவார்ட்டர்ஸுக்கு! நான் இன்று விடப்போவதில்லை!"

கட்டிடத்தை அடைந்து லிஃப்டில் ஏறி போலீஸ் கமிஷ்னரின் அறையை அடைந்ததும் அங்கு ஒருத்தர் உட்கார்ந்திருந்தார்.

"போலீஸ் கமிஷ்னர் இல்லை. வெளியில் போயிருக்கிறார். நான் அடிஷனல் கமிஷ்னர்." என்றார்.

"பரவாயில்லை" என்றான் ராதாகிஷன். "இது எமர்ஜன்ஸி விஷயம்" என்று விஷயத்தைச் சொன்னான்.

அடிஷனல் கமிஷ்னருக்கு எந்த அதிர்ச்சியும் ஏற்படவில்லை.

"நான் கண்ட்ரோல் ரூமுக்குத் தெரிவிக்கிறேன்" என்று ஒரு எண்ணைச் சுழற்றி அவன் சொன்ன செய்தியை ஒப்பித்துவிட்டு போனை வைத்தார்.

"உடனே ஆட்களை அனுப்பச் சொல்லுங்கள் சார்!" என்றான் சியாம் திகைப்புடன்.

"ஆ. அவர்கள் பார்த்துக் கொள்வார்கள், நான் தெரிவித்தாகிவிட்டது! இதைக் கூட நான் செய்ய வேண்டிய அவசியமில்லை. நான் உண்மையில் லீவில் இருக்கிறேன். இன்றைக்கு எதேச்சையாகக் கமிஷ்னரைப் பார்க்க வந்தேன்!"

மெல்லிய அதிர்ச்சியுடன் ராதாகிஷன் அவரைப் பார்த்தான்.

"நான் சொந்த விஷயமாக உங்களிடம் வரவில்லை சார்!"

"ஆ. தெரிகிறது! எங்களுக்கு இந்தக் கலவரங்கள் எல்லாம் புதுசில்லை. நாலைந்து பேர் அடித்துக் கொண்டு செத்தால் நம்ம ஜனத்தொகையிலே பெரிய மாற்றமா ஏற்படப் போகிறது? நீங்கள் போங்கள், போலீஸ் கவனித்துக் கொள்ளும்!"

அவர்கள் வெளியில் வந்ததும் ராதாகிஷன் ஆத்திரத்துடன் அடிக்குரலில் சொன்னான்.

"காட் ஸேவ் திஸ் கன்ட்ரி!"

"அவர் இப்ப எங்கோ தலை மறைவாயிருக்கார்னு நினைக்கிறேன்!"

ராதாகிஷன் சிரிக்கவில்லை. தணியாத கோபத்துடன் ஸ்கூட்டரைக் கிளப்பினான்.

"மறுபடி திரிலோக்புரிக்கு ஒரு ரவுண்ட் அடிக்கலாம்!"

ஸ்பாட் லைட்



திருவாரூர் திருக்குவளையில், கூட்டங்களுக்கு யாராவது கடிதம் போடுகிறார்களா என்று தபால்காரனை எதிர்நோக்கி இருந்த கருணாநிதியைத் தேடி அழைத்தது புரட்சித் தலைவர்தான்! இந்த வரலாற்றைத் தெரிந்தவன் என்பதால்தான் அவருக்கு என் மீது கோபம். பளிங்கு மாளிகையில் உட்கார்ந்திருப்பவருக்குப் பழைய கதையைச் சொன்னால் ஆத்திரம் வருகிறது. என்ன செய்ய?

— ஆர். எம். வீரப்பன்.

பாண்டிச்சேரியிலே அன்றைக்கு அடிபட்டு விழ்ந்து செத்துவிட்டான் என்று சாக்கடையில் தூக்கிப் போட்டுவிட்டுப் போய்விட், என்னை எடுத்து மடியிலே போட்டு, 'யார் பெற்ற பிள்ளைகளோ இப்படி என்றால் அடி வாங்குகின்றனவே!' என்று கண்ணீர் உகுத்துக் குடியரசு அலுவலகத்திற்கு என்னை அழைத்துச் சென்று துணை ஆசிரியராக என்னைப் பணியிலே அமர்த்தி நாற்பதுரூபாய் மாதச் சம்பளம் கொடுத்து, என்னைத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தியவர் எனது ஆசான் தந்தை பெரியார் அல்லவா! என்னை எழுத்தாளன் என்று அறிமுகப்டுத்தியது ஆருயிர் அண்ணன் அல்லவா? .

— கலைஞர் மு. கருணாநிதி.

ஒன்பது பேரைக் கொன்றவனும் (ஜெயபிரகாஷ்) திரைப்படத்தைச் சாட்சியாகச் சொன்னான். இப்போது ஒரு பெண்ணையும், அவளது பச்சிளங் குழந்தையையும் கொன்ற பாதகனும் '24 மணி நேரம்' சினிமா பார்த்துவிட்டுக் கொலை செய்ததாகக் கூறுகிறான். இதற்கு நாம் (சினிமாக்காரர்கள்) பதில் சொல்ல வேண்டுமா, இல்லையா?

— ஆர். எம். வீரப்பன்.

புரட்சித் தலைவருக்கு ராஜீவ் நண்பர். அதற்காக ராஜீவிடம் எனக்கு மரியாதை—மதிப்பு உண்டு. ஆனால், காதலிக்காகக் காதலி வீட்டு நாய் கடித்தால் அது இனிக்காது!

— அமைச்சர் காளிமுத்து.

இட்லி இளைத்துப் போய்விட்டது. தோசை மீது ஆசை ஏற்படுவது இல்லை. வடை விடை கொடுக்கிறது. எனவே ஹோட்டல் பண்டங்களின் எடை நிர்ணயம் செய்யப்படுமா?

— இரா. ஜனார்த்தனம் எம். எல். சி.

எப்பொழுதும் ட்ராஃபிக் ஜாமில் ஸ்தம்பித்து நிற்கும் திலக் ப்ரிஜ் சாலைகள் வெறிச்சோடிக் கிடந்தன. வெகு வேகமாக ஸ்கூட்டர் பறந்தது. கல்யாண்புரி கடைத் தெருக்கள் ஜுக்கிகள் கொள்ளையடிக்கப்பட்ட இடங்கள் போல் தெரிந்தன. சாலைகளின் ஓரத்தில் எரிந்து போன ஆட்டோ ரிக்ஷாக்கள்.

திரிலோக்புரி, ப்ளாக் 32, மத்தியானம் வழி மறித்தவர்களை இப்பொழுது காணோம். வேகமாக முன்னேறிச் சென்று ஒரு குலுக்கலுடன் ராதாகிஷண் வண்டியை நிறுத்தினான். பல பெண்கள் பெரிய குரலில் ஓலமிட்டுக் கொண்டிருந்தார்கள். சில சடலங்கள் வெட்ட வெளியில் எரிந்து கொண்டிருந்தன. சில ஹிந்து ஆண்கள் பலத்த காயத்துடன் தென்பட்டார்கள்.

"உங்களுக்குள் ஏற்பட்ட சண்டையா இது?" என்றான் ராதாகிஷண் கோபத்துடன்.

"இல்லை ஸாப்! யாரோ போக்கிரிகள்! கொள்ளைக்காரர்களின் வேலை இது! தடுக்கப்போன எங்களையும் அடித்துப் போட்டுப் போய்விட்டார்கள். வீட்டில் இருந்த சாமானையெல்லாம் தூக்கி கொண்டு போய்விட்டார்கள்!"

"என் பெண்ணின் கல்யாணத்துக்கு வாங்கி வைத்திருந்த சாமான்களையெல்லாம் தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள்!"

கண்ட காட்சியைத் தாங்க முடியாத வனாய் சியாம் கிஷோர் தெரு ஓரமாய் நின்று வாந்தி எடுத்துக் கொண்டிருந்தான்.

"காட் ஸேவ் திஸ் கன்ட்ரி!" என்று ராதாகிஷண் மறுபடி முணுமுணுத்துக் கொண்டான்.

(தொடரும்)

உலகிற்குக் காட்டுங்கள், உண்மையான வெண்மை என்ன என்பதை



உன்னதம்...உன்னதம்... வெண்மையிலே அனைத்திலும் உன்னதம்!

உங்களுக்கு காட்டவும் டெட்டில் உண்டு ஏராளம். இதன் புதிய உறை—கண்ணைக் கவரும். திறந்து பாருங்கள் ஆச்சரியமளிக்கும் இதன் புத்தம்புது மணம். இக்கட்டியில் அடங்கியுள்ளது அதிக வெண்மைக்கான சக்தி.

நீங்கள் பாருங்கள்... காட்டுங்கள் உலகிற்கு
டெட் தரும் வெண்மையை... உண்மையான வெண்மையை.

Shilpi DM 9A/84 Tam.

• டி. ஆர். சந்திரசேகரன், சென்னை—44.

? இந்தியாவில் சில்லறைத் தட்டுப்பாடு எப்போது தீரும்?

! கவலையே படாதீர்கள். இன்னும் கொஞ்ச நாளில் தானாகவே தீர்ந்துவிடும். ஆம்; விலைவாசி எக்கச்சக்கமாக ஏறிவிட்டால் சில்லறைகளுக்கு மதிப்பே இருக்காது. பிறகு அது பற்றிக் கவலைப்படுவானேன்?

• சி. தெ. இளமுருகன், சென்னை—39 •

? சட்டமன்ற உறுப்பினர்கள் தவறான வார்த்தைகளைப் பேசும்போது அவற்றைச் சபைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுகிறார்கள். தவறான செயல் புரியும் உறுப்பினர்களை எதிலிருந்து நீக்குவது?

! நியாயமான கேள்வி. உறுப்பினர்களின் தவறான பேச்சுக்களை சபைக் குறிப்பிலிருந்து நீக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு இருப்பதுபோல் தவறு செய்யும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு மீண்டும் அவர்களைப் பதவியிலிருந்து விலக்கும் அதிகாரம் இருக்க வேண்டும். அதுதான் நியாயமான ஜனநாயகமாக இருக்க முடியும். இதனை **Right of Recall** என்பர்.

• ஜா. பாலச்சந்திரன், நீடாமங்கலம்.

? வரப்போகும் பஞ்சாயத்துத் தேர்தலில் ஸாரி, தி. மு. க. வெற்றி பெறுமா?

! நீங்கள் ஸாரி என்று எழுதியிருப்பது எதற்காக? பஞ்சாயத்துத் தேர்தல் வருமா, வராதா என்ற சந்தேகத்தாலா அல்லது தி. மு. க. வெற்றி பெறுமா, பெறாதா என்ற சந்தேகத்தாலா? இது தெளிவாகத் தெரியாத வரையில் எப்படிப் பதில் சொல்லமுடியும்? ஸாரி!

• த. சத்திய நாராயணன், அயன்புரம்.

? மௌலி, விசு இருவரும் திரையுலகில் பிரகாசிக்காததன் காரணம் என்ன?

! விசுவின் ஒன்றிரண்டு படங்களை விலக்கி விட்டுப் பார்த்தால் நாடகத்தனம் என்பதைத் தவிர வேறில்லை.

• க. தியாகராசன், நெய்வேலி.

? மாணவர்களை மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக் கொள்வதற்கு இரண்டரை லட்ச ரூபாய் வாங்குவது எதற்காக என்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பகிரங்கமாக அறிவிப்புச் செய்திருக்கிறதே?

! இந்தப் பச்சை வியாபாரத்தை உடனடியாகத் தடை செய்ய வேண்டும். கல்லூரியில் சேருவதற்கே இரண்டரை லட்ச ரூபாய் முதலீடு செய்யும் அந்த மாணவர்கள் படித்து டாக்டரான பிறகு பணத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளும் மனப்பான்மை பெற்று நோயாளிகளை எப்படியெல்லாம் ஈவு இரக்கமில்லாமல் கசக்கிப்பிழிவார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

• பா. க. மணிவண்ணன், திருப்பூர்

?. இப்போது புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வாரியத் தலைவர்களுள் உங்களுக்குப் பிடித்தவர் யார்?

! எனக்கும் உங்களுக்கும் பிடித்தால் என்ன? பிடிக்காவிட்டால் என்ன? எம். ஜி. ஆருக்குப் பிடித்தால் போதாதா!

• நெல்லை கவாஜி, சென்னை—33.

? துன்பம் வரும் வேளையிலே சிரிக்க முடியுமா?

! 'இடுக்கண் வருங்கால் நகுக' என்றார் வள்ளுவர். அது லட்சிய நோக்கு. அதற்கு பதில் சொல்வதுபோல், 'பாம்பு வந்து கடிக்கையில் பாழும் உடல் துடிக்கையில் யார் முகத்தில் பொங்கி வரும் சிரிப்பு?' என்று பாடியிருக்கிறார் கவியரசு கண்ணதாசன். பின்னதுதான் யதார்த்தம்.

• ப. மூர்த்தி, பெங்களூர்—21.

? ஒருவனுக்கு எந்த அளவுக்கு மூட நம்பிக்கைகள் இருக்கலாம்?

! மூட நம்பிக்கைகளே இல்லாமலிருப்பது தான் நல்லது. இருந்தாலும் அடுத்தவர்களின் உணர்வுகளையும், உரிமைகளையும் பாதிக்காத அளவுக்கு இருக்கும் மூட நம்பிக்கைகளை மன்னித்து விடலாம், தவறில்லை!

• எஸ். எஸ். வாசன், தென் எலப்பாக்கம்.

? சினிமா தொழிலை அரசுடைமை ஆக்கினால் ஏதாவது முன்னேற்றம் ஏற்பட வாய்ப்புண்டா?

! இன்னும் ஒரு வாரியத் தலைவர் வருவார். அப்புறம் கதாநாயகிகள் அனைவரும் ஆளுங்கட்சி அரசியல்வாதிகளால் தான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இன்னும் எத்தனையெத்தனையோ...,.. இவை தவிர படங்களின் தரத்தில் என்ன பிரமாத முன்னேற்றம் ஏற்பட்டுவிடப் போகிறது?

• எம். ஜி. ஆர்.



அமைச்சர்கள்

எம்.ஜி.ஆரைப் புகழ்வது ஏன்?



* மௌலி



* விசு



* சோலங்கி



* சௌத்ரி

* பாமா நாராயணன், சென்னை—20.

? ஊதாரித்தனம் எப்போது சிக்கனமாகிறது?

! காதலி மனைவியாகும்போது.

* ஆர். எஸ். இராஜ், சீர்காழி.

? எம்.ஜி. ஆரை ஒரேயடியாக எல்லா அமைச்சர்களும் புகழ்கிறார்களே, ஏன்?

! அப்படிப் புகழாவிட்டால் அவர்கள் ஒரு விநாடி கூட பதவியில் நீடிக்க முடியாதே!

* எஸ். பி. இராஜேந்திரன், முகிலன்விளை.

? இந்தியாவில் மீண்டும் ஒருபெண் பிரதமராக வர முடியுமா?

! சந்தேகமென்ன? இந்திய மக்கள் இளிச்சவாயர்களாக இருந்தால் பிரியங்கா வருவார்.

* வி. ரவிகுமார், வால்குடி.

? 'இந்திய விமானத்தின் மீது ரஷிய ராக்கெட்தான் விழுந்தது' என்று 'டெய்லி மெயில்' செய்தி வெளியிட்டுள்ளதே?

! ரஷிய ராக்கெட் விழுந்ததோ இல்லையோ விண்வெளியில் ஏராளமான செயற்கைக் கோள்களையும், ராக்கெட்டுகளையும் மிதக்க விட்டுக் கொண்டிருந்தால், அங்கும் இனி நடக்கும் விபத்துக்கள் சாலை விபத்துக்களை விட மலிவாகிவிடும்! அதற்கு என்ன செய்யப் போகின்றன உலக நாடுகள்? அதுதான் கேள்விக் குறியாக இருக்கிறது.



* கண்ணதாசன்



* அரங்கநாயகம்

நீங்கள் கேட்டவை—தராசு

* இரா. ஜெய்சங்கர், செம்பனார்கோவில்.

? காங்கிரஸ் ஆட்சியில்தான் கள்ளச் சாராயம்பெருகியதுஎன்றுஅமைச்சர்அரங்கநாயகம் குற்றம் சாட்டியுள்ளாரே?

! இவர்களுடைய ஆட்சியில் இரண்டு சாராயமும்சேர்ந்தேபெருகியுள்ளதேஅதற்கு என்ன சொல்லப்போகிறார் அரங்கநாயகம்?

என். உலகநாதன், வால்குடி.

? இட ஒதுக்கீடு உயர்வு அமல், நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது காரணமாக குஜராத் கிளர்ச்சி வாபஸ் ஆனது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! கிளர்ச்சி வாபஸ் ஆனதாகத் தெரியவில்லை. இப்போதும்துப்பாக்கிச் சூடு நடந்து சாவுகளின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டேதான் இருக்கிறது. முன்பு சோலங்கி முறை, இப்போது சௌத்ரி முறை. இன்னும் சொல்லப் போனால் ஆள் மாறியிருக்கிறாரே தவிர ஆயுதங்கள் மாறவில்லை. மாறுவதற்கும் கிளர்ச்சிக்காரர்கள் விடுவதாய் இல்லை. ஆக அதுவும் ஒரு தொடர் கதைதான்!

---

* ரூ 10 பரிசு பெறுபவர்:

சி. தெ. இளமுருகன்,
3, டி. மையநிழற்சாலை,
மகாகவி பாரதி நகர்,
சென்னை—39.



தமிழ்ச்சங்கத்தில் நடந்த நிகழ்ச்சி.

கோவா தமிழர்களின் குறை!

கோவாவில் தமிழர்களா? எங்கிருக்கிறார்கள்? நாங்கள் கோவா போனபோது ஒரு தமிழரைக் கூடப் பார்க்கவில்லையே என்று நினைக்கிறீர்கள் அல்லவா? இன்று கோவாவில் கணக்கெடுத்தால் 600—க்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் வாழ்கின்றன. சில ஆண்டுகளுக்கு முன் கோவாவில் வாழும் தமிழர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். ஆனால் இன்றோ, தமிழர்களுக்கென்று ஒரு சங்கமே இருக்கிறது. அது உருவானதே ஒரு கதை.

சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன் கோவாவுக்கு வந்து சேர்ந்த தமிழர்கள் மூலைக்கொருவராக அறிமுகமின்றிச் சிதறிக் கிடந்த நேரத்தில் ஒரு சங்கம் உருவாக்கி அடிக்கடி சந்தித்துக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதின் சுகத்தை அறிந்து, தமிழ்ச் சங்கத்திற்கு அஸ்திவாரம் இடப்பட்டது. இது நடந்தது 1968—ஆம் ஆண்டு. இப்போது இச்சங்கத்தில் 400—க்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் அங்கம் வகிக்கிறார்கள்.

கோவாவில் வாழும் தமிழர்களை ஒருங்கிணைத்து, தமிழர் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் வளர்த்து, இரு மாநிலங்களின் இடையே ஓர் இணைப்புப் பாலமாக விளங்குவதுதான் சங்கத்தின் நோக்கம்.

சுதந்திர தின விழா, பாரதி விழா, காந்தி ஜெயந்தி, பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு, தமிழ் திரைப்பட நிகழ்ச்சி என்று விழாக்களுக்கும் குறைவில்லை.

ஒரு நாடகக் குழு உருவாக்கி, மோகன், சீனிவாசன் போன்ற இயக்குனர்களையும், நிர்மல் குமார், சந்தானம் போன்ற கதாசிரியர்களையும், இன்னும் எண்ணற்ற நாடக நடிக, நடிகையர்களையும் உருவாக்கி, ஊக்கமளித்திருக்கிறது இச்சங்கம். அகில இந்திய மாதர் சங்க விழாவில் மைதிலி சங்கரன், ராதா சங்கரன், லதா.சாரி, லதா ஷண்முகம் ஆகியோரும், திருமதி. பிச்சுமணி, இராதா கிருஷ்ணன் இருவரும் பாடல் மெட்டமைத்து வழங்கிய தமிழ் கிராமிய நடனம் அமோக வரவேற்பைப் பெற்றது.

உலகமெலாம் பாரதியைக் கொண்டாடும் போது, இவர்கள் மட்டும் சும்மா இருப்பார்களா என்ன? கோவா மாநில அரசும், தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்திய பாரதி நூற்றாண்டு விழாவில் நெ. து. சுந்தரவடிவேலுவின் பேருரையும், திருச்சூர் ராமசந்

திரனின் கர்நாடக இசையும், திருமதி லட்சுமி விஸ்வநாதனின் பரத நாட்டியமும், செவிக்கும், கண்ணுக்கும் விருந்தாக அமைந்தன.

இப்போது சங்கம் தொடங்கி பன்னிரண்டு ஆண்டுகள் முடிந்ததன் அடையாளமாக 'குறிஞ்சிமலர்' பத்திரிகை தொடங்கப்பட்டிருக்கிறது. பல எழுத்தாளர்களை அறிமுகப்படுத்திய இந்த இதழ் எட்டுப் பக்கத்தில் ஆரம்பித்து தற்போது இருபது பக்க அளவில் வளர்ச்சி பெற்று, வருகிறது. திரு. அகிலன் அவர்களே இதில் கதை எழுதி இருக்கிறார் என்றால் இதன் சிறப்பைப் பார்த்துக் கொள்ளுங்களேன்!

அது சரி! நம் ஆன்மீக வாழ்வுக்கு கோவாவில் என்ன வழி? கோயில், ஆடல், பாடல், பஜனை ஆகியவை உண்டா? பஞ்ஜியிலிருந்து 32 கி.மீ. தொலைவில் மடுகாம். அதன் அருகில் ராவண் போண்ட் (Rowan Fond) என்ற இடத்தில் இருக்கும் கணபதி—முருகன் கோயிலைக் கட்டியவர் ஒரு தமிழரே என்றால் வியப்பாய் இல்லையா? அம்மா என்று எல்லோராலும் அழைக்கப்படும் அன்னபூரணி அய்யர் வேறு யாருமல்ல! தமிழ் எழுத்தாளர் 'சுந்தா' அவர்களின் சகோதரிதான். கோவானியர்களும் மிகுதியாக இங்கு வந்து வழிபடுகின்றனர்.

அதுதவிர வாஸ்கோ அருகில் இருக்கும் மங்கோர் ஹில்ஸில் ஸ்வாமி ஐயப்பன் கோயில் உருவாகி பக்தர்களை ஈர்த்து வருகிறது. போண்டா (Ponda) அருகில், இயற்கை வனப்பு மிக்க மலை மீது — நம் ஏழுமலையானுக்கு, திருமலை — திருப்பதி தேவஸ்தானம் ஓர் எழில்மிகு ஆலயம் அமைக்க அடிக்கல் நாட்டி, பணியினைத் தொடங்கியுள்ளது.

சிறிய அளவில் சங்கரன், மகாதேவன் நண்பர்களால் நடத்தப்பட்டு வந்த பஜன், தற்போது திரு. ராமகிருஷ்ணன் நடத்தி வரும் தெய்வங்களின் கல்யாணம் வரை வளர்ந்து வந்திருக்கிறது. பார்மகுடியில் பால விஹார் என்ற அமைப்பின் மூலம் கீதை, உபநிடதங்கள் வகுப்புகள் நடத்தி, பக்தி உணர்வை வளர்த்து வருகிறார்கள் டாக்டர் இராமச்சந்திரன் குழுவினர்.

கோவா வாழ் தமிழர்களுக்கு நீண்ட நாட்களாக ஒரு பெருங்குறை இருந்து வருகிறது.

கோவாவில் மற்ற மாநிலங்களின் சுற்றுலாத்துறை அலுவலகங்கள் இயங்கி வரும் போது, ஏன் நம் தமிழ்நாடு மட்டும் பின் தங்கி இருக்க வேண்டும் என்பதுதான் அது. இதன் மூலம் நம் இரு மாநிலங்கள் இடையே கலாச்சார, வாணிபப் போக்குவரத்து வலுவடைய வேண்டும் என்பது அவர்கள் விருப்பம். கைவினைத் திறன் மிகுந்த ''பூம்புகார்'' கிளைக்கும் நல்ல வரவேற்பு இருக்கும். இது பற்றித் தமிழ்ச் சங்கம், தமிழக அரசுடன் அவ்வப்போது தொடர்பு கொண்டு வருகிறது. தமிழக அரசுதான் ஆவன செய்ய வேண்டும்.

— கே. ஆர். இராதாகிருஷ்ணன்.

தொழிலா, கோவா அரசு உதவி செய்யும்!

* 1961—இல்தான் கோவா சுதந்திரம் அடைந்ததால், இந்தியாவின் இரண்டு ஐந்தாண்டுத் திட்டப் பயன்களைக் கோவா பெற முடியாமல் போய்விட்டது. எனவே கோவா தொழில் ரீதியாக மிகவும் பின்தங்கிய மாநிலம் என அறிவிக்கப்பட்டது.
* சுதந்திரமடையுமுன் கோவாவில் இருந்த மொத்த தொழிற்சாலைகள் நாற்பது. இப்போது சுமார் மூவாயிரத்து நூற்று நாற்பது.
* கோவாவில் இப்போது 56 ரப்பர் ஃபாக்டரிகள். சுதந்திரமடையுமுன்பு ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு.
* கோவாவில் மொத்தம் 12 தாலுகாக்கள். ஒவ்வொரு தாலுகாவிலும் ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளி இருக்கிறது. (I. T. I.)
* ஒன்பது தாலுகாக்களில் தொழிற்பேட்டை (இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்) இருக்கிறது.
* தொழிற் பயிற்சி பெற்ற கோவா மக்கள் வெளிநாடு போய் விடுவதால் உள்ளூரில் வேலைக்கு ஆள் இல்லை.
* எந்தத் தொழிலுக்கும் உண்டான இயந்திரங்களை வாங்க, (இந்திய இயந்திரம் என்றாலும் சரி, வெளிநாட்டு இயந்திரம் என்றாலும் சரி) அரசு 25% உதவிப் பணம் அளிக்கிறது.
* கோவாவில் முன்பு கப்பல் உடைக்கும் தொழில் நடைபெற்றது. இப்போது அது அரசால் நிறுத்தப்பட்டுள்ளது. காரணம், கப்பலை உடைக்கும் போது அதில் இருக்கும் எண்ணெய் போன்ற கழிவுகள் நதி நீரில் கலக்கும் என்பதால்.
* போர்க் கப்பல்கள் கோவாவில் உருவாக்கப்படுகின்றன.
* கோவாவில் எந்தத் தொழிலை வேண்டுமானாலும் தொடங்கலாம். ஆனால் சுற்றுப்புற சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் தொழில்களுக்கு மட்டும் அனுமதி கிடையவே கிடையாது.

—இவையெல்லாம் மாநிலத் தொழில் மையத்தின் பொது மேலாளர் என். ராஜசேகரன் (தமிழர்) தந்த தகவல்கள்.

* ராஜசேகரன்.



பாக்யராஜ் பதில்கள்



எம். பாத்திமா, திருநெல்வேலி.

* உங்களிடம் கதை கூற வரும் புதிய நபரிடம் பொறுமையாகக் கதை கேட்பீர்களா? அல்லது அவர்களிடம் கதை கேட்காமலேயே அனுப்பி விடுவீர்களா?

* பாத்திமா அவர்களே!

ஒரு காலத்துல நானும் அப்படி ஒரு படை எடுப்புல இருந்தவன்தான். அப்ப நான் போன ஒவ்வொரு இடத்துலயும் ஒவ்வொரு மாதிரியான மரியாதை கெடச்சுது. அந்த நிலைமை இப்ப என்கிட்ட வர்றவங்களுக்கு இருக்கக் கூடாதுங்கிறதுல ரொம்பக் கவனமா இருக்கேன்.

கதை கேட்கறதுக்கு முன்னால சில பொது விஷயங்களைப் பத்திப் பேச்சு குடுப்பேன். அதை வச்சு அந்த ஆளோட தரத்தை ஓரளவு புரிஞ்சுக்கிட்டு, கதை கேட்கலாமா, வேண்டாமான்னு முடிவு பண்ணுவேன். பல நேரங் அதே என் படம் முடிஞ்சு வர்றவங்களைப் பாருங்க ஏறக்குறைய ஒரே சுருதியில இருப்பாங்க. அதாவது சிந்திக்கிற அவசியம் இருக்காது!

வி. சிவமோகன்ராம், சத்தியமங்கலம்.

* இந்தியாவிலேயே சிறந்த திரைப்பட நடிகர் விருது தங்களுக்குக் குடியரசுத் தலைவர் அவர்களால் அளிக்கப்பட வேண்டும் என்பது என் ஆசை. நிறைவேறும் நாள் எப்போது?

* சிவ சிவா!

4 குதிரை ஓடும்போது அதுல முதல்ல வர்றதுக்கு பிரைஸ் குடுக்கலாம்.

ஒரு குதிரை — ஒரு முயல் — ஒரு மான் — ஒரு கன்னுக்குட்டி இப்படி நாலு ஓடினா அந்தப் போட்டியே ஒரு மாதிரியா இல்லே? பல பாஷைகள்ல பல படம்; அதுல ஒருத்தர் சிறந்த நடிகர்! எப்படி?

என். செந்தில்குமார், மயிலாடுதுறை—1.

* உங்களது டைரக்ஷனில் உருவாகும் 'ஒரு கைதியின் டைரி' இந்திப் பதிப்பில் திறமையிருந்தும் கமலை நிராகரித்ததேன்?

* மயிலாடுதுறைக்காரரே!

நீங்க 'பேச்சலரா?' 'பேமிலிமேனா?' "நாங்க மட்டும் சின்ன வயசுல இருந்து என்ன சினிமா பாட்டா பாடிட்டு இருக்கோம்?"

—இது அவுங்க. இப்படிப் பிரச்னை வலுவாயிடுச்சு!

தேவஸ்தானத்தில கல்யாணத்தை வச்சது உங்க தப்பு. மெஜாரிட்டி அவுங்க பக்கம். நம்ப ஊரு ஐயருக்கு நீங்க ஒருத்தர் மட்டும் வக்காலத்து வாங்கி என்ன பண்றது?

பாத்தாரு நம்ப ஐயர், எதுக்கு வம்புன்னு நல்ல மனசோட அட்சதையைக் கையில எடுத்து ஆசீர்வாதம் பண்ணிக் கல்யாணத்தைச் சுபமா முடிக்கறாரு.

அடுத்த தடவை கொஞ்சம் செல்வாக்கோட நீங்க போயி உங்க தம்பி தங்கச்சி கல்யாணத்துக்காக தேவஸ்தானம் கேக்கும் போது முதல் கண்டிசனே 'நம்ப ஐயரும் அவசியம் மந்திரம் சொல்லுவாரு'ன்னு போடுங்க. அப்புறம் என்ன ஆகுதுன்னு பார்ப்போம்!

ஆர். பார்த்தசாரதி, சென்னை—91.

* நடிப்பு, டைரக்ஷன், கதை வசனம் என்று எல்லாவற்றையும் நீங்களே கவனிக்கிறீர்களே, பணம் அனைத்தும் நமக்கே வரவேண்டும் என்ற எண்ணமா? மற்றவர்களுக்கு (புதியவர்களுக்கு) வாய்ப்பு அளிக்கக் கூடாதா?

* பணம் ஒண்ணுதான் முக்கியம்னு நினைச்சிருந்தா இத்தனை நாளு 'பாக்யராஜ்' எத்தனையோ படங்களில் நடிச்சு, எழுதி, இயக்கி சம்பாதிச்சு இருக்கலாம்.

பணம்கிறது 'சிற்றின்பம்'. ஜனங்ககிட்டே 'சபாஷ்' வாங்கறது 'பேரின்பம்.' உண்மையான தகுதி உள்ளவங்க வந்தாங்கன்னா அதையும் நான் பங்குபோட தயாரா இருக்கேன்.

கதிரேசன், மதுரை—1.

* நீங்களும் ஏன் ஒரு பெரிய ஆர்ட் பிலிம் எடுக்கக் கூடாது? அப்போதுதானே தேசிய அளவில் உங்கள் ஆழத்தை மக்கள் உணர முடியும்?

கள்ல என்னைப் பல பேரு பேச்சுல அசத்திட்டுக் கதையில 'அசடு' வழிய வச்சுரூங்க.

ராணி பிரியதர்ஷினி, பொள்ளாச்சி—6.

* சார்! நீங்க சாதாரணமான நிலைமைல இருந்து அசாதாரணமான நிலைக்கு உயர்ந்திருக்கீங்க. இன்னும் அந்தச் சாதாரணமான நிலைமையை இதயத்தில் ஓரிடத்தில் வைத்திருக்கிறீர்களா? அல்லது மாறிவிட்டீர்களா?

* சகோதரி, உங்க பேரு ராணி பிரியதர்ஷினி, ஆனா உங்களைச் சுத்தி இருக்கிறவங்கள்ல சில பேரு ராணின்னு கூப்பிடலாம், சிலர் பிரியான்னு கூப்பிடலாம்; சிலர் தர்சினின்னு கூப்பிடலாம். ஆனா நீங்க ஆளு ஒண்ணுதான். பாக்யராஜோட வளர்ச்சி, இமேஜ், சூழ்நிலை, பொசிஷன் எப்படி மாறினாலும் பாக்யராஜ் பழைய பாக்யராஜ்தான்.

டில்லிக்கு ராஜா அய்தே கூட
தல்லிக்கு பிட்டனே!

கோடை சேகர், கோடைக்கானல்.

* சிந்தனைக்குத் தேவை சிரிப்பா? சோகமா?

* 'சிந்தனை'க்குத் தேவை எதுங்கறதைவிட, 'காரணம்'... இல்லே...

'தூண்டுகோல்' எதுங்கிறது இன்னும் கொஞ்சம் பொருத்தமாக இருக்கும்.

சூழ்நிலையோட பாதிப்புத்தான் சிந்தனைக்கு ஆரம்பம்.

இது எப்படி என்னன்னு விளக்கினா பெரிய கட்டுரை ஆயிடும். சின்ன உதாரணமா சொல்லணும்னா R. C. சக்தி டைரக்ஷன்ல லட்சுமி நடிச்ச படம் ஓடுது. அந்தத் தியேட்டர் வாசல்ல நின்னு படம் முடிஞ்சு வர்றவங்க மொகங்களைப் பாருங்க... ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மாதிரியா ஆயிரத்தெட்டு யோசனையில வருவாங்க. எனக்குத் தெரியலே. ஒரு உதாரணத்துக்கு நீங்க 'பேச்சிலர்னு' வச்சுக்குவோம். உங்களுக்கு நாளைக்குத் திருப்பதியில கல்யாணம்.

உங்க ஊரு ஐயர் ரொம்ப பழக்கமானவரு. உங்க கல்யாணத்துக்கு அவருதான் ஓமம் வளர்த்து மந்திரம் சொல்லணும்னு ஆசைப்படுறீங்க. ஆனா திருப்பதி தேவஸ்தானத்து ஐயருங்க,

''நாங்கதான் ஓமம் வளர்த்து மந்திரம் சொல்வோம்னு'' சொல்றாங்க.

''நம்ப ஐயர் சின்ன வயசில இருந்து பழக்கம். நல்லா மந்திரம் சொல்லுவார்'' — இது நீங்க.

* நண்பா!

நான் யானைக்குக் கோமணம் கட்ற ஆளு. கொசுக்கு முண்டாசு கட்றது நமக்கு ஒத்து வராது. கொஞ்சம் கஷ்டம்.

இரணியல் 'கலே.' சென்னை—57.

* எதிர்ப்பு என்பது 'நடைகல்' அல்ல 'படிக்கல்' என்று கவிஞர் வைரமுத்து சொல்கிறாரே. உங்கள் அனுபவம் எப்படி?

* என்னைப் பொறுத்தவரை 'எடைக்கல்': நான் வளர வளர அதுவும் சரிசமமாகக் கூடிக் கொண்டே இருக்கிறது.

ஹிந்தி பதிப்பில் கமலே நிராகரித்தது ஏன்?



வட்ட மேஜை



குட்டிக்கதை ரிப்போர்ட்

* கப்பல்கள் காணாமல்போன மர்மத்தைக் குட்டிக் கதையாக விவரித்த விதம் அருமை!

ஆர். விஜி, அரகண்டநல்லூர்.

பாராட்டும் பணிகள்

* 'திருவண்ணாமலைத் தண்ணீரால்உயிர்ப் பலிகள்' 'சோளிங்கரில் போலீஸ் அட்டகாசம்' என்று பத்திரிகைகளில் இருட்டடிப்புச் செய்யப்பட்ட விஷயங்களை வெளி உலகுக்கு வெளிக் கொணர்ந்த தங்கள் பணி பாராட்டத்தக்க ஒன்றாகும்.

ப. சுப்பிரமணியன், நீடாமங்கலம்.

* "சோளிங்கரில் போலீஸ் அட்டகாசம்" என்று வெளியிட்டுள்ளீர்கள். இதில் 'முன்னாள் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஏ. எம். வேலு எந்த வித உதவியையும் பொது மக்களுக்குச் செய்யவில்லை' என்று அரசியல் காழ்ப்புணர்ச்சியாக யாரோ எனக்கு விரோதியானவர்கள் உங்கள் நிருபர்களிடம் கூறியிருக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சி நடந்த தேதியில், 20.7.85 முதல் 30.7.85 தேதி வரை என் தொழில் சம்பந்தமாக ஆந்திர மாநில தலைநகர் ஹைதராபாதில் தங்கியிருந்தேன். திரும்பி வந்த பிறகு, விசாரித்துச் சமரசம் செய்ய ஏற்பாடு செய்துள்ளேன்.

ஏ. எம். வேலு, சோளிங்கர்.

சுலபமான வழி

* கருப்புப் பணம் பற்றிய தலையங்கம் படித்தேன். கருப்புப் பணத்தை ஒழிக்க வேறு ஒன்றும் செய்ய வேண்டாம். எல்லா அரசியல்வாதிகளின் வீடுகளிலும் சோதனை போட்டால்போதும். அப்படிக் கிடைக்கும் கருப்புப் பணத்தின் மூலம் வரும் ஐந்தாண்டுகளுக்கு வரியே போடாமல் அரசாங்கம் நடத்த முடியும்!

ரவிரமணா, ஈரோடு.

வருத்தம் போக்கினீர்!

* வாசகர்கள், 'கூட்டத்தில்கேட்டவை' அனைத்தும் அருமையாகவும் சுவையாகவும் இருந்தன. நாங்கள் நேரடியாகக் கேட்க முடியாமல் போனவற்றைப் பிரசுரித்தமைக்கு நன்றி.

பா. நிரஞ்சன், இளங்கார்குடி.

குழப்பியதற்கு சபாஷ்!

* 'உன்னைத் தேடி வருவேன்' படத்தில்ஸ்ரீதர் குழப்பியிருக்கிறாரோ இல்லையோ உமது விமர்சகர் எங்களை ஒரு குழப்புக் குழப்பி நாங்கள் பார்த்தது அந்தப் படம்தானா என்று ஆச்சரியப்பட வைத்துவிட்டாரே! சபாஷ்!

ஜெ. முகம்மது பாரூக், நெல்லிக்குப்பம்.

கருப்புப் பணத்தை ஒழிக்க ஒரு சுலபமான வழி!

எங்கள் குடும்பமா அப்படி?

* திருச்சி மனோகரனைப் பற்றி முசிறிப்புத்தன் கூறியதாக வெளிவந்த செய்தியை ஸ்பாட்லைட் பகுதியில் படித்தேன். எங்கள் குடும்பத்தில் கள்ள மார்க்கெட்டில் சினிமா டிக்கெட் விற்கும் நிலையில் யாரும் இல்லை. நான் மத்திய அரசின் பாதுகாப்புத் துறையில் அஸிஸ்டெண்ட் ஸ்டோர்கீப்பர். அடுத்த சகோதரன் போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுநர். என் தந்தை ரயில்வேயில் 330 ரூபாய் அடிப்படைச் சம்பளத்தில் வேலை பார்த்தார். இந்த நிலையில் எங்கள் மனோகரனைப் பற்றிய தவறான செய்தியை முசிறிப்புத்தன் கூறியிருப்பது வருத்தத்திற்குரியது. அதோடு அவன் தி.மு.க. இளைஞர் அணியின் செயற்குழு உறுப்பினராக இருந்தான் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரா. மோகன்ராஜ், திருச்சி–16.

ஏன் முன்னேற மாட்டார்கள்?

* பெண்களுக்குப் பெரிய அளவில் சலுகைகள் கொடுத்துக் கொண்டிருக்கும்போது, அவர்கள் செய்த இந்தச் சாதனையில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமேயில்லை. ஆச்சரியப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக் கொண்டதுதான் அவர்களுக்கு இழிவு தரும் செயலாகும்.

என். செந்தில்குமார், மயிலாடுதுறை.

* எழுவரின் அருமையான கருத்துக்களுடன் மலர்ந்த கட்டுரை அருமை. தங்கள் பேட்டியின் மூலம் பெண்களின் நிலை கண்டிப்பாக முன்னேறியிருக்கிறது என்பது முற்றிலும் உண்மை.

நா. மீனாக்ஷி, திருநெல்வேலி.

அரசு என்றால் அரைகுறைதானா?

* எல்லா ஏழைக் குழந்தைகளுக்கும் இலவசமாகப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுமென அரசு அறிவித்திருந்தது. ஆனாலும் தற்போது ஒவ்வொரு பள்ளியிலும் இலவசமாகப் பெறத் தகுதியுடைய ஏழைக் குழந்தைகளில்பாதிப் பேருக்குக்கூட பாடப் புத்தகங்களையும், சீருடைகளையும் வழங்கவில்லை. அவற்றை வழங்குவதற்காகப் பெற்றுக் கொண்ட ஆசிரியர்களும் எந்த ஏழைக் குழந்தைக்கு இல்லையென்று சொல்லத் தெரியாமல்குழம்பிக் கிடக்கிறார்கள். புத்தகங்களும், சீருடையும் கிடைக்காத குழந்தைகளின் ஏமாற்றத்தையும் சொல்லி மாளாது.

இனியாவது அரசு திட்டங்களை அறிவிக்கும் முன் அவற்றைப் பூரணமாகச் செயல்படுத்த முடியுமா என்று ஆராய்ந்து அறிவிப்பது நல்லது. ஒரு வேளை அரசின் திட்டங்கள் அனைத்துமே அரைகுறையாகத்தான் இருக்குமோ?

சுப்புலெக்ஷ்மி சம்பத்குமார், இராசிபுரம்.

(கடைசிக் கடிதம் பரிசு பெறுகிறது)

சூடாமணி சூடுகிறார்கள்



ஆர். வேதவல்லி.



மாண்டலின் சீனிவாசன்.

> இந்த ஆண்டு கிருஷ்ணகான சபை சங்கீத சூடாமணி விருதை திருமதி ஆர். வேதவல்லிக்கு வழங்கிக் கௌரவிக்கிறது. இளைஞர் ஆண்டானபடியால் மாண்டலின் சீனிவாசனுக்கு ஒரு சிறப்புக் கௌரவமாக சங்கீத சூடாமணி பட்டம்!

விருது பெற இருக்கும் மாண்டலின் சீனிவாஸைச் சந்திக்கப் போன போது, ட்யூஷன் மிஸ்ஸிடம் மும்முரமாக ஆங்கிலப் பாடம் கற்றுக் கொண்டிருந்தார்.

"என்ன கேட்கப் போகிறீர்கள்...? சீக்கிரமாகக் கேட்டுவிடுகிறீர்களா...? டீச்சர் காத்துக் கொண்டிருக்கிறாரே..." என்று பறந்தார் சீனிவாஸ்.

"எம். ஜி. ஆர். முன்னிலையில் சமீபத்தில் வாசித்தீர்கள் போலிருக்கே?"

தகப்பனார் சத்தியநாராயணா, "ஆமாம்; நேற்று கன்னிமாரா ஓட்டலில் சட்டசபை அங்கத்தினர்களுக்கு முதல்வர் விருந்து கொடுத்து முடிந்ததும் வாசித்தான்..." என்றார்.

"முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு என்மேல் வெகு பிரியம். என்னை ரொம்பப் பிடிக்கும்!" என்றார் சீனிவாஸ்.

உடனே 'பதில் சரிதானா?' என்று கேட்பது போல் அப்பாவை ஒரு பார்வை... மேடையில் வாசிக்கும் போதும் இப்படித்தானே என்று எண்ணிக் கொண்டேன்.

ஊரில் இருந்தால் தினசரி நான்கு மணி நேரத்துக்குக் குறையாமல் வாசிக்கிறார். காலை ஐந்து மணிக்கு எழுந்து விட்டால் பிறகு பயிற்சிதான். இடது கைவிரல் நுனிகள் காய்ந்து போய் இருக்கின்றன வாசித்து வாசித்து. அதற்குத் தேங்காய் எண்ணெய் தான் போடுவாராம்.

"ட்யூஷனில் என்னென்ன பாடங்கள் கற்றுக் கொள்கிறீர்கள்?"

"இங்கிலீஷ், மாத்ஸ், தமிழ்... நான் போகட்டுமா? என்னை மன்னிக்க வேண்டும். டீச்சர் காத்துக் கொண்டிருக்கிறார்..."

1981—ல் கிருஷ்ணா மாவட்டத்திலுள்ள குடிவாடாவில் முதல் கச்சேரி செய்த சீனிவாஸ் இந்த நாலு வருஷத்துக்குள் நூற்றுக் கணக்கான கச்சேரிகள் செய்தாகிவிட்டது. இந்த செப்டம்பரில், பாரிசில் இந்தியக் கலை விழாவில் வாசிக்கப் போகிறார். போன வருடமே பாதி உலகம் சுற்றியாயிற்று!

திருமதி வேதவல்லி அவர்களைச் சந்தித்த போது—

"எனக்கு முதலில் கிடைத்த விருது: திவ்ய கான ப்ரவீணா. 1971—ல் தேசிக தர்சன சபை வழங்கியது. வேதாந்த தேசிகரின் 700—ஆவது பிறந்த தினத்தின் போது, அவரது சம்ஸ்கிருத, தமிழ் சுலோகங்களுக்கு மெட்டமைத்து சுமார் ஒன்றரை மணி நேரம் பாடினேன். பட்டத்தை வழங்கியவர் என் குருநாதர் ஸ்ரீ முடிகொண்டான் வெங்கட்ராமையர். குருவே ஒரு சிஷ்யைக்கு விருது வழங்குவது விசேஷமல்லவா?" என்றார்.

"உங்கள் இசை வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சி?"

"கோவை வானொலியில் காலை ஏழு முதல் ஏழரை வரை 'நாளொரு ராகம்' நிகழ்ச்சி வழங்கினார்கள். நான், திரு. எஸ்.வி. பார்த்தசாரதி, டாக்டர் எஸ். ராமநாதன் பங்கு கொண்டோம். இந்த நிகழ்ச்சிக்கு ஆயிரத்துக்கு மேல் பாராட்டுக் கடிதங்கள் வந்தன!"

"இந்த கோகுலாஷ்டமி விழாவில் உங்கள் சிறப்புத் திட்டம்?"

"பஜனை உற்சவ சம்பிரதாயத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக இருக்கிறேன். அதாவது தென்னிந்திய பஜனை சம்பிரதாயம். பஜனை உற்சவ சம்பிரதாயத்தில் புதுக்கோட்டை சம்பிரதாயம், வரகூர் சம்பிரதாயம், சாலியமங்கலம் பஜனோத்சவம் என்று பல வகைகள்... உங்களுக்குத் தெரியுமா? நல்ல காரியம் செய்ய ஆரம்பிக்கும் போது நாம் மஞ்சள் அரைப்பது போல், அந்தக் காலத்தில் அரசர்கள் எல்லாம் முத்துக்களையும் பவழங்களையும் உரல்களில் இட்டு நெல் குத்துவது போல் குத்துவார்களாம். இதை 'முத்துக் குத்துவது' என்கிறார்கள். பஜனை உற்சவ பத்ததியில் இது சொல்லப்பட்டிருக்கிறது! அதிசயமாய் இருக்கிறதா?"

மேற்கொண்டு விவரங்கள் — கிருஷ்ண கான சபையில் கேட்க!

—சாருகேசி.



• வாஸ்கோ மீனவப் பெண்கள்.

மீனவர் குடும்பத்தில் ஒரு நல்ல வழக்கம். ஆண்கள் அயராமல் வலை வீசி மீன்களைப் பிடித்துக் கொண்டு வர வேண்டும். கரைக்குக் கொண்டு வந்து சேர்ப்பதோடு அவர்கள் பங்கு ஓவர். வியாபாரம் பேசும் சாமர்த்தியம் அவர்களுக்குக் கிடையாது. அது முழுக்க முழுக்கத் தாய்மார்களின் கோட்டை. கோவாவின் அத்தனை மீன் மார்க்கெட்களையும் பெண்களே ஆக்ரமித்திருக்கிறார்கள். எப்பேர்ப்பட்ட கொம்பனாயிருந்தாலும் இந்தப் பெண்களிடம் வாலாட்ட முடியாதாம்.

வாஸ்கோ மீனவர் குடியிருப்பை எட்டிப் பார்த்தோம்.

புருஷன் புடிச்சாரணும்...

நூற்றி நாற்பது கிலோமீட்டர் நீளத்திற்கு கோவாவில் சமுத்திர தாவணி. இந்த உப்பு நீர்ப் பரப்பில் அள்ளியெடுக்கப்படும் மீன்களால்தான் மீன் துறையின் தொண்ணூறு சதவீத வருமானம்.

ஸிட் கோடி (Xit-Coddi) எனப்படும் அரிசி மீன் கலவை உலகத்து ஜனங்களின் பெரும்பாலான நாக்குகளில் எச்சில் ஊறச் செய்யும் ஒரு ஸ்பெஷல் ஐட்டம். கோவாவில் இது 'தண்ணி பட்டபாடு'. நிஜம்தான். 'தண்ணி' எத்தனை முக்கியமோ, அத்தனை முக்கியம் இந்த உணவும் அவர்களுக்கு. பண்டிகைக் காலங்களில் மீன் சாப்பிடாமல் இருப்பது ஆண்டாள் விரதத்தை விட தீவிரமானது என்று இந்துக்கள் நினைக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

மீன் பிடிப்பில் எண்பது சதவீதம் ருசியான மாக்ரேல் வகை. ப்ரான் (இந்தி நடிகர் இல்லை) வகையில் ஏற்றுமதி எக்கச்சக்கம். பத்து கோடி ரூபாய்க்கு மேல் ப்ரான் ஏற்றுமதி வரவு.

மீன் வகை பிரதான வருவாயானதும், துடுப்பைத் தூக்கி எறிந்துவிட்டு மோட்டார் படகுகளை அதிகம் பயன்படுத்த ஆரம்பித்தனர். இப்போது கிட்டத்தட்ட எண்ணூறு இயந்திரப் படகுகள் கரைக்குத் திரும்பும்போது மடி நிறைய மீன்களை நிரப்பி வருகின்றன.

'வாங்க சார், தமிழ்தானே நீங்கோ?' என்று குரல் வந்ததும் தூக்கிவாரிப் போட்டது. திரும்பினால் சட்டை போடாத இளைஞர்கள்.

தமிழா! கோவா மீனவர் குடியிருப்பிலா!

''என் பேரு சுப்ரமணி'' என்று அந்த இளைஞர்களில் ஒருவர் அறிமுகம் செய்து கொண்டார். ''நாங்க நெறய பேரு தமிழுங்க இருக்கோங்க'' என்றார்.

கோவா கடற்கரையெங்கும் இவர்கள் சிதறியிருக்கிறார்கள். கடின உழைப்புக்கு இவர்கள் அஞ்சுவதில்லை. திடகாத்திரமான உடம்பே சாட்சி நின்றது. மார்க்கெட்களில் தமிழ்ப் பெண்களும் கண்ணில் இடறினார்கள்.

தொழில் முறைப் போட்டி இருந்தால் சமாளிக்கலாம். 'நீ தமிழ், நான் கோவன்' என்று முறுக்கிக் கொண்டு நின்றால்? மார்க்கெட்டில் சந்தித்த தமிழ்க் கமலா பொருமிச் சொன்னது:

''ரெண்டு பேத்துக்கும் நடுவில எப்பவுமே சண்டை உண்டு. நேத்திக்கு எங்க குடிசைங்களையெல்லாம் எரிச்சு நாசமாக்கிட்டாங்க அவங்க. பதிலுக்கு இன்னிக்கு எங்க ஆளுங்க அவங்க காலனியைத் தான் தூளாக்கிடப் போறோம்.''

சமுத்திர ராணி பொதுவாய் இருந்தாலும் இந்த சாதி இன பேதங்கள் மட்டும் அலைகள் ஓயும்வரை ஓயப் போவதில்லையோ! பெருமூச்சோடு திரும்பினோம்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran


ஸன்ரைஸ் ஃப்ளாஸ்க் அன்பளிப்பு!
இலவசம்!
இந்த தனிச்சிறப்பான ஸன்ரைஸ் ஃப்ளாஸ்க், 6 காலியான 200 கிரா. ஸன்ரைஸ் ரீஃபில் பேக்குகளிற்கு பதிலாகக் கிடைக்கும்.
இப்போது, உங்களுக்குப் பிடித்தமான ஸன்ரைஸ் காப்பியை நீங்கள் எங்கே வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு போகலாம், அதற்கே உரிய அழகான ஸன்ரைஸ் ஃப்ளாஸ்கில்! நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இவ்வளவே—6 காலியான 200 கிரா. ஸன்ரைஸ் ரீஃபில் பேக்குகளை சேர்த்து உங்களுடைய டீலரிடம் கொடுக்கவும். ஒரு வாரத்திற்குள் அவருடைய கடையில் ஒரு ஸன்ரைஸ் ஃப்ளாஸ்க் உங்களுக்காகவே காத்துக் கொண்டிருக்கும். நீங்கள் அடுத்தமுறை போகும்போது அதைப் பெற்றுக் கொள்ளலாம். விஷயம் எத்தனை எளிமையானது, பார்த்தீர்களா! ஆகவே, இன்றே உங்களுடைய ரீஃபில் தொகுப்பை சேர்க்கத் தொடங்குங்கள்.
இந்த அன்பளிப்பு பின்பக்கம் ★ இருக்கும் பேக்குகளிற்கு மட்டுமே.
Nestlé sunrise
sunrise
instant
RefillPack
200g
Nestlé
ஸன்ரைஸ்
இன்ஸ்டன்ட் காப்பி-சிகரி ப்ளெண்ட்
முந்துங்கள்!
இந்த அன்பளிப்பு ஃப்ளாஸ்குகளின் சரக்கு தீரும்வரையே செல்லும்.
அம்மாவின் அந்த முதல் காப்பியின் புத்துணர்ச்சியூட்டும் நறுமணத்துடன்.
FSL-8682 Tam

REGISTERED No. 4392
Registered as a Newspaper in Sri Lanka

ஹைகூ...ஜப்பானிய மொழியிலே கவிதை:
உங்கள் மேனியிலே ஒரு உணர்வின் பிரதிபலிப்பு.



ஹைகூ
சேலைகள்

ஹைகூ...பாம்பே டையிங் புதுப்படைப்பு. புதுக்கவிதை போல்
நேர்த்தியான் புதுவகை க்ரேப் டி ஷீன். ஜாக்கார்ட். ஜ்யார்ஜெட்.
தென்றலென மேனியிலே தவழும் மென்சுகம்—எதுகையும் மோனையும்
போல்...உங்கள் எழிற்கோலமும், இவற்றின் வண்ண ஜாலமும். ஜப்பானிய
ஹைகூ கலைவடிவம் பிறப்பித்த எழிற்கோல துணிவகைகள், பாம்பே
டையிங் படைக்கும் ஹைகூ உங்கள் மேனியிலே புதுக்கவிதை!

பாம்பே டையிங்

BDM-1889